# கல்லறைக் குயில்

கே. ஜி. இராதாமணாளன்

கிடைக்குமிடம்:

மலர் நிலையம்

பிராட்வே, : : சென்னை-1

முதற் பதிப்பு அக்டோபர் 53

உரிமை ஆசிரியருக்கு


விலை ரூபாய் இரண்டு

வெளியிடுவோர் :

இளங்கோ பதிப்பகம்

மாயூரம்.

# குயிலின் குரலிலே

இங்கிலாந்து நாட்டின் மாபெருங் கவிஞன் லார்ட் பைரனின் வாழ்க்கையே மாறுவதற்கு ஒரு பெண் காரண மாக இருந்தாள்! ஐந்தாண்டுகளுக்கு முன் கவிஞனின் காதலை அந்தக் காரிகை ஏற்றுக்கொண்டிருந்தால், அவன் ஆபாசக் களியாட்டங்களில் ஈடுபட்டிருந்திருக்கமாட்டான்.

மலரடி மங்கையரின் மையலில் சிக்கி, ஆடலழகிகளின் அணைப்பில் சொக்கி, கோமளவல்லிகளின் கொஞ்சு மொழி களில் மயங்கி, புன்சிரிப்புக்காரிகளின் போகக் களத்தில் திளைத்துக் கொண்டிருந்தான். அதே நேரத்தில் பெற்ற அன்னையின் அடாத செயல்களும், மிதமிஞ்சிய கடன் தொல்லையும், பொருமைக்காரர்களின் தாக்குதலும், அவனை வாட்டி வதைத்தன. இன்பம்—துன்பம்! இவற்றிற் கிடையில் சிக்கித் தத்தளித்தான். பைரன், ஆங்கில மொழியின் அற்புதமான கவிக்குயில். அந்தக் குயிலின் குர லிலே மயங்கினவர்களில் நானும் ஒருவன். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உன்னத கவிதைகளைத் தந்த அவ னைப் பற்றிய நூல், தமிழில் வர வேண்டுமென்பது என் ஆசை. அந்த ஆசையின் விளைவே இந்தக் "கல்லறைக் குயில்". அவனது கவிதைகளைப்பற்றி, தனி நூலொன்று எழுத எண்ணியிருக்கிறேன். ஆகவே இந்தச் சுவடியில், அவனது கவிதா திறமையையும். காவிய ரசத்தையும் விளக்காமல்—சுவையான வாழ்க்கை நிகழ்ச்சிகளை மட்டுமே தந்திருக்கிறேன்.

இந்நூல் எழுதுதற்கு ஜூலியா மானரிங் எழுதிய "உணர்ச்சி வயப்பட்ட கவிஞன்" என்ற ஏடு, எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. பீடர் க்யூன்னெல் இயற் றிய, "பைரனின் புகழ்மிக்க ஆண்டுகள்" என்ற நூலி லிருந்தும், சில குறிப்புகளைப் பயன்படுத்திக் கொண்டிருக் கிறேன்.

இந்நூலை அழகிய முறையில் வெளியிட்டிருக்கும் நண்பர் பி. எஸ். இளங்கோ அவர்களுக்கு என் நன்றி.

**இராதாமணாளன்**

## குரலின் இனிமையிலே!

கும்மிருட்டு அரசாளும் மனக் குகைகளிலே சோக நாடகமாடும் மனித ஜாதியை, எழில் ஊஞ்சலாடும் இலக்கிய உலகுக்கு இட்டுச் செல்பவன் கவிஞன். கிடைக்கக் கூடாத ஒன்றைப் பற்றி அவன் நெஞ்சுருகப் பாடிய பாட்டின் இனிமை கால வெள்ளத்திலே கலந்தோடி, மனிதனது உரமேறிய செயல்களுக்குப் பின்னணியாய் எதிரொலிக்கிறது.

மனித இனம் என்றும் கடமைப்பட்டுள்ள கவிஞர் குழுவிலே, லார்டு பைரன் பெயர் பெற்றவன்; இன்பத்தை, இன்பம் தந்த மாளாத சுகத்தை, விம்மும் சொற்களாகக் கொட்டிவிட்ட நித்திய இளைஞன்; அழகன்.

அவன் வாழ்வில நிகழ்ந்த நிகழ்ச்சிகளை, அவன் காதல் விளையாட்டுக்களை, பெண்ணினத்தைப் பற்றி அவன் கொண்டிருந்த கருத்தை; உணர்ச்சி நிறைந்த நடையில் தந்திருக்கிறார் இராதாமணாளன். அவருக்கு எம் நன்றி.

கலைஞர் கருணாநிதியின் ஊக்கத்தில் விளைந்து, கடந்த ஆறு ஆண்டுகளாக நடக்கும் எங்கள் இலக்கியப்பணியில், இச்சிறு முயற்சியும் வெற்றி பெற்றது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். அவருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளோம்

அன்பு,

மாயூரம்
10–10–53

**பி. எஸ். இளங்கோ.**

# கல்லறைக் குயில்

## 1. தேயாத நிலவு

மெல்ல மெல்ல இருள் உலகை விழுங்க ஆரம்பித்து விட்டது. மேகக்கூட்டங்கள் வானில் மிதந்து செல்கின்றன. கருமேகங்களை விலக்கிக்கொண்டு, களிப்போடு நிலவு எட்டிப்பார்க்கிறது.

மலர்ச்சோலையிலிருக்கும் செடி கொடிகள், வெண்ணிலவின் ஒளிப் பிரவாகத்தில் மூழ்கும் மகிழ்ச்சியால், ஆடி அசைந்து தருகின்றன. அந்தச் சோலையில் ஒரு பளிங்குக்கல் ஆசனம். அந்த ஆசனத்தின்மீது பதினேழு வயதுடைய ஒரு வாலிபன் உட்கார்ந்திருக்கிறான். கையிலுள்ள ரோஜா மலரையும், வானிலுள்ள மதியையும் அவன் மாறிமாறிப் பார்க்கிறான்.

“இந்த ரோஜா, வாடி உதிர்ந்து காய்ந்துவிடும்! அந்த நிலவு, தேய்ந்து குறைந்து மறைந்துவிடும்! ஆனால் என் மேரி...........”

ஏதோ சிறு சப்தம் கேட்கவே, அவனது சிந்தனை தடைபடுகிறது. யாரோ இருவர் அவனைக் கடந்து

போய்க்கொண்டிருக்கின்றனர். அந்த நந்தவனத்தினுள் புகுந்துதான், பக்கத்திலிருக்கும் 'தேவாலயத்'திற்கு மக்கள் செல்லுவது வழக்கம்.

"என்னைக்கண்டால், மேரி முகம் மலர்கிறாள்! புன்னகை செய்கிறாள்! அன்பாகப்பேசி, ஆசை வெறியைத் தூண்டிவிடுகிறாள்!......ஆனால்.........அருகில் நெருங்கினால், அகன்று நிற்கிறாள்! கையைப்பிடித்தால், உதறிக்கொள்கிறாள்!.........ஏன்?............என் உள்ளத்தை அவள் தெரிந்து கொள்ள வில்லையா? என் காதலை, அவள் அறிந்துகொள்ளவில்லையா?.........."

ரோஜா மலரை முகர்ந்துகொண்டே அந்த வாலிபன், நிலவைப் பார்க்கிறான். சிந்தனை அலைகள் அவன் முகத்தில் பரவியிருக்கின்றன. மழைத்துளிகள் இரண்டொன்று, அவன் முகத்தின்மீது படுகின்றன. ஆசனத்தைவிட்டு எழுந்திருக்கிறான். ஆகாயத்தைப் பார்க்கிறான். கருமேகங்களின் ஓட்டத்தால், சந்திரன் தெரிவதும் மறைவதுமாக இருக்கிறது. தூறல் ஆரம்பமாகிவிட்டது. சோலையிலிருந்தவர்கள், அவசர அவசரமாக வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். சிறிது நேரத்தில் அந்தப் பூந்தோட்டத்தில் ஆள் அரவமே இல்லை. தன்னந்தனியனாக அந்த வாலிபன் மட்டும், மழையில் நின்றது நின்றபடியே இருக்கிறான். அவன் ஏன் இப்படி மழையில் நனைந்துகொண்டு நிற்கிறான்? அவனுக்கென்ன பைத்தியமா?

"மழையே! உன்னால் என் உடலைக்குளிரச் செய்ய முடியும்! ஆனால் என் உள்ளத்தை........"என்று முணு முணுத்துக்கொண்டே, பழையபடியே அந்தப் பளிங்குக் கல் ஆசனத்தின்மீது உட்கார்ந்துவிடுகிறான்.

கொட்டும் மழையால், அவன் கையிலிருந்த ரோஜா மலரின் இதழ்கள் அவ்வளவும் உதிர்ந்துவிட்டன. மேகமலைகள் நிலவை மறைத்துவிட்டன. பார்த்து அவன் ரசித்துக்கொண்டிருந்த பால் நிலவும், ரோஜா வும் இப்பொழுதில்லை. அவன் பார்வை ஒரே திசையில் நிலைத்து நின்றுவிட்டது. அப்படிக் கண் சிமிட்டாமல் பார்க்க அந்தத் திசையில் என்ன இருக்கிறது? அந்தத் திசையில் வரப்போகும் யாரையாகிலும் அவன் எதிர் பார்க்கிருனு? மாதா கோயிலுக்குச் சென்ற மான் விழியாள், அவ்வழியாகத்தானே திரும்பி வந்தாக வேண்டும்! ஆமாம், மேரி சாவொர்த் அணங்கைத்தான், அவன் எதிர்பார்த்து ஏங்கி உட்கார்ந்திருக்கிருன்.

மழை சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வருகிறது. அந்த வழியாகச் சிலர் போகவர ஆரம்பித்துவிட்டனர்.

அவன் எழுந்து நின்ருன். இன்னும் சிறிது நேரத் தில் மேரியும் வந்துவிடுவாள் அல்லவா?

"மேரி!"

"யாரது?"

"நான்தான், மேரி!"

"ஓகோ, பைரனு?"

லார்ட் பைரன், அகில உலகப் புகழ் பெற்ற கவிஞன் அல்லவா? அவனு அந்த வாலிபன்? ஆமாம், அவனே தான்! கவிதா மண்டலத்தில் சஞ்சரிக்க ஆரம்பிப்பதற்கு முன்னரே, பைரன் காதல் வானிலே பறக்கும் புருவாகி விட்டான். பதினேழு வயதாக இருக்கும் போதே அவன், பாவை ஒருத்தியின் அணைப்பிற்கு ஆசை

கொண்டான். இதழமுது சுவைக்க இச்சை கொண்டான். துல்லியமான காதல் தாகத்தால் துடி துடித்தான்.

மேரியைச் சந்திக்கும்போதெல்லாம், அவள் மீது தான் காதல் கொண்டுள்ளதைக் கூற வேண்டுமென நினைப்பான். ஆனால் ஏதோ ஒருவித பயம், அவனை அப்படிச் செய்ய முடியாமல் தடுத்தது. பல நாள் முயன்றும் பயனற்றுப் போயிற்று.

அன்று எப்படியாகிலும் துணிந்து, தன் காதல் உள்ளத்தை அவளுக்குத் திறந்து காட்டிவிட வேண்டுமென்று, முடிவு செய்து கொண்டான். மாதா கோயிலிலிருந்து அவள் திரும்பிவரும் வரைக்கும், மலர்ச் சோலையில் அவன் உட்கார்ந்திருந்ததற்குக் காரணம், அதுதான்.

"பைரன்! இதென்ன ஆடைகள் எல்லாம் ஈரமாகி விட்டிருக்கின்றனவே?" என்று கேட்டுக் கொண்டே, அவள் அருகில் வந்தாள்.

"மழையில் நனைந்தால் ஈரமாகாமல், காய்ந்து விட்டா இருக்கும்?" என்று சிரித்துக்கொண்டே அவன் பதிலளித்தான்.

"மழையில் நனைந்தால் உடலுக்காகாதே?"

"உள்ளத்தைப்பற்றி அக்கறை கொள்பவனே ஒழிய, உடலைக் குறித்து கவலைப் படுபவன் அல்ல நான்! இப்படி மழையில் நனைந்ததற்குக் காரணம் யார் தெரியுமா, மேரி?"

"யார்?"

"உன்னைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?" என்று சொல்லிக் கொண்டே, சிறிது தூரத்திலிருந்த ஒரு மேடையை நோக்கி நடந்தான். அவளும் பின் தொடர்ந்தாள். மேடையின் அருகே வந்ததும், அவள் முகத்தைப் பார்த்தான். அவளும் பார்த்தாள். உட்கார்ந்தான். அப்பொழுது மேகத் திரையைத் தள்ளிக்கொண்டு, நிலவு உலகை எட்டிப் பார்த்தது. குளிர்ந்த காற்று மெல்லென வீசிக்கொண்டிருந்தது.

"மேரி உனக்காக எவ்வளவு நேரம் காத்திருந்தேன் தெரியுமா?

"எனக்காகவா? ஏன்?"

"முக்கியமான ஒரு செய்தியை உன்னிடம் இன்று சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். இப்படி உட்காரு, மேரி!"

"மேடை ஈரமாக இருக்கிறதே!"

"ஆமாம் மேரி! இந்த மேடையைப் போல, உன் உள்ளத்திலும் ஈரமிருந்தால், வாழ்க்கையில் நான் எதையும் பொருட்படுத்தமாட்டேன்!"

"என்ன சொல்கிறாய்?......பைரன், ஏன் மயங்குகிறாய்?......முக்கியமான செய்தி என்றாயே, அது என்ன?"

"என் உள்ளத்தை நீ திருடிக் கொண்டாய்!"

"என்ன!"

"ஆமாம் மேரி, உன்னை நான் காதலிக்கிறேன்!"

இதைச் சொல்லி முடித்ததும், அவன் கால்கள் சில்லிட்டன. அவன் முகத்தைப் பார்த்துச் சிரித்து

விட்டு, அவள் அவ்வீடத்தைவிட்டுச் செல்லத் தொடங்கினாள். மேடையைவிட்டு அவன் துள்ளியெழுந்தான். போகும் அவளது பொற்கரத்தைப் பற்றினான்.

"மேரி, என் உள்ளம் உனக்குத் தெரியும்! உன்னைத் தவிர வேறு யாரையும் நான் மணம் செய்து கொள்ளப்போவதில்லை!"

"இதென்ன உளறல்?"

"உளறல் அல்ல, உண்மையைச் சொல்கிறேன், கண்ணே!"

"வேடிக்கையாக இருக்கிறது!"

"இதிலென்ன வேடிக்கை? நீ பெண்! நான் ஆண்! ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்வதில், என்ன அதிசயமிருக்கிறது?"

"பைரன்! என்னைவிட நீ வயதில் சிறியவன்! நான் உன்னை மணக்க முடியாது!"

"மேரி! நீ வேறொருவனை மணப்பதா? முடியாது, முடியவே முடியாது! உன்னை நான் கைவிடமாட்டேன், கண்ணே!"

அவளை இறுக அணைத்துக் கொண்டான். அவன் அணைப்பிலிருந்து விடுதலை பெற அவள் திமிறினாள். கழுத்தில் முத்தமிட்டான். கன்னத்தில் முத்தமிட்டான். செவ்விதழ்களில் முத்தமிடப் போகும் போது, சேல் விழியாள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவனது ஆசை வெறிக்கேற்றது போல, அணைப்பும் அழுத்தமாகவே இருந்தது. எனவே உடலைப் பிரித்துக் கொள்ள அவளால் முடியவில்லை.

"கண்ணே! என்னைக் கைவிடாதே! என் காதலைப் புறக்கணிக்காதே! என் உயிர் நீ! உன்னை விடமாட்டேன்!" என்று மெய்மறந்த நிலையிலே அவன் பேசினான். அவன் கைகள் சிறிது தளர்ந்தன. அது தான் சரியான சமயமென்றெண்ணிய அவள், வேகமாகத் திமிறினாள். அவன் பிடியிலிருந்து விலகியதும், மான்போல் துள்ளியோடத் தொடங்கினாள்.

"மேரி! ஓடாதே!" என்று அவளைத் துரத்திக் கொண்டே ஓடினான். அவள் விம்மியழுதது அவன் காதில் விழவே, தயங்கி நின்றுவிட்டான். கொதிக்கும் உள்ளத்தோடு, ஈரமாக இருந்த அந்த மேடையின்மீது வந்து உட்கார்ந்தான்.

"மேரி......மேரி......மேரி..." என்று திரும்பத் திரும்ப முணு முணுத்தான்.

"பெண்ணாய் வந்து பிறந்த அழகு தேவதை இவள்! வரம் தர மறுத்துவிட்டாள்! வாழ்வையே பாழ்படுத்தி விட்டாள்!"

முகம் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். வெண்ணிலா அவனைப் பார்த்துச் சிரித்தது! அந்தச் சிரிப்பை உற்றுக் கேட்டான். அதில் ஏதோ வாழ்க்கைத் தத்துவம் இருப்பதாக உணர்ந்தான்.

என்னைப் பார், பைரன்! நான் அழகானவன்! என் எழிலில் சொக்காதவர், எவருமே கிடையாது! என் அழகை எவ்வளவு வேண்டுமானாலும் ரசி! என் பால் ஒளியில் பரவசத்தோடு மூழ்கி யெழு! ஆனால் நான், உனக்கே சொந்தமாக இருக்க வேண்டுமென்று மட்டும் நினைக்காதே!" என்று நிலவு பேசியது.

"ஆம், உண்மைதான்! இனி பெண்களை உல்லாசப் பொருளாகத்தான் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்! உயிர்த் தோழிகளாக அடைய விரும்பக் கூடாது! பெண்கள்—ஓய்வு நேர விளையாட்டுப் பொம்மைகள்! ஒரு கோப்பைமதுவைவிட, அணங்குகள் அதிக மதிப்பு வாய்ந்தவர்கள் அல்ல! செடியிலுள்ள மலரை மட்டுமே பறித்துக்கொள்ள விரும்புகிறோம்! ஆனால் செடியையே பிடுங்கிக்கொள்ள, நாம் விரும்புவதில்லையே! அது போலவே பெண்களிடத்திலுள்ள இன்பத்தைமட்டும் சுவைத்தால் போதும்! செடிக்குச் செடி மலர் மாறு பட்டிருப்பதுபோல, மங்கைக்கு மங்கை இன்பமும் மாறுபட்டே இருக்கும்!" இவ்விதமாக பைரனின் சிந்தனை ஓடியது.

"துடியிடை, பட்டுத் தோள்கள், பளபளப்பான கழுத்து, கனி உதடுகள், கண்ணாடிக் கன்னங்கள், வேல் விழிகள், புன்னகை, சிரிப்பு, முத்தம், அணைப்பு... இவை இனி நம் வாழ்க்கையின் விளையாட்டு! தேனை உறிஞ்சியதும், தேன் அடையை வீசி எறிந்துவிட வேண்டியது! மதுவைப் பருகியதும், கோப்பையை எறிந்துவிட வேண்டியது!"

இதையே எதிர்கால வாழ்க்கையின் இலட்சிய மாகக் கொள்ள, அன்று அவன் முடிவு செய்து கொண்டான்.

"புகழ்!" என்று அவன் உரக்கக் கத்தினான். அந்தச் சப்தம் நாலாப் பக்கங்களிலும் எதிரொலி செய்தது.

நந்தவனத்தைவிட்டு நேராக வீட்டிற்குச் சென்முன். வாயிற்கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனுன். மெழுகுவத்திகள் மங்கலாக எரிந்துகொண்டிருந்தன. எலிகள் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்தன.

பெரியதான ஒரு மெழுகுவத்தியைக் கையில் எடுத்துக் கொண்டு, உள்ளே நுழைந்தான். வீட்டிலிருந்த ஒவ்வொரு சாமானும் அவனது மூதாதையரின் புகழைப்பற்றி இசைபாடத் தொடங்கிவிட்டன. அவனது தந்தை, தாத்தா, இரண்டாம் தாத்தா—இப்படி அங்கே இருந்த பெரிய பெரிய உருவப் படங்கள். அவனது பார்வையை இழுத்தன. அவர்களது புகழை எண்ணி, தனக்குத் தானே ஏளனமாகச் சிரித்துக் கொண்டான்.

"எவ்வளவு மதிப்பும் புகழும் கொண்ட குடும்பத்தில் பிறந்தவன், நான்! அப்படிப்பட்ட நானு, ஒரு சாதாரணப் பெண்ணுல் புறக்கணிக்கப்படுவது! வெட்கம்! வெட்கம்!"

ஒரு அறையின் கதவைத்திறந்துகொண்டு உள்ளே சென்முன். அவன் தாய், மேஜையின்மீது படுத்தபடி, குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டான். அவளுக்குப் பக்கத்தில் மதுக் கிண்ணம் உருண்டு கிடந்தது. ஒரு புட்டியில் பாதியளவிற்கு மது இருந்தது.

வெறுப்போடு அவளைப்பார்த்தான். அவளது ஒரு கையைத் தூக்கிவிட்டான். அது தொப்பென்று மேஜையின்மீது விழுந்தது. அவள் மெதுவாக உடலை அசைத்துக்கொடுத்தாள்.

"அம்மா !" என்று உரக்க அழைத்தான். அவள் பாதி கண் திறந்து பார்த்தாள். மது வெறியால் அவள் கண்கள் சிவந்திருந்தன.

"பைரன், என்னை அழைத்தாயா? மகனே உனக்கென்ன வேண்டும்?" என்று நாக்குழம்ப அவள் கேட்டாள்.

"மகனே என்று அழைக்காதே! உனக்கு மகனுகப் பிறந்ததைவிட, ஒரு எருமைக்குக் கன்ருகப் பிறந்திருந்தால் பெருமைப்படுவேன் !"

அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, கண்களை மூடிக்கொண்டாள். குறட்டைச் சப்தம், அவன் இதயத்தைச் சாட்டையால் அடித்தது.

"எழுந்திரு! மேரி என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தாள்! அவளை நான் காதலிப்பதாகக் கூறினேன்; அவள் சிரித்தாள் !" என்று கூறிக்கொண்டே அவளைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினுன். அவள் கால்களை உதறினுள். மதுக்கோப்பை தரையில் விழுந்து, சுக்கல் சுக்கலாக உடைந்தது.

"அம்மா ! அவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள் !"

மது வெறியோடு அவள் எழுந்து உட்கார்ந்தாள். வாயில் வந்தபடி அவனைத் திட்டினுள்.

"உன் தந்தையைவிட மோசமாகிவிட்டாயே! குடித்துவிட்டு, இங்கே வந்து ஏன் கத்துகிருய்?"

"என் காதலை ஏற்றுக்கொள்ள மேரி மறுத்தாள் ! ஏளனமாகச் சிரித்தாள் !"

"ஒரு முட்டாளைப் பார்த்து அவள் சிரித்ததில் என்னடா ஆச்சரியம்? சப்பாணியான உன்னைக் கண்டு சொக்கிவிடுவாளா? சனியனே, உன் கேட்டிற்குக் காதல் வேறு?" என்று கூறி, அவன் சட்டையைப் பிடித்து இழுத்தாள். அவன் கண்களில் கோபக் கனல் பறந்தது.

சட்டையை அவன் திரும்ப இழுக்க, மேஜையிலிருந்து உருண்டு கீழே விழுந்தாள். அவளுக்கு ஆத்திரம் அதிகமாகிவிட்டது. பக்கத்தில் கிடந்த ஒரு கிண்ணத்தை எடுத்து, அவன் மீது வீசியெறிந்தாள். அக்கிண்ணம் அவனது அழகிய நெற்றியில், இரத்தம் கசியச் செய்துவிட்டது.

கோபத்தை அடக்க முடியாமல் பைரன், சுவற்றில் மாட்டியிருந்த ஒரு கட்டாரியை இழுத்தான். அதைக் கண்டதும் அவன் தாய் அறையில் ஓலமிட்டுக் கொண்டே ஓடத் தொடங்கினாள்.

குடி வெறியில் சுருண்டு கீழே விழுந்தாள். அவள் மீது ஏறி உட்கார்ந்துகொண்டு, கட்டாரியை ஓங்கினான்.

"உன் தாயையா கொல்லப் போகிறாய்? வேண்டாம் மகனே, வேண்டாம்!" என்று பயந்து பரிதாபமாகக் கத்தினாள். அவனை ஒன்றும் செய்ய மனம் வராமையால், அவன் எழுந்துவிட்டான்.

அவள், பக்கத்திலிருந்த ஒரு பெரிய திரையைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்க முயன்றாள். திடீரென்று அத்திரை அறுந்துகொண்டது. அவள் மீது அது விழுந்தது. புரண்டாள். அது உடலில் சுற்றிக்

கொண்டது. திரையைவிட்டு வெளியே வர அவள் செய்த முயற்சிகள், வேடிக்கையாக இருந்தன.

"உன்னை விட்டு விட்டு நான் எங்கேயாகிலும் போய்விடப் போகிறேன்! பணமும் புகழும் எனக்காகக் காத்துக் கிடக்கின்றன!"

"பணமும் புகழும்!" என்று சொல்லிக்கொண்டே பூமி ஆடுவதைப்போல உரக்கச் சிரித்தாள்.

அதிக வெறுப்படைந்த பைரன், அவ்விடத்தை விட்டு மாடிக்குச் சேன்றான். தன் படுக்கை அறையின் கதவைத் திறந்ததும், கட்டிலை வேலைக்காரி துடைத்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

முகத்தில் சுருண்டு வீழ்ந்திருந்த கூந்தலைத் தள்ளிக் கொண்டு அவள் நிமிர்ந்து நின்றாள். அவன் முகத்தைப் பார்த்தாள். அவள் கண்களில் ஏதோ பயம் தோன்றியது.

"எஜமானே!" என்று முணுமுணுத்தாள்.

பைரன் பேசவில்லை. அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். வட்டமாக மட்டுமல்ல, வசீகரமாகவும் அவள் முகமிருந்ததைக் கவனித்தான்.

"எஜமானே, நெற்றியில் காயமா? இரத்தம் வருகிறதே? சுத்தம் செய்து கட்டு கட்டட்டுமா?

முகத்தில் அடிபட்டது, அப்பொழுதுதான் அவன் கவனத்திற்கு வந்தது. கையால் தடவிப் பார்த்து, இரத்தம் வருவதை அறிந்துகொண்டான்.

"இது ஒன்றுமில்லை!"

வேலைக்காரி அறைக்கு வெளியே சென்று, ஒரு பாத்திரத்தில் வெந்நீர் கொண்டு வந்தாள். துணியை வெந்நீரில் நனைத்துப் பிழிந்து கொண்டு, துடைக்க எதிரே வந்து நின்ருள். அவளை உற்றுப் பார்த்தான். கொடிபோல் அவள் இருந்தாள்.

நெற்றியிலிருந்த இரத்தத்தைத் துடைத்தாள். அவள் கையில் பலம் அதிகமாக இருப்பதை அவன் உணர்ந்தான். அவளொரு விவசாயியின் மகள். எனவே அவள் உடல் உறுதியாக இருந்தது. அவள் முகத்திலும் ஒருவித அழகு தேங்கியிருந்தது.

தலையணையின்மீது சாய்ந்தபடி அவன் படுத்தான். காயத்தின்மீது அவள் கைபட்டது, அவனுக்குச் சுகமாக இருந்தது. அவள் பேசவில்லை. பெண்கள் பேசாமல் இருப்பதுதான் நல்லது என்று அவன் எண்ணினன். பாதி திறந்த கண்களால், அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"உன் பெயர் என்ன?" என்று திடீரென்று கேட்டான்.

"என் பெயர் மேரி, எஜமானே!"

வேருெரு மேரி! மலர்ச் சோலையில் நடந்தது, அவன் நினைவிற்கு வந்தது. உடனே வேலைக்காரியின் ஒரு கரத்தைப்பிடித்து, ஆசையோடு பூனைக் குட்டியைத் தடவித் தருவதைப் போல, தடவிக் கொடுத்தான்.

அவள் உடல் நடுங்கியது. எஜமானின் கை மெதுவாக இருப்பதோடு, தடவினல் இன்பம் தருவதாகவும் அவள் உணர்ந்தாள். கையை இழுத்துக் கொள்ளாமல், பேசாமல் நின்ருள். பயந்தபடியே அவன் முகத்தைப் பார்த்தாள்.

படுக்கையைவிட்டு அவன் எழுந்து, பலகணியின் அருகே சென்று, கதவுகளை நன்ருகத் திறந்துவிட்டான். குளிர்ந்த காற்று அறையினுள் ஓடி வந்தது.

அவள் அருகே வந்து நின்ருன். பேசாத பதுமையைப்போல அவள் நின்றிருந்தாள். அவளை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டான். அவள் எஜமானின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் முத்தத்தை, அவள் உதடுகள் எதிர்பார்ப்பதைப் போலத் தோன்றியன.

"பெண்களை நாடி வரும்படிச் செய்யவேண்டும்! ஆனல் நாம் அவர்களை நாடிச் செல்லக் கூடாது!" இப்படி ஒரு எண்ணம், அவன் மனதில் தோன்றியது.

குளிர்ந்த காற்றில் பெண்ணை அணைத்துக் கொள்வது, இன்பத்திலும் இன்பம் என்பதாக உணர்ந்தான். அவள் ஏதோ பேச வாய் திறந்தாள்.

"பேசாதே!" என்று கூறிக்கொண்டே, கட்டில் நோக்கி அவளை இழுத்துச் சென்ருன். "அந்த மேரிக்குப் பதில், இந்த மேரி!" என்று மனதிற்குள்ளேயே சொல்லிக் கொண்டான். அந்தப் பெண்ணின் மேலாடை கீழே விழுந்தது. படுக்கையில் அவள் சாய்ந்தாள்.

"என் எஜமானே!" என்று போதை கொண்டவளைப்போல, அவள் முணு முணுத்தாள். உலகப் புகழ் பெற்ற கவிஞனின் முதற்காதலி வேலைக்காரியா? அவன் நரம்புகளில் துடி துடிப்பு எவ்வளவு வேகமாக ஏறியதோ, அவ்வளவு வேகமாக இறங்கிவிட்டது. சிறிது நேரத்திற்கு முன்பு கவர்ச்சிகரமாகத் தோன்றிய

அவள் முகம் இப்பொழுது அவனுக்கு விகாரமாகத் தோன்றியது. வைரம்போல் பிரகாசிப்பதாக எண்ணிய அவள் கண்கள், இப்பொழுது ஒளி குன்றியதாகத் தெரிந்தன! அவளது திறந்த வாயும், அறிவின் ஒளியில்லாத கண்களும், அவனுக்கு வெறுப்பைத் தந்தன. தித்திப்பு—கசப்பாகிவிட்டது!

அவனை அவள் மறுமுறையும் அணைக்க விரும்பினாள். ஆனால் அவன் அதை விரும்பாததினால், அவளைத் தூரமாகப் பிடித்துத் தள்ளினான். மது குடித்தானதும், கோப்பையை எறிந்துவிட வேண்டியது தானே?

"எஜமானே, தங்களுக்கு நான் தேவை இல்லையா?"

தேனை உறிஞ்சியானதும் தேன் அடை எதற்கு?

"எனக்குக் களைப்பாக இருக்கிறது! நான் படுத்துத் தூங்க வேண்டும்! உன் வீட்டிற்கு நீ போ!" என்று உணர்ச்சியற்ற குரலில் அவன் கூறினான்.

தலைகுனிந்தபடியே அவள் கதவை நோக்கி நடந்தாள். மேலாடை இல்லாமையையும், ஆடைகள் அலங்கோலமாக இருப்பதையும், திடீரென்று அவள் உணர்ந்தாள். திரும்பினாள். கட்டிலில் துணிகளோடு கலந்து விட்டிருந்த மேலாடையை எடுத்து அணிந்து கொண்டு, தலைமயிரைச் சரிசெய்துகொண்டு, பைரனைப் பார்த்தாள்.

"படுக்கையைச் சரி செய்!" அவன் உத்தரவிட்டான்.

அடக்கவொடுக்கமாக மெத்தையைத்தட்டி, விரிப்புகளைச் சரி செய்தாள். மௌனமாக அவனைப் பார்த்தபடி

அவன் நின்றிருந்தான். ஐந்து நிமிடங்களுக்கு முன் தேவதையாக விளங்கியவள், பழையபடியே பணிவான வேலைக்காரியாக மாறிவிட்ட அதிசயத்தை நினைத்ததும், அவன் முகத்தில் புன்னகை தோன்றியது.

"பெண்ணின் உடல் ஒரு மெழுகுவத்தியின் வெளிச்சத்தைப் போன்றது! விரைவில் பயனற்றுப் போய்விடுகிறது!" என்ற உண்மை அவன் மனதில் தோன்றியது. இந்த உண்மையை, வாழ்நாள் முழுவதும் மறவாமல் இருக்க வேண்டுமென்று நினைத்தான்.

படுக்கையைச் சரி செய்தானதும், வேலைக்காரி வெளியே சென்றுவிட்டாள். "பெண்கள் மிகவும் அடக்கமானவர்கள்" என்று சொல்லிக் கொண்டே, கட்டிலில் படுத்தான்.

"நாளை காலை இந்த ஊரைவிட்டுப் புறப்படப் போகிறேன். புகழும் பணமும் என் காலடியில் விழப் போகின்றன! எதிர்காலத்தில், பட்டுமெத்தை போட்டதந்தக் கட்டிலில் ஆனந்தமாகப் படுத்திருப்பேன்! உலகிலுள்ள அழகிகள் அனைவரும், என் கட்டளைக்குக் காத்துக் கிடப்பார்கள்! ஆகா, அந்நாள் அல்லவோ வாழ்வின் பொன்னுள்! அந்நாளே வா! விரைந்து ஓடிவா! காற்று வேகத்திலே பறந்து வா!" என்று முணு முணுத்துக்கொண்டே, கண்களை மூடியபடி கற்பனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டான்.

பறவைகள் பாட ஆரம்பித்துவிட்டன. சூரியன் உதயமாகிவிட்டான். கலை உலகின் ஜோதியாக ஒளி வீசப்போகும் பைரனின் முகத்தில், கதிரவனின் கதிர்கள் பட்டு பிரகாசம் பெற்றன.

மேரி என்ற அந்த வேலைக்காரி காலைச் சிற்றுண் டியை ஒரு தட்டில் எடுத்துக்கொண்டு, அறையினுள் வந்தாள். தூங்கும் பைரனின் அழகான முகத்தைப் பார்த்தபடியே, சிறிது நேரம் பூரித்து நின்றாள். அறை யைச் சுத்தம் செய்துவிட்டு, பிரயாணத்திற்கான அவனது ஆடைகளை எடுத்துப் பெட்டியில் ஒழுங்காக அடுக்கி வைத்தாள். அவனை மெதுவாகத் தட்டி எழுப்பினாள்.

"எஜமானே, எழுந்திருங்கள்! பொழுது விடிந்து விட்டது!"

கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந் தான். "உண்மைதான்! இன்றுதான் நான் இந்த ஊரை விட்டுப் புறப்படப்போகிறேன்!" என்று மெதுவாகக் கூறிக்கொண்டே, கட்டிலை விட்டுக் கீழே இறங்கினான்.

நியூஸ்டீட் என்ற அவனது சொந்த கிராமத்தை விட்டு, அன்று பர்கேஜ் மேனர் என்ற ஊருக்கு அவன் செல்ல, முன்னரே முடிவாகி விட்டிருந்தது. ஹாரோ பாடசாலைக்குப் போவதற்கு முன்னர், அந்த ஊரில் இரண்டு நாட்கள் தங்கியிருக்க வேண்டியிருந்தது.

முகத்தைத் துடைத்துக் கொண்டே அவன் நாற் காலியில் உட்கார்ந்தான். மேஜையின்மீது சிற்றுண்டி யைக் கொண்டுவந்து வைத்தாள்.

"அம்மா இன்னும் தூக்கத்திலிருந்து எழுந்திருக்க வில்லையா?"

"இன்று காலை அம்மாவிற்கு உடம்பு சரியில்லை!"

"எல்லாம் இராத்திரி நடந்த கலாட்டாவின் பயன்!" என்று வெறுப்போடு முணு முணுத்துக் கொண்டான். அவன் விழிகள் அறையின் நாலாப் பக்கங்களையும், ஒரு முறை சுற்றிப் பார்த்தன. சுவர் களில் சுண்ணும்பு உதிர்ந்து விட்டிருந்தது. சாமான் களெல்லாம் மிகவும் பழையனவாக மாறிவிட்டிருந்தன. ஆடிப்போன நாற்காலிகள், கிழிந்துபோன ஆடைகள், உடைந்துபோன முகம் பார்க்கும் கண்ணுடி, வர்ணம் போன பெட்டிகள், படுத்தால் அழும் கட்டில், திறந் தால் கதறும் கதவுகள்—பைரன் கண்களை மூடிக் கொண்டான். எப்பக்கம் நோக்கினுலும் பழமையின் தோற்றம், ஏழ்மையின் கோலம்.

"என்றுகிலும் ஒருநாள், அரண்மனையில் பட்டு மெத்தையின்மேல் படுத்துறங்கும் வாழ்வு, எனக்கு வரப் போகிறது!" என்று மெதுவாக அவன் கூறினுன்.

"ஆமாம் எஜமானே, அவசியம் வரப்போகிறது!" என்று பணிவோடு அவள் சொன்னுள்.

"என் பேச்சை நீ நம்பமாட்டாய்! இப்படிப்பட்ட மோசமான சிற்றுண்டி கொண்டுவந்ததற்காக, அன்று நீ வெட்கப்படப் போகிருய்!"

எழுந்து அவன் அறைக்கு வெளியே சென்றுன். பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு அவளும் புறப்பட்டாள்.

தன் தாயிடம் சொல்லிவிட்டு, அவன் வெளியே வந்ததும், சாமான்களை வண்டியில் ஏற்றிவிட்டு அவள் அங்கே நின்றிருப்பதைக் கண்டான்.

அவள் முதுகில் தட்டிக்கொடுத்துவிட்டு, வண்டியில் ஏறி உட்கார்ந்தான். ஏக்கத்தோடு அவனைப் பார்த்தாள்.

"உன் சிரமத்திற்காக, இந்தா!" என்று சொல்லி, ஒரு நாணயத்தை அவளிடம் தந்தான்.

வண்டி வேகமாக ஓடத்தொடங்கியது. ஆமாம், பைரன் புகழ்யாத்திரை புறப்பட்டு விட்டான்.

## 2. கண் கலங்கினுள்

பைரன் இரண்டு நாட்களுக்குப் பிறகு ஹாரோ வந்து சேர்ந்தான். பெற்ற அன்னையோடு இல்லாமல் பிரிந்து வாழ்வதில் அவன் மகிழ்ச்சி அடைந்தான். அப்பொழுது பாடசாலையின் கடைசி மூன்று மாதங்கள் நடந்து கொண்டிருந்தன. அந்த நாட்களை ஆனந்த மாகக் கழிக்க வேண்டுமென்று அவன் முடிவு செய்தான்.

அவனுக்கு ஒரு தமக்கை இருந்தாள். அவன் தந்தையின் முதற்தாரத்தின் மகள் அவள். அவள் பெயர் அகஸ்டா. ஒரு நாள் அவள், அவனைப் பார்க்க வந்திருந்தாள்.

அவனுக்காக தோட்டத்தில் காத்திருந்தாள். பச்சைநிற ஆடையை அணிந்திருந்தாள். வயது இருபது. கருநிற கண்களும், களைமிக்க முகமும், கட்டான உடலும் கொண்ட அவள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தாள். அவள் மீது பைரனுக்கு அளவு

கடந்த அன்பு. அவன் தாயாரிடத்தில் அவளும தொல்லை கள் பட்டிருக்கிருள்.

"அகஸ்டா, ரொம்ப நேரம் காத்திருந்தாயா?" என்று கேட்டுக்கொண்டே பைரன் அருகே வந்தான்.

"சிறிது நேரமாகிறது!" என்று கூறிக்கொண்டே, அவன் கையைப் பிடித்து முத்தம் தந்தாள்.

"இதென்ன திடீர் விஜயம்?"

"விரைவில் நடக்கப்போகும் என் கல்யாணத்தைக் குறித்து, அறிவித்துப் போக வந்தேன்?"

"கல்யாணமா? உனக்கா அகஸ்டா?" என்று குதித்துக்கொண்டே அவன் கேட்டான்.

"ஆமாம் பைரன்!"

"மாப்பிள்ளை யார்?"

"மாமா ஜார்ஜ் லீ!"

சில விநாடிகள் அதிர்ச்சியில் தாக்கப்பட்டு மௌனமாக நின்றுவிட்டான். ஜார்ஜ் லீ என்ருல் அவனுக்குக் கொஞ்சம்கூட பிடிக்காது. அவனொரு பெருத்த குடியன். மோசமான ஒருவனுக்கா அவனது ஆசை அக்காள் வாழ்க்கைப்படுவது?

"ஜார்ஜ் ஒரு குடியன்! கெட்ட நடத்தைகள் ஏராளமாகக் கொண்டவன்!" என்று வேதனையோடு அவன் பேசினுன்.

"உன்ஞல் அவரைப் புரிந்து கொள்ள முடியாது, பைரன்! அவரை நான் காதலிக்கிறேன்! இராணு வத்தில் சேர்ந்துள்ள அவரை, கல்யாணம் செய்து கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்!"

"உன்னை நான் நிரந்தரமாகப் பிரிய வேண்டுமா?"

அவள் கண்களில் நீர் கொப்பளித்தது அவனும் அதிக கவலையடைந்தான். சிறிது நேரம் கழித்து, அவள் பிரிந்து சென்றுள்.

பைரனின் மனவேதனை அதிகமாயிற்று. தமக்கையின் எதிர்காலத்தை எண்ணி, ஏக்கம் கொண்டான். அகஸ்டா, மேரி சாவொர்த் ஆகிய இரு பெண்களின் நினைவு அவன் மூளையைக் குழப்பியது. அவன் மனமார நேசித்த இருவரின் வாழ்வும் பாழாகி விட்டதாக நினைத்து துக்கமடைந்தான்.

இன்னும் கொஞ்ச நாட்களில் அவ்வூரில் அவன் படிப்பு முடிந்துவிடப்போகிறது. மகிழ்ச்சியாகக் கழிக்க வேண்டுமென்று எண்ணிய நாட்கள், சோகத்திலேயே கழிந்தன.

ஹாரோவை விட்டுப் புறப்பட வண்டியில் ஏறி உட்கார்ந்ததும், அவன் வேதனை அதிகமாயிற்று. பாடசாலையின் உயர்ந்த மதில்களைப் பார்த்து, பெரு மூச்சு விட்டான்.

அவனோடு வண்டியிலிருந்த வகுப்புத் தோழர்கள் வழி நெடுகிலும் வம்பளந்துகொண்டே வந்தனர். நண்பர்களில் ஒருவன் உரக்கச் சிரிப்பதைக் கேட்டதும் அவன் திரும்பிப் பார்த்தான். அப்படிச் சிரித்தவன் ஸ்ரோப் டேவிஸ் என்று கண்டான்.

சிகப்பு ஓடு போட்ட ஒரு ஓட்டலைக் கண்டதும், "வண்டியை நிறுத்து!" என்று ஸ்ரோப் கத்தினுன், வண்டி நின்றது. எல்லோரும் வேகமாகக் கீழே குதித்தார்கள்.

பைரன் உள்ளே நுழைந்தான். மற்றவர் பின் தொடர்ந்தனர். அந்த ஓட்டலின் சொந்தக்காரனின் மகள் மேஜையைத் துடைத்துக்கொண்டிருந்தாள். பைரன் உள்ளே சென்றதும், முகம் நிமிர்ந்து அவள் பார்த்தாள்.

"வணக்கம்! உங்களுக்கு என்ன கொண்டுவரட்டும்?" என்று அந்தப் பெண் கேட்டாள்.

"பிராந்தி!" என்று ஸ்ரோப் சொன்னதும், அப் பெண் உள்ளே சென்றாள்.

நண்பர்கள் அப்பெண்ணைப் பார்த்துச் சிரிப்பதும் கேலி செய்வதுமாக இருந்தனர். பாடசாலை மாணவர் என்றால் கேலியும் கலாட்டாவும் இல்லாவிட்டால் சரி யாகுமா?

அவர்களுக்குச் சிறிது தூரத்தில் தனியாகப் போய் பைரன் உட்கார்ந்திருந்தான். அந்தப் பெண் மற்றவர் களைப் பார்ப்பதைவிட, பைரனையே அடிக்கடிப் பார்த் தாள். அழகான முகமும், அமைதியான கண்களும் கொண்ட அவன் தோற்றம், எந்தப் பெண்ணையும் சுலபத்தில் அவன்மீது ஆசைகொள்ளச் செய்யும்.

"உங்களுக்கு வேறு ஏதாவது வேண்டுமா?" என்று சிரித்துக்கொண்டே, அந்தப் பெண் கேட்டாள்.

"வேறென்ன எனக்குத் தேவை?" என்று அவள் முகத்தைப் பார்த்தபடியே, அவன் கேட்டான்.

"நான் ஆச்சரியப்படுகிறேன்!" என்று கூறிவிட்டு உடல் அசைய நின்றாள். அவள் உடலின் நல்ல பாகங் கள் எவை எவை என்று அவன் கவனித்துப் பார்க்க ஆரம்பித்தான்.

ஆடையை அவள் சரி செய்துகொண்டு புன்னகை செய்தாள். அவனைப் பார்த்தபடியே ஒரு ரோஜா மலரை எடுத்தாள். அதன் இதழ்களை ஒவ்வொன்றாகக் கிள்ளிக் கீழே போட்டாள்.

"என்னைக் கண்டால், உமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது அல்லவா?" என்றாள் மெதுவாக!

பைரன் பதிலளிக்கவில்லை. சிரித்தான். அவள் கண்களை உற்றுப் பார்த்தான்.

"இங்குதானே இரவு தங்கப் போகிறீர்கள்?"

"எதற்காகக் கேட்கிறாய்?"

"நல்ல சாப்பாடு தயார் செய்யலாம் என்று!"

"இல்லை! நாங்கள் நேராக லண்டன் செல்ல வேண்டும். இப்பொழுதே புறப்படப் போகிறோம்."

திடீரென்று, மலர்ந்திருந்த அவள் முகம் வாடி விட்டது. "எல்லோரும் புறப்படுங்கள்!" என்று ஸ்ரோப் கத்தினான்.

வண்டி நகர ஆரம்பித்ததும், பைரன் திரும்பிப் பார்த்தான். அந்தப் பெண் கண்கலங்க ஓட்டலின் முன்பு நின்றுகொண்டிருந்தாள்.

## 3. நாடகமும் நங்கையும்

லண்டன் வந்து சேர்ந்த அன்றிரவே, ஊரைச் சுற்றிப் பார்க்க அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள். நன்ருகக் குடித்துவிட்டு வீதி வீதியாக அலைந்தார்கள்.

"இன்றிரவு ஒரு நாடகத்திற்குப் போனல் என்ன?" என்று ஸ்ரோப் கேட்டான்.

"அவசியம் போக வேண்டும்!" என்று மற்ற தோழர்கள் கத்திஞர்கள். குடித்துவிட்டு ஆடுவதும், உரத்த குரலில் கத்துவதுமாக இருந்த அவர்களின் போக்கு பைரனுக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. தோழர்கள் அல்லவா, ஆகவே சகித்துக்கொண்டே அவர்கள் போக்கிலேயே, அவனும் போய்க்கொண்டிருந்தான்.

ஒரு வாடகை வண்டியை வைத்துக் கொண்டு புறப்பட்டனர். இருண்ட வீதிகளின் வழியே சப்தம் செய்துகொண்டே, கொட்டகையை வந்து சேர்ந்தனர்.

உயர்ந்த வகுப்பு டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்தனர். நாடகம் ஆரம்பமாயிற்று. நண்பர்களின் பேச்சின் சப்தமும் அதிகமாயிற்று. நாடக உறுப்பினர்கள் பேசுவதைப்போலவே, அவர்களும் உரத்த குரலில் பேசிக் காட்டத் தொடங்கிஞர்கள். கொட்டகையிலிருந்தவர்கள் "சப்தம் செய்யாதே! சப்தம் செய்யாதே!" என்று கத்திஞர்கள். பைரனின் தோழர்கள் எதையும் பொருட்படுத்தாமல், தம் போக்கின்படியே போய்க்கொண்டிருந்தார்கள்.

கடை சியில் கொட்டகையில் குழப்பம் ஆரம்பமாகி விட்டது. எதிர்பார்த்த சந்தர்ப்பம் கிடைத்துவிட்ட தாக எண்ணி, அவர்கள் நாற்காலிகளை எடுத்து வீசி எறிந்தார்கள். கற்கள் பறந்தன. ஓடுகள் எகிறின. யக்கள் பீதிகொண்டு வெளியில் ஓட ஆரம்பித்தார் கள். பெண்களும் குழந்தைகளும் கூட்டத்தில் அகப் பட்டுக்கொண்டு அலறினார்கள்.

பைரன் தனியாக ஒரு பக்கத்தில் ஓடினான். அப் பொழுது அவன் எதிரே ஒரு மங்கை ஓடிவந்து, அவன் மீது இடித்துக்கொண்டாள். பயத்தால் அவள் உடல் உதறிக்கொண்டிருந்தது.

"என்னோடு வந்தவர்கள் பிரிந்துவிட்டார்கள், தயவு செய்து என்னைக் கொட்டகைக்கு வெளியே கொண்டுபோய் விட்டுவிடுகிறீரா?" என்று பரிதாப மான குரலில் கேட்டுக்கொண்டே, பைரனின் கையைப் பிடித்தாள்.

அவளை அழைத்துக்கொண்டு, நடிகர்கள் ஆடை யணியும் அறையின் வழியாகச் செல்லத் தொடங்கி னான். அப்பொழுது அங்கேயிருந்த ஒருவன், "இவனும் இவன் நண்பர்களும்தான் குழப்பத்தை உண்டாக்கின வர்கள்!" என்று பக்கத்திலிருந்தவனிடத்தில் சொன் னான். உடனே அனைவரும் பைரனைப் பிடிக்க ஓடிவந்த னர். திடீரென்று அறையைக் கடந்து, அந்த அறை யின் கதவை வெளிப்புறத்தில் தாளிட்டுக்கொண்டான்.

"பெரிய ஆபத்திலிருந்து தப்பினோம்!" என்று பெருமூச்சு விட்டான். அவளை அழைத்துக்கொண்டு இருண்ட தெருவின் வழியாக நடந்தான்.

"உன் வீடு எங்கே இருக்கிறது?"

"நந்தவனத்திற்குப் பக்கத்தில்!"

"நீ இனி போகலாம் அல்லவா?"

"தனியாகவா? இருட்டிலா?"

"பயப்படாதே! நானும் உன்னுடன் வருகிறேன்!"

இருவரும் ஒன்றும் பேசாமல் வேகமாக நடந்தனர். பனித்துளிகள் தரையில் நிறைந்திருந்தன. அவள், அவன் முகத்தைப் பார்த்தாள். "எவனோ ஒரு வாலிபனிடம் என்னை ஒப்புவித்து விட்டிருக்கிறேனே?" என்றெண்ணினாள். அவள் கணவன் வெளியூருக்குச் சென்றிருந்தான். தன் தோழிகளோடு நாடகம் பார்க்க வந்தவளுக்கு, இக்கதி ஏற்பட்டுவிட்டது.

கடைசியில் ஒரு வீட்டின் முன் வந்து நின்றனர். ஜன்னல்களும் கதவுகளும் மூடியிருந்தன. பெரிய கதவைத் திறந்துகொண்டு, அவள் உள்ளே சென்றாள். அவனும் பின் தொடர்ந்தான். வீட்டினுள் மெழுகு வத்திகள் எரிந்து கொண்டிருந்தன. அங்கே இருந்த சாமான்களையும் அலங்காரங்களையும் கண்டால், அது ஒரு பெரிய செல்வந்தனின் வீடு என்பது நன்றாக விளங்கும்.

வெளிச்சத்தில் அந்த அணங்கைப் பார்த்தான். உயரமாகவும் கெம்பீரமாகவும் அவள் இருந்தாள். விலையுயர்ந்த ஆடையணிகளை அணிந்திருந்தாள். முத்தும் வைரமும் அவள் உடலில் சர்வ சாதாரணமாக இருந்தன.

இருவரும் ஒரு விசாலமான அறையினுள் சென்றனர். அங்கே காற்று மெதுவாக வீசிக் கொண்டிருந்தது.

உட்கார்ந்தபடி அவனை உற்றுப் பார்த்தாள். திடீரென்று அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் குறும்பும் குறிப்பும் இருப்பதை, அவன் தெரிந்து கொண்டான்.

அவனைச் சந்தித்தது முதல் அவ்ள் அதிகமாகப் பேசவில்லை. ஆனாலும் அவன் எண்ணத்தையும் உணர்ச்சிகளையும் அவள் புரிந்து கொண்டாள். வாழ்க்கை என்பது ஒரு பாலைவனம் என்பதை அவள் அறிவாள். ஆண்கள் நன்றியில்லாதவர்கள், சுயநல வாதிகள், ஒருமணி நேர விளையாட்டிற்குப் பெண்களைப் பயன்படுத்துபவர்கள் — இவற்றையெல்லாம் அவள் நன்கு தெரிந்து வைத்திருந்தாள். இருந்தும், அவனைப் பார்த்து புன்னகை செய்தாள்.

மெதுவாக நகர்ந்துவந்து அவள் கரத்தைப் பிடித்தான். மௌனமாக இருந்தாள். உடலோடு உடல் உராய்ந்தது. அவள் கோபித்துக் கொள்ளவில்லை. அவளை அணைத்தான். அவள் ஆடைகள் நழுவி கீழே விழுந்தன. அவன் எந்த ரகப் பெண்ணைத் தேடினானோ, அந்த ரகப் பெண் கிடைத்து விட்டாள். அவன் அணைப்பின் வேகம் அதிகரித்தது. அவள் வெற்று உடல், விளக்கின் ஒளியில் பளபளப்பாக இருந்தது.

தேடவில்லை, அலையவில்லை—எதிர்பாராதவிதமாக அவனுக்கு உயர்ந்த ரகமான கனி கிடைத்தது. அந்தக் கனியின் சுவையில் கவலைகளை மறந்தான்.

கட்டிலைவிட்டு எழுந்து பலகணியின் அருகே வந்து நின்றான். அவளும் பக்கத்தில் வந்து நின்றாள்.

பொழுது புலர இன்னும் சிறிது நேரமே இருந்தது. தெருவில் மக்கள் நடமாட ஆரம்பித்து விட்டார்கள். இருவருமாகத் தெருவைப் பார்த்தபடி மாடியில் நின்றிருந்தனர்.

"நீங்கள் ஒரு விநோதமான வாலிபர்!" என்று சொல்லிவிட்டு, கலகலவெனச் சிரித்தாள். என்ன பேசுவதென்று அவனுக்குத் தெரியவில்லை, ஆனால் என்ன செய்வதென்று தெரிந்தது. அருகே அவளை இழுத்து ஒரு முத்தம் தந்தான்!

அவள் மதுகொண்டு வந்து தந்தாள். அவளைப் பார்த்துக் கொண்டே குடித்தான்.

"உன் பெயர் என்ன?"

"உம் கேள்வி சங்கடத்தைத் தருகிறதே!" என்று சிரித்துக் கொண்டே கூறினாள்.

"நான் தெரிந்து கொள்ளக் கூடாதா?"

"அவ்வளவு அவசியமில்லை!"

"நாம் திரும்பவும் சந்தித்தால், தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும் அல்லவா?"

"உண்மைதான்! தெரிந்து கொள்ளாமலிருப்பது, நல்லதென்று நான் நினைக்கிறேன்!"

"என்ன காரணமோ?"

"ஏராளமான காரணங்களுக்காக! எனக்கு ஒரு கணவன் இருக்கிறான், நண்பர்கள் இருக்கிறார்கள், சமுதாயத்தில் மதிப்பான ஒரு இடமிருக்கிறது! இந்தக் காரணங்களால், நாம் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளாமலேயே இருப்பது நல்லது!"

பொழுது நன்ருகப் புலர்ந்துவிட்டது. வானத்தில் கருமேகங்கள் கப்பிக் கொண்டிருந்தன. இன்னும் சிறிது நேரத்தில் மழை வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. நாளையதினம் அவன் **பிரிக்டன்** சென்ருகவேண்டும். தாயின் தொல்லைகள் இல்லாமல் அவன் எங்கு வேண்டுமானுலும் இருக்கலாம். ஆண்டொன்றுக்கு 500 பவுண்டுகள் அவனுக்கு நிச்சயம் கிடைத்துவிடும்.

“எதைக் குறித்து யோசனை?”—அவள் பேச்சை ஆரம்பித்தாள்.

“ஒரு கவிதையைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்!”

“என்ன கவிதை?”

“காதல் கவிதை!” என்று அவள் கன்னத்தைக் கிள்ளிக்கொண்டே கூறினுன்.

“யார் கவிதை?”

“என் கவிதை!”

“ஒகோ நீங்கள் ஒரு கவிஞரா?”

“இன்னும் ஆகவில்லை! கவிஞராகப் புகழ்பெற அறிவைச் சேகரித்துக் கொண்டிருக்கிறேன்!”

“எங்கே?”

“உன் கண்களிலே!”

அவள் உரக்கச் சிரித்தாள். அவன் மாடியை விட்டுக் கீழே இறங்கினுன். அவள் மாடியிலேயே நின்றபடி வீதியில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தெருவில் நடந்துசென்றான். "திரும்பிப் பார்ப்பான். கையை முத்தமிட்டுக் காட்டலாம்" என்று, அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். அவன் திரும்பிப் பார்க்கவே இல்லை. நேராக நடந்து கொண்டிருந்தான்.

"இவனென்ன அதிசயமான பிறவி? எவ்வளவு ஆசையோடு இரவெல்லாம் பழகினான்; ஒருமுறை கூட திரும்பிப் பார்க்காமல் போகிறானே!"— இப்படி அவள் எண்ணினாள்.

"தேனை உறிஞ்சியானதும், தேன் அடையை வீசி யெறிந்துவிட வேண்டும்!" என்ற கொள்கை கொண்டவன் அவன், என்பதைப் பாபம், அவள் அறியாள்!

# 4. சேற்றில் கிடைத்த மலர்

வாடகை வண்டியில் பிரிக்டனுக்குப் பைரன் புறப்பட்டான். வழியில் சேறும் தண்ணீரும் நிரம்பியிருந்தது. ஆகவே வண்டி வேகமாகச் செல்ல முடியவில்லை.

சிறிது தூரம் சென்றதும், மழை ஆரம்பமாகிவிட்டது. எதிரே சாலையில் சிறிது தூரத்திலே, சேற்றில் சிக்கிக்கொண்ட ஒரு வண்டியையும், அதன் அருகே நிற்கும் இரண்டு பெண்களையும், பைரன் கண்டான்.

அவர்கள் அருகே வந்ததும் வண்டியை நிறுத்தச் சொன்னான். இரு பெண்களில் வயதான ஒருத்தி, வண்டியோட்டியை வாயில் வந்தபடித் திட்டிக்கொண்டிருந்தாள். சிறியவளாக இருந்தவள், பைரனைத் திரும்பிப் பார்த்தாள்.

தங்க நிறமான தலைமயிரும், நீலநிறமான கண்களும், சிறிது எடுப்பான மூக்கும் கொண்ட அந்தப் பெண்ணைப் பைரன் கவனித்தான். மழையில் நனைந்தபடி, சேற்றில் நின்றிருந்த பரிதாபகரமான அவள் நிலைமையைக் கண்டு, அவன் மனமிரங்கினான்.

"இங்கே ஒருவருக்கு இடமிருக்கிறது!" என்று அந்த இரண்டு பெண்களையும் பார்த்து அவன் கூறினான்.

"நன்றி! நான் வருகிறேன்!" என்றாள் சிறியவள், முகத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே!

அவள் தன் சாமான்களைக் கொண்டுவந்து, அவன் வண்டியில் வைத்தாள். பெரியவளுக்கு விஷயமே புரியவில்லை. பைரன் அழைத்ததையும், "நான் வருகிறேன்!" என்று சிறியவள் பதிலளித்ததையும் அவள் கவனிக்கவே இல்லை. வண்டியோட்டியை விடாமல் திட்டிக்கொண்டிருந்த அவளால் அதையெல்லாம் எப்படி கவனித்திருக்க முடியும்?

சிறியவள் ஏறியதும் வண்டி புறப்பட்டது.

"**சுசான்,** வண்டியை நிறுத்து; நானும் வருகிறேன்! சுசான் நிறுத்து! நிறுத்து!" என்று வயிறு வலிக்கச் சப்தமிட்டாள் பெரியவள்! நிற்காமலேயே வண்டி போய்க்கொண்டிருந்ததால், வண்டியிலிருந்த அனைவரையும் ஒன்றாகச் சேர்த்துத் திட்டினாள்.

"உன்னுடனிருந்தவள் பெரிய வாயாடி போலிருக்கிறதே!" என்று பக்கத்தில் உட்கார்ந்திருந்த சுசானைப் பார்த்துக் கேட்டான்.

ஆமாம் என்பதை ஒத்துக்கொள்பவளைப்போல, அவள் தலையாட்டினாள். அவள் பேசாமலிருப்பதைக் கண்டு, வேறொரு கேள்வியை அவன் கேட்டான். இந்தக் கேள்விக்கு அவள் பதில் அளித்துத்தானே ஆக வேண்டும்?

"நீ எங்கு செல்ல வேண்டும்?"

"பிரிக்டன்!"

"நானும் அங்குதான் செல்கிறேன்!"

"மிகவும் சௌக்கியமாகப் போயிற்று! உங்களுக்கு அநேக நன்றிகள்!"

அவளை நன்றாகப் பார்த்தான். அவளது நீல நிறமான கண்களில் நிறைய குறும்பு இருந்தது. அழகிய முகத்தில் தைரியத்தின் ரேகைகள் ஓடியிருந்தன அவளொரு புது ரகமான மலர்!

"பிரிக்டனில் ஏதாவது விசேஷமோ!"

"வேலை தேடப் போகிறேன்!"

"இதற்குமுன் நீ அந்த ஊருக்குச் சென்றிருக்கிறாயா, சுசான்?"

"பலமுறை சென்றிருக்கிறேன். அழகான ஊர். அங்கே இருக்கும் இளவரசரின் மாளிகை, பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும்!"

"அப்படியா, சுசான்? அந்த மாளிகைக்குப் பக்கத்திலே என்னுடைய மாளிகையும் இருக்கிறது. சிறியதாக இருக்கும்; ஆனால் உனக்கு ரொம்பவும் பிடித்திருக்கும்!" என்று சொல்லிவிட்டு அவள் முகத்தைப் பார்த்தபடி புன்னகை செய்தான.

புன்னகையில் மயங்கிவிடுபவள் அல்ல, தான் என்பதை அவன் அறிய வேண்டுமென்பதற்காக, முகத்தை மிடுக்காக வைத்துக் கொண்டாள்.

இரவு சிறிது நேரம் கழித்து, வண்டி பிரிக்டனுக் குள் நுழைந்தது. ஒரு வீட்டின் முன்வந்து அது நின் றது. பைரன் வண்டியை விட்டுக் கீழே குதித்தான்; அவளும் இறங்கினாள்.

"நீ எந்த இடத்தில் தங்கப் போகிறாய்?"

"நான்....நான்....நான்... இன்னும் முடிவு செய்ய வில்லை!"

"இரவில் திறந்த வெளியில் படுக்கக்கூடாது. குளிர்ந்த கடற் காற்று வீசுகிறது!"

சுசான் உதட்டைக் கடித்துக் கொண்டாள். பதில் ஒன்றும் பேசவில்லை. அவள் எண்ணத்தை அறிந்து கொண்டவனைப்போல, அவள் சாமான்களை வீட்டினுள்ளே கொண்டு போய் வைக்கும்படி வண்டி யோட்டியிடம் கூறினான்.

*  *  *

காலை மலர்ந்தது. பைரன் பக்கத்தில் படுத் திருந்த சுசான், கண் மலர்ந்தாள். அவள்மீது இருந்த பைரனின் கையை எடுத்து மெதுவாகக் கீழேவைத்து விட்டு, எழுந்து ஆடைகளை அணிந்து கொண்டாள்.

ஒரு வேலைக்காரி மாடிமீது வந்து, "எஜமானைப் பார்க்க யாரோ ஒருவன் வந்திருக்கிறான்!" என்று சுசானிடம் சொன்னாள்.

சுசான் பைரனைத் தட்டி எழுப்பினாள்; முகத்தைத் துடைத்துக்கொண்டே அவன் எழுந்து உட்கார்ந்தான்.

அவள் கீழே இறங்கி வந்ததும், குள்ளமான ஒரு மனிதன் நின்றிருப்பதைக் கண்டாள். அவனுக்கு மூக்கு நீண்டும், உதடுகள் கனமாகவும் இருந்தன.

"வணக்கம் பிரபு!" என்று அவன் தலையைத் தாழ்த்தி நிமிர்த்தினான்.

"நீ யார்?"

"தங்களுக்கு வேலைக்காரன் ஒருவன் வேண்டுமென்று கேள்விப்பட்டேன். ஆகவே, லண்டனில் உங்களைச் சந்திக்க வந்தேன். தாங்கள் அங்கிருந்து இங்கு வந்துவிட்டதாகக் கேள்விப்பட்டதும், இங்கு வந்தேன்!"

"உன் பெயர் என்ன?"

"வில்லியம் பிளட்சர்!"

"மணமாகாத ஒருவனின் சாமான்களை கவனித்துக் கொள்ளவும், , சோம்பலில்லாமல் வேலை செய்யவும் உன்னால் முடியுமா?"

"இதோ நற்சாட்சிப் பத்திரங்கள், பிரபு!"

"அதை யெல்லாம் எனக்குப் பார்க்க நேரமில்லை! சரி, கொஞ்ச நாட்களுக்கு வேலை செய்; திருப்தியாக இருந்தால், உன்னையே கடைசி வரைக்கும் வைத்துக் கொள்கிறேன்!"

பைரனுக்கு வில்லியத்தின் தோற்றம் மிகவும் பிடித்திருந்தது. முகம் யோக்கியமானவன் என்பதைத் தெரிவித்தது. கண்கள், கபடமற்றவன் என்

பதைச் சொல்லின. கைகள், நன்ருக உழைத்துப் பழக்கப்பட்டவன் என்பதை அறிவுறுத்தின்.

"பிரிக்டனிலேயே அதிக நாட்கள் இருப்பீர்களா, பிரபு?"

"பொழுது இங்கு எப்படிப் போகிறதென்பதை பொறுத்தது!"

"காலை சிற்றுண்டி, பிரபுவுக்கு எது பிடிக்கும்?'

"நன்ருக எது இருந்தாலும் சரி! குத்துச் சண்டை ஒன்றைப் பார்க்கப் போகிறேன்! மாடியிலிருக்கும் பெண்ணிடம், நான் திரும்பி வர சில மணி நேரமாகும் என்று சொல்லி விடு!"

"உத்தரவு பிரபு!"

* * *

குத்துச் சண்டை நடைபெற்ற இடத்தில் மக்களின் ஆரவாரம் அதிகமாக இருந்தது. பைரன் அங்கே வந்து சேர்ந்தபோது. சண்டை போட இருந்த இருவர் மேடையின் மீது ஏறி நின்றனர்.

அந்த இருவரில் ஒருவன் அதிகம் பருத்தும் மற்ருெருவன் அளவான உடலோடும் இருந்தான். முன்னவன் பெயர் **சஸக்ஸ் ஸ்மீத்.** பின்னவன் பெயர் **ஜெம் கல்லி.**

சஸக்ஸ் ஸ்மித் வெற்றி பெறுவான் என்ருன்' பக்கத்தில் இருந்த ஒருவன். பைரன் அவனைத் திரும்பிப் பார்த்து, "நூறு பவுன்கள் பந்தயம், நிச்சயம் ஜெம் கல்லித்தான் வெற்றி பெறுவான்!" என்று' கூறினன்.

"ஆமாம், நீங்கள் சொல்வதுதான் சரி!" என்ருன், பின்புறமாக நின்றிருந்த ஒருவன். பைரன் அவனைத் திரும்பிப் பார்த்தான், அவன் பெயர் **ஜாக சன்.**

குத்துச் சண்டை மிகவும் மும்முரமாக நடை பெற்றது. இடை இடையே மக்கள் கை தட்டும் ஓசை வெளியில் வெகு தூரம் வரைக்கும் கேட்டது தீவிரமான சண்டைக்குப் பிறகு, ஜெம்கல்லி வெற்றி பெற்ருன்.

"சபாஷ், நம் கட்சி ஜெயித்து விட்டது!" என்று ஜாக்சன் துள்ளி குதித்துக் கொண்டே, பைரனின் கையைப் பிடித்துக் குலுக்கினன்.

"குத்துச் சண்டை உமக்குத் தெரியும்போலி ருக்கிறதே!" என்ருன் பைரன்.

"தெரியுமா? குத்துச் சண்டைதானே ஐயா, என் உயிர்—என் வாழ்க்கை—சகலமும்! என் பெயர் ஜாக்சன்-நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்!" என்று பெருமகிழ்ச்சியோடு அவன் பேசினன்.

"ஆமாம், எங்கோ கேள்விப்பட்ட கவனமிருக் கிறது! என் பெயர் பைரன். எனக்குக் குத்துச் சண்டையைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசை!

"அப்படியா! பைரன், இங்கே நாளைக்கு வாருங் கள், ஏராளமாகச் சொல்லித் தருகிறேன்!"

ஜாக்சன் வைத்திருந்த நாய் பைரனின் பார் வையை இழுத்தது. வாலை ஆட்டிக் கொண்டே அது அவன் காலை நக்கித் தந்தது.

"மிகவும் அழகாக இருக்கிறதே இந்த நாய்—எங்கு வாங்கினீர்கள்? இதை விலைக்குக் கொடுத்து விடுகிறீர்களா ?" என்று கேட்டுவிட்டு, பைரன் உட்கார்ந்து அதன் முதுகில் தடவிக் கொடுத்தான்.

"இதை விலைக்குத் தர முடியாது! இன்று நடை பெற்ற அற்புதமான குத்துச் சண்டையின் ஞாபகார்த்தமாக, உமக்கு வேண்டுமானால் இனமாகத் தருகிறேன்!" என்று சொல்ல, அந்த நாயைப் பைரனிடம் தந்தான்.

"இந்த நாயை அன்பாக நடத்துங்கள்; உமக்கு ஒரு தொந்தரவும் தராது. இதன் பெயர் **போட்ஸ்வின்!**"

"இப்பொழுது என்னோடு நீங்கள் சிற்றுண்டி அருந்தினால்,அதன் நினைவாக, இதை நான் எடுத்துக் கொள்கிறேன்!" என்றான் முகமலர்ச்சியோடு பைரன்.

இருவருமாகப் பக்கத்திலிருந்த ஒரு ஓட்டலினுள் நுழைந்தனர். சில மணி நேரத்திற்குள், அவர்கள் மிகவும் நெருங்கிய நண்பர்களாகிவிட்டார்கள். ஜாக்சனின் அறைக்குச் சென்று, அன்றைய பிற்பகலை பைரன் இன்பமாகக் கழித்தான்.

அன்று மாலை போட்ஸ்வின் என்ற நாயை அழைத்துக் கொண்டு, அவன் கடற்கரைக்குச் சென்றான். எழுந்து விழும் அலைகளைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். கர்ஜிக்கும் கடலும், அதன் சக்தியும், அழிக்கும் ஆற்றலும் - அவன் மனதில் எக்களிப்பை உண்டாக்கின.

சிறிது நேரம் கழித்து அவன் வீட்டிற்குப் புறப்பட்டான். வீட்டினுள்ளே வெதவெதப்பாக இருந்

தது. காற்றிலே ஜன்னலின் கதவுகள் ஆடிக் கொண்டிருந்தன. திரையிட்ட கட்டிலில் சுசான் படுத்திருந்தாள். அவள் முகத்தில் உணர்ச்சி குன்றி யிருந்தது.

“இவ்வளவு நேரம் கழித்தா வருவது?” என்று கேட்டுவிட்டு உதட்டைக் கடித்தாள்.

பைரன் பெருமூச்சு விட்டான். பெண்களே எப் பொழுதும் அர்த்தமில்லாமல் கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்கள் அவ்வளவு முட்டாள் களாக இருப்பதற்காகப் பரிதாபப்படவேண்டிதான் இருக்கிறது. அணங்குகள் அளிக்கும் அந்தச் சிறு நேர இன்பத்திற்காக, அவர்களின் பொருளற்ற பேச்சை பொறுமையோடு கேட்கவேண்டி நேரிடு கிறது!—அவன் இப்படியெல்லாம் எண்ணினன்!

சில வாரங்களுக்குமேல் பிரிக்டனில் பைரனல் தங்கியிருக்க முடியவில்லை. அந்த ஊர் அவனுக்குச் சலித்து விட்டது.

ஜாக்சனேடு சுற்றிவிட்டு ஒருநாள், நடு நிசிக்கு மேல் வீட்டிற்குத் திரும்பினன். அவனைக் கண்ட தும், படுத்திருந்த சுசான் வேகமாக எழுந்து கட்டி லில் உட்கார்ந்தாள்.

“உம் வேலைக்காரன் சாமான்களை எல்லாம் அனுப்பி விட்டான்! நீங்கள் எங்கு போகிறீர்கள்?” —அவள் குரலில் சோகமும் கோபமும் கலந்திருந் தன.

“கேம்பிரிட்ஜுக்குப் போகப் போவதாக, உன்னிடம் சொல்லவில்லை?”

"கேம்பிருட்ஜுக்கா? எப்பொழுது புறப்படுவதாக யோசனை?

"நாளைய தினம்!"

"நாளைய தினமா? அழிந்துபோக என்னை இங்குத் தனியாக விட்டுவிட்டுப் போகப் போகிறீரா?

சுசான் கட்டிலைவிட்டுக் கீழே இறங்கினள். அவள் முகத்தில் கோபம் தெறித்தது.

"நான் இங்கு தனியாக இருக்கமுடியாது!" அவன் தோள்களைப் பிடித்து வேகமாக ஆட்டினள்.

"நீ மிகவும் மோசமான ஒரு தாசி!"

"நானு? உம்மாலா தாசி என்று சொல்லப்படுகிறேன்!"—அவள் கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்து விட்டாள்.

பைரன் பேசாமல் அவளைப் பார்த்தபடி, சிறிது நேரம் நின்றிருந்தான். அவன் மனதில் ஏற்பட்டிருந்த கோபம் தணிந்து விட்டது. அவளைத் தூக்கி கட்டிலின்மீது படுக்க வைத்தான்.

அவள் நெற்றியில் விழுந்து புரளும் கூந்தல் வைரத்தைப் போல் ஒளிக்கும் கண்கள், நெகிழ்ந்த ஆடை, பளபளப்பான உடல்.........கட்டிலில் அவளொரு ஓவியம்போல் படுத்திருந்தாள்!

அவள் கொழு கொழுத்துப் பருமனக இருந்தாள். ஆனலும் அவளிடம் ஜீவன் நிரம்பியிருந்தது

அவள் உடல் நெளிவு, எப்பொழுதுமே அவனது உணர்ச்சியைத் தட்டியெழுப்பத் தவறியதில்லை.

அவள் தோள்களை மெதுவாக வருடினான். வீருப்போடும் விறைப்போடும் அதிக நேரமிருக்க, அவள் விரும்பவில்லை- அவன் மார்பைத் தடவிக் கொடுத்தாள்.

"சுசான்! நீயும் என்னோடு கேம்பிரிட்ஜுக்கு வரலாம்! ஆனால் ஆணைப் போல உடை உடுத்திக் கொள்ள வேண்டும்!

"ஆணைப் போல எதற்கு?"

"அது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கும்! உன்னை என் சகோதரன் என்று சொல்லிக் கொள்வதில், இன்பமடைவேன்! என்னதான் நீ ஆண் உடை அணிந்தாலும், உன் பெண்மையை மறைத்து விட முடியாது, சுசான்!" என்று சொல்லி; கலகல வென அவன் சிரித்தான்.

ஆண் வேடத்தில் சுசான் **கேம்பிரிட்ஜ்** என்ற நக ரத்திற்குப் புறப்பட்டாள்,

"எனக்கும் என் சகோதரனுக்கும் ஒரு அறை வேண்டும்!" என்று சொல்லும்போது, ஓட்டல் வேலைக்காரர்களின் முகங்களில் ஆச்சரியம் தோன்றுவதைத் கவனித்து, பைரன் மகிழ்ச்சியடைந்தான்.

ஒரு பச்சை நிற வண்டியில்—சுசான், ஜாக்சன், வில்லியம், போட்ஸ்வின் ஆகியவர்களோடு பைரன் கேம்பிரிட்ஜுக்குச் சென்று கொண்டிருந்தான்.

வண்டி நிற்கும் இடங்களில் ஜாக்சனிடம் அவன் குத்துச் சண்டை பழகிக் கொண்டான்.

வழியில் போட்ஸ்வின் என்ற நாயோடு கொஞ்சும் அளவுகூட தன்னிடம் அவன் பேசவில்லையே என்று சுசான் கவலையடைந்தாள். பைரன் எவ்வளவுதான் மோசமாக நடத்தினபோதிலும், அவன் மீது அவளுக்கு வெறுப்பு ஏற்படவில்லை.

அவனுகவே அவளைப் புறக்கணிக்கும்வரை, அவனேடேயே தங்கியிருக்க அவள் முடிவு செய்து கொண்டாள்.

# 5. தணலில் தங்கச் சிலை

**பை**ரனுடைய தந்தை ஒரு உயர்தர அதிகாரி. அவர் முதலில் ஒருத்தியைக் காதலித்து கல்யாணம் செய்துகொண்டார். சிறிது காலம் அவளோடு வாழ்ந்தபிறகு அவளை விலக்கிவிட்டு, லேடி சார்மர்தன் என்பவளைத் திருமணம் செய்துகொண்டார்.

அவள் ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகிவிட்டு, 1786-ம் ஆண்டு இறந்து விட்டாள். அந்தக் குழந்தை தான்...பைரனின் அன்பிற்கும் ஆசைக்குமுரியவளான—அகஸ்டா.

ஒரு நாள் குளிக்கும் இடத்தில், ஸ்காட்லாந்து தேசத்துப் பெண்ணுன கார்டன் என்பவளைக் கண்டார். அதன் பிறகு இருவரும் அடிக்கடி சந்திக்க

நேரிட்டது. சந்திப்பு காதலாக மலர்ந்தது. காதல் கல்யாணமாக முடிந்தது.

கார்டன் ஒரு செல்வரின் மகள். அவள் மூலம் அவருக்கு ஏராளமான சொத்து கிடைத்தது; மதுவும் மங்கையுமாகவே காலத்தைக் கழித்து வந்த அவர், விரைவில் அந்த செல்வத்தை எல்லாம் அழித்து விட்டார். அதனல் மனைவியின் வெறுப்பிற்கும் கோபத்திற்கும் ஆளாக நேரிட்டது. அந்தக் கொந்தளிப்பான வாழ்க்கையில், மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன.

ஒரு சமயம் வேலை நிமித்தமாக பாரிஸ் நகரத்திற்குச் சென்றார். அதிகக் குடியினல் அங்கே ஒரு ஒட்டலில் அகால மரணமடைந்தார்.

அந்தத் தம்பதிகளுக்கு 1788-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் தேதி ஒர் ஆண் மகன் பிறந்தான். அவன் தான் லார்ட் பைரன். அவனது முழுப் பெயர் **ஜார்ஜ் கார்டன் பைரன்** என்பதாகும்.

பைரனின் அன்னை, முரட்டுக் குணமும் முட்டாள் தன்மையும், முன் கோபமும் கொண்டவள். கணவனின் உறவினர்களை அவள் அசட்டை செய்தாள். அதனுல் அவர்கள் அவளை வெறுத்து ஒதுக்கினர்.

பைரனை அழைத்துக் கொண்டு ஊர் ஊராகச் சுற்றினுள். அவளது கொடூர தன்மையாலும், கோபப் புயலாலும் சிறுவனை பைரன், படாத பாடு பட்டான், அவளது அண்ணன் இறந்து விடவே, எதிர்பாராதவிதமாக நியூ ஸ்டீட் என்ற கிராமத்திலிருந்த ஏராளமான நிலங்கள் அவளுக்குக் கிடைத்

தன. எனவே, 1798-ம் ஆண்டு அந்த ஊருக்கு வந்து, அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டாள்.

பதிமூன்றும் வயதில்—1801-ம் ஆண்டு—ஹாரோ பாடசாலைக்குப் பைரன் அனுப்பப்பட்டான். அங்கே அவன் நான்கு ஆண்டுகள் படித்தான். அவ்வூரில் நாட்கள் ஆனந்தமாகவே கழிந்தன.

விடுமுறை நாட்களைக் கழிக்க 1803-ம் ஆண்டு நியூஸ்டீட்டுக்கு வந்திருந்தபோது, மேரி சாவொர்த் என்ற பெண்ணின் மீது காதல் கொண்டான். அவன் காதலை மேரி ஏற்றுக்கொள்ள மறுத்ததும், அவன் வாழ்க்கையே மாறிவிட்டதென்று கூறலாம்.

மேரி சாவொர்த்மீது ஏற்பட்ட கோபம், பெண்களைப் பற்றிக் கேவலமாக எண்ணவும், உல்லாச நேர விளையாட்டுச் சாமான்களாக அவர்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற முடிவும் அவனுக்கு ஏற்பட்டன். மேரிக்குப் பதில், பெண் இனத்தின் மீதே, அவன் பழிவாங்க ஆரம்பித்துவிட்டான்.

ஹாரோ பாடசாலையில் படிப்பு முடிந்த சில நாட்கள் கழித்து, கல்லூரியில் வாசிக்க அவன் கேம்பிரிட்ஜுக்கு வந்தான்.

1805-ம் ஆண்டு! ட்ரினிட்டி கல்லூரியின் மதிற் சுவர்கள் பழமையானவைகளாக இருந்தபோதிலும், பார்வைக்கு மிகவும் கம்பீரமாக விளங்கின. உள்ளே பட்டு விரிந்ததுபோல பசுமையான புற்றரை இருந்தது. நீர் ஊற்றுக்கள் சில! மலர்ச் செடிகள் ஏராளம்! கனி மரங்கள் அனேகம்!

அப்படிப்பட்ட அழகான இடத்தில் பைரனின் அறைகள் இருந்தன. இயற்கை அழகுமிக்க அந்த இடத்திலிருந்தபடி, கவிதைகள் எழுத ஆரம்பித் தான்.

அவனது புதிய நண்பனான **ஜான் கம் ஆப்பவுஸ்** என்பவனோடு, பகல் நேரங்களைப் படிப்பில் கழித்து வந்தான்.

ஜான் கம் ஆப்பவுஸ் சிறிது ஒல்லியானவன். அவனது அகன்ற நெற்றியையும், விசாலமான கண் களையும், முகத் தெளிவையும் பேச்சின் தன்மையை யும் கவனிப்போர், அவனோர் அறிவாளி என்பதை ஒத்துக்கொள்வார்கள். படிப்பு நேரத் தோழனாகப் பைரனுக்கு அவன் பயன்பட்டான். அவனோர் செல் வந்தனான வர்த்தகரின் மகன்.

பைரனுக்கு மாலை நேரங்களை உல்லாசமாகக் கழிக்க, ஸ்ரோப் டேவிஸ் மிகவும் உபயோகமாக இருந்தான். சுசான், வேலைக்காரன் வில்லியம் பிளட் சர், ஆப்பவுஸ், ஸ்ரோப் ஆகியவர்களோடு விடுமுறை நாட்களில் பைரன் சுற்றுப்புறமிருந்த ஊர்களுக்குச் செல்வதும், அங்குள்ள ஓட்டல்களில் தங்கி பொழுதை இன்பமாகக் கழிப்பதுமாக இருந்தான்.

* * *

ஒருநாள் அதிகாலையில் அவன் விழித்துக் கொண்டான். மயக்கத்தோடு தலைவலியுமிருப்பதாக உணர்ந்தான். சிறிது நேரம் தான் எங்கு இருக்கிறோம் என்பதே அவனுக்குப் புரியவில்லை. கண்களைத் திறந்தான். கூரையும் சுவர்களும் ஆடுவதாகத் தோன்றின. இதெல்லாம் இரவு நடை பெற்ற களியாட்டத்தின் விளைவு என்

பதை அறிந்துகொண்டான். கேம்பிரிட்ஜுக்குப் பல மைல் தூரத்தில் இருப்பதையும் தெரிந்துகொண்டான்.

கூந்தல் கலைந்து, ஆடை குலைந்து அவனருகே சுசான் படுத்திருப்பதைக் கண்டான். விழிகளை நன்ருகத் திறந்து கொண்டு அவளைப் பார்த்தான். அவள் சுவை குறைந்த கனியாகிவிட்டாள். இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் அவளோடு பழகுவது? அவள் இனி, எங்கு வேண்டுமானுலும் செல்லலாம். இப்பொழுது அவள்மீது அவனுக்கு ஆசையுமில்லை, அனுதாபமுமில்லை! படுக்கையைவிட்டு எழுந்தான்.

ஓட்டலில் வேலைக்காரர்கள், வேலை செய்யும் சப்தம் கேட்டது. ஒரு பாத்திரத்தில் ஒருவன் தண்ணீர் கொண்டு சென்றதைப் பைரன் கவனித்தான். உடனே நீஞ்சல் கவனம் அவனுக்கு வந்தது. குளிர்ந்த தண்ணீரில் நீந்தி குளித்தால், மதுமயக்கம் போய்விடுமல்லவா?

ஓட்டலில் வேறு அறைகளில் இருந்த ஆப்பவுஸ், ஸ்ரோப் ஆகியோரைப் பார்க்க வேண்டுமென்று எண்ணினுன். சுசான் விழித்துக்கொள்ளாமலிருக்க, சப்தம் செய்யாமல் ஆடைகளை அணிந்து கொண்டான். மாடியைவிட்டுக் கீழே இறங்கி வந்தான். தீவிரமாக கறியும் முட்டையும் ஆப்பவுஸ் சாப்பிட்டுக்கொண்டிருப்பதைக் கண்டான்.

"இவ்வளவு அதிகாலையில் எப்படிச் சாப்பிடுகிருய்?" என்று கேட்டுக்கொண்டே, அவன் அருகே வந்து நின்ருன்.

"அழகான காலை நேரம்—அதிகமான பசி—ஏன் சாப்பிட முடியாது?" என்று ஆப்பவுஸ் கூறிக் கொண்டே இருக்கும்போது, ஸ்ரோப் அங்கு வந்து சேர்ந்தான்.

"இந்த அதிகாலையில் ஆற்றில் நீந்தினுல், ஆனந்த மாக இருக்குமல்லவா?"

"அற்புதமான யோசனை, பைரன்! புறப்படு!"—ஸ்ரோபின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது.

ஆப்பவுஸை அழைத்துக் கொண்டு நகருக்கு வெளியே இருந்த ஆற்றை நோக்கி, வண்டியில் புறப் பட்டார்கள்.

குளிர்ந்த நீரில் அவர்கள் குதூகலமாக நீந்தி விளை யாடிக்கொண்டிருக்கும்போது, கட்டிலில் படுத்திருந்த சுசான் கண் விழித்துக்கொண்டாள். பைரன் பக்கத் திலில்லாமையையும், தான் தனிமையிலிருப்பதையும் அறிந்தாள்.

மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள். அவனது சாமான்கள் ஒன்றுகூட அறையிலில்லாமையைக் கண்ட தும், திடுக்கிட்டாள். உடல் உதறியது. அவசர அவசர மாக ஆடைகளைச் சரிசெய்து கொண்டு, கட்டிலைவிட்டுக் கீழே குதித்தாள். மாடியைவிட்டு இறங்கினுள். ஓட்டல் சொந்தக்காரன் அங்கே நின்றிருந்தான்.

"என் கணவர் எங்கே?"—உதறும் குரலில் அவள் கேட்டாள்.

"கணவனு?"

"ஆமாம், என்னேடு இருந்தாரே—அவர்!"

"நீ குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருக்கும் போதே அவர் போய்விட்டாரே! அவர் போன பிறகு நீ தங்கி இருந்த நேரத்திற்கு, அறை வாடகை ஒரு கினி தர வேண்டும்!" என்று சொல்லிவிட்டு, அவளைப் பார்த்துச் சிரித்தான்.

அவள் மனம் பதைபதைத்தது. பைரன் கைவிட்டு விட்டான் என்பதை எண்ணியதும் கண்கள் கலங்கின. பேசாமல் ஒரு கினி (சுமார் பதின்மூன்று ரூபாய் மதிப்புள்ள நாணயம்) எடுத்து, மேஜையின்மீது வைத்தாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, வாடகை வண்டியில் புறப்பட்டாள்.

நகரைக் கடந்து சுசான் வண்டியில் துக்கத்தோடு சென்று கொண்டிருந்தபோது, பைரன் தன் நண்பர்களோடு சிரித்து விளையாடியபடி, சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தான்.

கோழிச் சண்டை ஒன்றைப் பார்த்துவிட்டு, அன்று மாலையே கேம்பிரிட்ஜுக்குத் திரும்பிவிட்டார்கள்.

"அந்தப் பெண் இங்கே வந்தாள், எஜமானே! தாங்கள் இல்லை என்று கூறியதும், பேசாமல் போய் விட்டாள்!" என்று வில்லியம் பிளட்சர் கூறினான்.

"மிகுந்த நன்றி, வில்லியம்!"

"பெண்கள் எப்பொழுதுமே தொந்தரவானவர்கள்! கொஞ்சம் ஏமாந்தால் ஒட்டிக்கொள்வார்கள்!"

இப்படி வில்லியம் கூறியதும் பைரன் சிரித்தான்.

"உன் வாழ்க்கையிலும் எவளாவது ஒருத்தி ஒட்டிக்கொள்வாள், வில்லியம்!"

"நடக்காது எஜமான், நடக்காது! ஒருபோதும் நடக்காது!"

போட்ஸ்வின் ஓடிவந்து பைரன் மீது எகிறி, விளையாடியது. சில ரொட்டித் துண்டுகளை அதற்குப் போட்டான்.

"வில்லியம், என் கல்லூரி நண்பர்கள் இன்றிரவு இங்கு வருகிறார்கள்! எட்டு மணிக்கெல்லாம் விருந்து தயாராகிவிட வேண்டும்!"

"அப்படியே எஜமான்!"

உடலும் உள்ளமும் தளர வெளியிலிருந்து வீட்டிற்கு வந்தால், அமைதியைத் தர நம்பிக்கையுள்ள வேலைக்காரனும், நன்றியுள்ள நாயும் இருப்பதை எண்ணி பெருமை கொண்டான்.

இரவு மணி எட்டு! மெழுகுவர்த்தியின் பிரகாசம், மதுக் கிண்ணங்களின்மீதுபட்டு பளபளத்தது! வட்டமான ஒரு பெரிய மேஜை. அதன் முன்பு தன் நண்பர்களோடு பைரன் உட்கார்ந்திருந்தான்.

மது அருந்தியானதும், பாய்ச்சிகை விளையாட ஆரம்பித்தனர். பட்டுத் துணி விரிக்கப்பட்டிருந்த மேஜையின் மீது, பந்தயம் கட்டும் பணம் கலகலவென விழுந்து கொண்டிருந்தது.

எவனாவது ஒருவன் ஜெயித்துவிட்டால், எக்களிப்பும் சிரிப்பும் அங்கே எதிரொலி செய்தன.

வழக்கமாக நஷ்டமடையும் ஸ்ரோப், அன்றும் தோல்வியே அடைந்தான். வெற்றியானாலும் தோல்வியானாலும், அவன் பொருட்படுத்தவேமாட்டான். எப்பொழுதும் ஒரேவிதமான மகிழ்ச்சியோடேயே இருப்பான். அவன் எதிரே உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்த பான்லாவ் என்ற நண்பன், வெற்றி பெற்றால் துள்ளிக் குதிப்பான்! தோல்வி கண்டால் முகம் கறுத்து கடுகடுப்பாகிவிடுவான்!

பாய்ச்சிகை விளையாட்டில் களைப்படைந்த பைரன், சிறிது தூரத்தில் தனியாகப் போய் உட்கார்ந்து விளையாட்டைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

அறையின் கதவு திடீரென்று திறக்கப்பட்டது பைரன் முகத்தைத் திருப்பினான். கோபம் கொழுந்து விட்டெரியும் கண்களோடு, சுசான் நின்றுகொண்டிருந்தாள்.

பாய்ச்சிகை விளையாட்டு நின்றுவிட்டது. அனைவரின் கண்களும் அவள்மீது மொய்த்தன. அனைவரும் மதுவருந்தியிருந்ததினால், விளையாட்டு வேறுவிதமாக மாறிவிட்டது.

"பார்ப்பதற்கு அழகான பச்சைக் கிளி!"—சிரிப்போடு கலந்த குரலில் ஸ்ரோப் இப்படிக் கூறினான்.

பைரன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவன் பார்வையில் ஆச்சரியமும் கோபமும் இருந்தன.

"இங்கு நீ ஏன் வந்தாய்?"—ஆத்திரத்தோடு பைரன் கேட்டான்.

“தனியறையில் என்னை ஓட்டலில் விட்டுவிட்டு வந்துவிட்டதால்! அன்று முழுவதும் உமக்காகக் காத்துக்கொண்டிருந்தேன்!”

“ஆகா, என்ன அழகு! என்ன ஒய்யாரம்! பைரன், இந்த உல்லாசியை எங்கே கண்டெடுத்தாய்?” —இப்படி எட்வோட் லாங் என்ற நண்பன் கேட்டுக்கொண்டே, அவளை விரைத்து விரைத்துப் பார்த்தான்.

“அவள் உனக்கு மட்டுந்தான் சொந்தமா அல்லது......” என்று பேச்சை முடிக்காமலேயே பான்சாவ் உரக்கச் சிரித்தான்.

“எவன் அதிகப் பணம் தருகிருனோ, அவன் எடுத்துக்கொள்ளலாம்!” என்று பைரன் பதிலளித்தான்.

“ஏலம்! ஏலம்! அழகான ஒரு பெண் ஏலம்!” என்று குடிமயக்கத்திலிருந்த நண்பர்கள் கத்தினார்கள்.

எல்லோரையும் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு, முன்னே வந்து நின்றான், ஸ்ரோப்.

“நன்ருகப் பாருங்கள்! நியாயமாகக் கேளுங்கள்! தக்க பருவத்திலே நிற்கும் தங்கச் சிலை! போனால் கிடைக்கமாட்டாள்! கிடைத்தால் போகமாட்டாள்! கேளுங்கள்! கிளிமொழியாளுக்கு ஏற்ற விலையாகக் கேளுங்கள்!” என்று ஏலம் விடுபவன் பேசுவதைப் போல, ஸ்ரோப் பேசினான்.

“பைரன்! இதென்ன வேடிக்கை? இவர்கள் என்னைக் கேவலமாக நடத்துகிருர்களே! பார்த்துக்கொண்டு சும்மா நிற்கிறீரே, பைரன்!” என்று சுசான் கத்தினாள்.

"அழைப்பில்லாமல் வந்திருக்கும் விருந்தாளி நீ! அழைப்பில்லாமல் வரும் விருந்தாளிக்கு என்ன நடக்குமோ, அதுதான் இப்பொழுது நடைபெறுவது!" என்று கூறிவிட்டு, முகத்தைத் திருப்பிக்கொண்டு, ஜன்னலின் அருகே சென்றான், பைரன்.

"கேளுங்கள்! இவள் சிரித்தால், வைரங்கள் உதிரும்! அழுதால், அகிலின் வாசனை எழும்! இவள் வீட்டிலிருந்தால், விளக்கு வேண்டாம்! காட்டிலிருந்தால், துப்பாக்கி வேண்டாம்! கேளுங்கள்! நியாயமான விலை கேளுங்கள்!" என்று ஸ்ரோப் கத்தினான்.

"இருபது கினிகள்!"—இப்படிக் கூட்டத்தில் ஒருவன் சொன்னான்.

"இருபது கினிகளா? பார்த்தால் சொக்கிவிடும் பஞ்சவர்ணக் கிளிக்கா, இருபது கினிகள்? அவமானம்! கேளுங்கள்! தந்தத்தில் கடைந்தெடுத்த இந்தப் பதுமையை, தக்க விலைக்குக் கேளுங்கள்!"

"இருபத்தைந்து!"

"முப்பது!"

"மேலே ஐந்து!"

"முழு நிலவை முப்பத்தைந்து கினிகளுக்கா கொடுத்துவிடுவேன்! முடியாது! கேளுங்கள்! நியாயமான விலை கேளுங்கள்! அழகிய ரோஜாவிற்கு முள் உண்டு—அவளிடம் அது இல்லை! தித்திப்பான கனியினுள்ளே கொட்டை உண்டு—அந்தத் தொல்லை இவளிடமில்லை! தேன் கூட்டில் ஈக்கள் உண்டு—

அப்படிப்பட்ட ஆபத்து இவளிடமில்லை! கேளுங்கள்! நியாயமான விலை கேளுங்கள்!"

"நாற்பது!"—குடிபயக்கத்தில் மேஜையின்மீது விழுந்து கிடந்த பான்ஸாவ், மெதுவாகத் தலையைத் தூக்கி இப்படிக் கேட்டான்.

"பரவாயில்லை! சுமாரான விலை! ஆனாலும் இந்த விலைக்கு நான் கொடுத்துவிடமாட்டேன்! கேளுங்கள்......" என்று ஸ்ரோப் பேசிக் கொண்டே போனான்.

"பைரன்! இவர்களைச் சும்மா இருக்கச் சொல்! இந்த அவமானத்தை என்னால் தாள முடியாது! இப்படி நான் விலை கூறி விற்கப்படலாமா? இது நியாயமா, பைரன்?"—ஆத்திரத்தைத் தாள முடியாமல், சுசான் அழுதாள்.

அவர்களிடமிருந்து தப்பிக்க எண்ணி, ஓட ஆரம்பித்தாள். திடீரென்று ஒருவன், அவளது மேல் சட்டையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். வேகத்தால் அது, நீளமாகக் கிழிந்துவிட்டது. கிழிந்த இடத்தில், இளமையான அவளது உடலின் கட்டு நன்றாகத் தெரிந்தது.

ஸ்ரோப் அவள் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். வெளியே தெரிந்த அவள் உடற் பாகத்தை, அனைவருக்கும் திருப்பிக் காட்டினான்.

"கேளுங்கள்! நன்றாகப் பார்த்துக் கேளுங்கள்! பருவ மங்கையின், பளபளப்பான உடலைப் பாருங்கள்! இளமையின் பூரிப்பு, எப்படி இருக்கிறதென்பதைக்

கவனியுங்கள்! உடலையும் முகத்தையும் உற்றுப் பார்த்துக் கேளுங்கள்! நியாயமான விலை கேளுங்கள்!"

"ஐம்பது!"—தலையைத் தூக்கி மறுமுறையும் பான்ஸாவ் கேட்டான்.

"ஐம்பதுக்கு மேலே யாராவது கேட்கிறீர்களா?" என்று ஸ்ரோப் உரத்த குரலில் கேட்டான்.

அந்த விளையாட்டில் அனைவருக்கும் சலிப்புத் தட்டிவிட்டது. ஆகவே ஒவ்வொருவராகத் தள்ளாடிக் கொண்டே, அறையை விட்டு வெளியே செல்ல ஆரம்பித்தனர்.

"ஐம்பது! ஒன்று......இரண்டு......இரண்டு...... இரண்டு.........மேலே யாரும் கேட்கவில்லையா?......... இரண்டு......மூன்று!"—ஸ்ரோப் ஏலத்தை முடித்து விட்டான்.

அவளை இழுத்துக்கொண்டு போய், பான்ஸாவ் கையில் பிடித்துக்கொடுத்தான்.

"இவள் உனக்கு விற்கப்பட்டு விட்டாள்! பணத்தைப் பைரனிடம் தந்துவிடு!" என்று ஸ்ரோப் கூறிவிட்டு, அறையைவிட்டு வெளியே சென்று விட்டான்.

அவள் கதறியழுதாள். பைரனைப் பார்த்தாள். அழகான சிலைபோல அவன் நின்றிருந்தான். அப்படிப் பட்ட காதலன், இனி அவளுக்குக் கிடைக்கப் போவதில்லை.

மெதுவாக எழுந்து சென்று அவன் கைகளைப் பிடித்தாள். அவன் உதறிக்கொண்டான்.

"பைரன் !"—முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு கதறினுள்.

திடீரென்று மேரி சாவொர்த்தின் கவனம் அவனுக்கு வந்தது. அன்ெெருரு நாள் நந்தவனத்தில் நடந்த காட்சி, அவன் மனக் கண்முன் தோன்றி மறைந்தது. "அவள் என்மீது இரக்கம் காட்டிஞளா—நான் இவள்மீது இரக்கம் காட்ட?"—இப்படி அவன் முணுமுணுத்துக் கொண்டான்.

புயலிலும் மழையிலும் ஆரம்பமான அவர்கள் காதல், இந்த அறையின் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் முடிந்துவிட்டது என்பதை அவள் நன்கு அறிந்து கொண்டாள்.

பான்ஸாவ் தள்ளாடிக் கொண்டே வந்து, பணத்தைப் பைரனிடம் தந்தான். அதை அவன் அவளிடம் தந்துவிட்டான்.

"நான் வருகிறேன், பைரன் !"—தேம்பும் குரலில் அவள் கூறினுள். அவள் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது.

குடிமயக்கத்திலிருந்த பான்ஸாவை விழாமல் பிடித்துக்கொணடு, அறையை விட்டுச் செல்லப் புறப் பட்டாள். வாயிற்படியின் அருகே சென்றதும், பைரனைத் திரும்பிப் பார்த்தாள் ! கண்ணீரால் அவள் பார்வை மறைந்துவிட்டது !

# 6. காலத்தில் கிடைக்காத கனி

கேம்பிரிட்ஜில் பைரனின் காதல் விளையாட்டு சுசாதனேடு முடிந்து விடவில்லை. உல்லாசபொழுதை உடல் மினுக்கிகளோடு கழிப்பதை, அவன் குறைத்துக் கொள்ளவில்லை.

அணங்குகளின் தொடர்பு, அவனுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாயிற்றோ, அவ்வளவுக்கவ்வளவு கடனும் அதிகமாயிற்று. கட்டழகிகளின் இணைப்பும், கடன் தொல்லையும் பெருக பெருக—அவனது கவிதா சக்தியும் ஊற்றெடுத்து உந்தி எழுந்தது.

இதற்கிடையில் சவுத்வெல் என்ற ஊரில், தன் தாயோடு அவன் தங்கியிருக்க நேரிட்டது. அன்னையின். குற்றச்சாட்டுகளும், மிதமிஞ்சிய குடியும், அவனைக் கவலையில் ஆழ்த்தின. சங்கடங்களை மறக்க சரசக்காரிகளின் அணைப்பை நாடினன்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்—1807-ம் ஆண்டு கோடைக்காலத்தில்—வீணன காலம் (Hours Of Idleness) என்ற அவனது கவிதைத் தொகுதி வெளியாயிற்று. "இந்தக் கவிதை நூல் எனக்குப் புகழையும் பணத்தையும் வாரி வாரித் தரப்போகிறது!" என்று எண்ணி, எதிர்பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு—அது உள்ள வேதனையைப் பரிசாகத் தந்தது.

அந்த ஏட்டைப் பற்றி பத்திரிகாசிரியர்கள், ஏளனமாகவும் — கேவலமாகவும் — இகழ்ச்சியாகவும், மதிப்புரைகள் வழங்கினர். "இப்படிப்பட்ட கவிதைகளைப்

புனைந்ததின் மூலம், இந்நூலாசிரியர் தம்மைத் தாமே படுபள்ளத்தில் தள்ளிக் கொள்கிறார்!" என்று "எடின் பர்க் ரிவியூ" என்ற பத்திரிகை காரசாரமாகக் கண்டனக் கணைகளைத் தொடுத்தது.

அவ்வளவு தூரம் பத்திரிகாசிரியர்கள் அந்த நூலை,, ஏன் கண்டித்தார்கள்? அந்தச் சுவடி முழுவதும். அப்பட்டமான காதற் கவிதைகளாகவே இருந்தன! காதல் வேகத்தைத் தாள முடியாமல், கதறினார்கள்! கடுஞ்சினங் கொண்டார்கள்!

அவர்களின் அறியாமையைக் கண்டு, பைரன் நகைத்தபோதிலும்—மனக்கவலை அடையாமல் இருக்க முடியவில்லை!

முதற் கவிதைத் தொகுதி வெளியான அடுத்த ஆண்டு—1808—அவன் கடன் தொல்லை, விஷம்போல் ஏறிவிட்டது.

அப்பொழுது அவனுக்குக் கடன், ஏறக்குறைய 12000 பவுன்கள்—சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு மேல்—இருந்தன.

சவுத்வெல் என்ற நகரம் அவனுக்குக் கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. சுவையற்ற சுந்தரிகளோடும், ஒழுக்க முள்ள கன்னியரோடும் அவன் பழகவேண்டி யிருந்தது. அவனுக்கு எவ்வளவு கடனிருக்கிறது என்ற செய்தியை, அவ்வூர் பெண்கள் தெரிந்து கொண்டார்கள்.

அந்த ஊரில் தனவந்தனான ஒரு வியாபாரியின் மகள் இருந்தாள். அவள் பெயர் லூசி கிராம். கல்யாண மாகாத அவள், பைரனுக்குக் காதல் விருந்தளித்தாள்

அழகான ஆடைகள் அணிந்து வழக்கப்படி ஒரு நாள், ஒரு ஓட்டலினுள் நுழைந்தான். நடனம் நடை பெற்றுக் கொண்டிருப்பதையும், மேஜைகளின் பக்கத்தில் அணங்குகள் அமர்ந்திருப்பதையும் அவன் கண்டான்.

அவன் உள்ளே வந்ததும், அங்கே இருந்த பெண்களின் விழிகள் அவன்மீது பாய்ந்தன. வாய்கள் அவனைப் பற்றி பேச ஆரம்பித்துவிட்டன.

“இவனுக்கு ஏராளமாகக் கடனிருக்கிறதாமே!” என்று ஒருத்தி, பக்கத்திலிருந்தவளிடத்தில் கூறினாள்.

“ஆமாம், நானும் கேள்விப்பட்டேன்! கேம்பிரிட்ஜில் ஒரு பெண்ணை இவன் ஏலம் போட்டானும்!”

“ஒழுங்காக இருக்கிறான் பார்வைக்கு—ஒழுக்கத்திற்கும் இவனுக்கும் சம்பந்தமே கிடையாதாமே!”

“பெண்களிடம் பழகுவதனாலேயே ஒருவன், ஒழுக்கம் தவறியவன் ஆகிவிடுவானா?”

“ஏதேது உனக்கும் இவன்மீது......”

இப்படித் தன்னைக் குறித்துப் பெண்கள் நடத்திய பேச்சு, அவன் காதில் தெளிவாக விழுந்தது. கெட்ட வதந்தியோடு சொந்த கற்பனையையும் சேர்த்துக் கொண்டு, வம்பளப்பவர்கள் பெண்கள்—என்ற உண்மையை அவன் நன்கறிவான். ஆகவே, அவன் வெட்கமோ வேதனையோ கொள்ளவில்லை.

பாடசாலை நாட்கள் அவன் கவனத்திற்கு வந்தன. அத்துடன் அழகி மேரியும், அவன் அகக் கண்முன் தோன்றி மறைந்தாள்.

மேரி அவன் காதலைப் புறக்கணிக்காமல் இருந்திருந்தால், இருவரும் கணவனும் மனைவியுமாகி விட்டிருப்பார்கள். காதல் பூர்த்தியாகி விட்டிருந்தால், இப்படிப் பட்ட கஷ்ட நிலைமைக்கு அவன் ஆளாகி விட்டிருக்க மாட்டான். பயனற்றுப்போன நாட்கள், பயங்கரமான எதிர்காலம், கடன் தொல்லை—இப்படிப்பட்ட இன்றைய நிலைமைக்கு, மேரிதான் காரணம் என்று அவன் எண்ணினான்.

அவளைத் திருமணம் செய்து கொண்டிருந்தால், குழந்தைகள் பெற்றுக்கொண்டு, அந்தக் கிராமத்திலேயே அவன் நாட்கள் குதூகலமாகக் கழிந்து விட்டிருக்கும். எதிர் காலமும் பிரகாசத்தோடு தோன்றியிருக்கும். அவன் எதை எதையெல்லாம் உள்ளத்தில் எண்ணியிருந்தானோ, அவ்வளவும் சிதைந்து சின்னபின்னமாகி விட்டதாக அவன் நினைத்தான் அந்த நினைப்பும், பெண்களின் பேச்சும், அவனைக் கவலையில் ஆழ்த்தின.

முகம் திருப்பிப் பார்த்தபோது, அவனை நோக்கி ஒரு பெண் வந்துகொண்டிருப்பதைக் கண்டான். அவன் நரம்புகளில் இரத்தம் வேகமாக ஓடியது. கன்னங்களில் செந்நிறம் அதிகரித்தது. எந்தப் பெண்ணைச் சுற்றி அவன் சிந்தனை வட்டமிட்டுக் கொண்டிருந்ததோ, அதே பெண்—அதே மேரி சாவொர்த்—அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள்!

பழைய மேரி சாவொர்த்துக்கும் இவளுக்கும் எவ்வளவு வித்தியாசம்! கல்யாணமான ஐந்து ஆண்டுகளுக்குள், முகத்திலிருந்த களையே மாறிவிட்டதே!

இளமையின் ரோஜா நிறம், இவளைவிட்டு எங்கே ஓடி விட்டது? அந்தப் புன்னகை, அந்தக் கண்களின் பிரகாசம், அந்தத் துடிதுப்பான செவ்விதழ்கள்—எங்கே அவைகளெல்லாம் இப்பொழுது?

பயம் அவன் உள்ளத்தில் தோன்றி மறைந்தது. அந்த இடத்தை விட்டு உடனே ஓடி விடலாமா, என்று கூட அவன் எண்ணினான். "அவளைக் கண்டால் என்ன பேசுவது? எப்படி நடந்து கொள்வது?"—இந்தக் கேள்விகள், அவன் மனதில் எழுந்து நின்றன.

பருத்து விகாரமாக இருந்த தன் கணவனின் கையைப் பிடித்தபடி, அவள் நடந்து வந்தாள். அவளும் அவனும்—கிளியும் பூனையும்!

"மேரி, உன் தோழிகளோடு பேசிக்கொண்டிரு!" என்று சொல்லி, அவளை அங்கே விட்டு விட்டு அவன் சென்று விட்டான். குடித்து விட்டு, தன் நண்பர்களோடு சீட்டாட அவன் செல்கிறான் என்பதை அவள் நன்கறிவாள்.

பைரனின் முகத்தைப் பார்த்தபடி, அவள் நடந்து வந்தாள். இருவர் முகத்திலும் புன்னகை தவழ்ந்தது.

"பைரன்! இது மிகவும் ஆச்சரியமான நிகழ்ச்சி! உன்னை நான் இங்கு சந்திப்பேன் என்று, கனவுகூடக் காணவில்லை!"—இப்படிச் சிரித்துக்கொண்டே கூறி, அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

"இவனைப் புறக்கணித்தது ஏன்? ஏன்? ஏன்? எனக்கு அப்பொழுது பைத்தியம் பிடித்திருக்க வேண்டும்!" என்ற எண்ணம், அவன் முகத்தை உற்றுப் பார்த்ததும், அவள் உள்ள [illegible] பூந்தது.

அப்பொழுது பார்த்ததைவிட இப்பொழுது வளர்ந்து மிகவும் அழகாக இருந்தான். அவனைச் சந்தித்த அந்தச் சில விநாடிகளிலேயே, அவனிடம் அவளுக்கு மிகுந்த தொடர்பு ஏற்பட்டுவிட்டதாக, அவள் உணர்ந்தாள். அவன் பேசவில்லை. மனதில் மலைமலையாக உணர்ச்சிகள் எழுந்தன.

இத்தனை நாட்களாக அடிக்கடி அவன் கவனத்திற்கு வந்துகொண்டிருந்த பெண் இதோ பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்! என்ன பேசுவது?...... உணர்ச்சிகளின் கொக்கரிப்பால்; உதட்டை அசைக்கவும் அவனால் முடியவில்லை!

"இங்கு சூடு அதிகமாக இருக்கிறதல்லவா?"—அவள் கேட்டாள் இப்படி.

ஆமாம் என்பதைப்போல தலையாட்டினான். பேச அவனால் இயலவில்லை.

"சிறிது நேரம் நாம், தோட்டத்திற்குச் சென்று உலவிவிட்டு வரலாமே!"—புன்னகையோடு அவள் அழைத்தாள்.

மதுக் கிண்ணங்களின் ஓசை, மங்கையரின் சிரிப்பு—நடன இசையின் ஒலி, நடப்போரின் காலடிச் சப்தம்—இப்படி ஒரே இரைச்சலாக இருந்த அந்த அறையை விட்டு, இருவரும் தோட்டத்தினுள் புகுந்தனர்.

"நம் ஊரையே மறந்துவிட்டாயா, பைரன்?"

"நான் மறக்கவில்லை எதையும்—எதையும்!"

"அன்றுபோல் இன்றும் நீ இளைஞனாகவே இருக்கிறாய்!"

“ இப்பொழுது இளமையை என்னால் உணர முடியவில்லை! என் வயதிற்கு அதிகமாகவே, அனுபவம் பெற்றுவிட்டேன்!” என்று மெதுவாகக் கூறிவிட்டு, அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.

“ இதற்கெல்லாம் காரணம் நீதான்!” இப்படித் திடீரென்று அவளிடம் சொன்னான்.

பரிதாபப்படுபவளைப்போல, அவன் கைகளை அவள் பற்றினாள். சுற்றிலும் செடிகளால் மறைக்கப் பட்டிருந்த ஒரு மேடையை அடையும்வரைக்கும், அவர்கள் பேசாமலேயே நடந்தனர். அங்கே இருந்த ஒரு கல்லாசனத்தின்மீது அமர்ந்தனர்.

மாலை தேய்ந்து, இரவு ஆரம்பமாகிவிட்டது. புயல் வீசும் கடலில் தத்தளிக்கும் படகைப்போல, மேகக் கூட்டங்களுக்கிடையே சிக்கி நிலவு தவித்துக் கொண்டிருந்தது.

அவள் முகத்தை அவன் பார்த்தான். நிலவொளி யில் பழைய மேரியாகவே, அவள் காணப்பட்டாள்.

“ நீ மகிழ்ச்சியாக இருக்கிறாயா?” என்று மெது வாக அவன் கேட்டான்.

“ மகிழ்ச்சியா? அந்தப் பதத்திற்கு, என் வாழ்க்கை அகராதியில் இடமில்லாமல் போயிற்று......பொருத்த மில்லாத மணம்! பெருங் குடியனான கணவன்! உன்னை உதாசினம் செய்தேன்—உதிர்ந்த மலரானேன்!”

“ ஒரு காலத்தில் உன் உணர்ச்சிகள் வேறு விதமாக இருந்தனவே?”

"ஒரு காலத்தில் இளமையோடும் முட்டாள் தனத்தோடும் இருந்தேன்! நாம் இழப்பது எது என்பதை, இளமைப் பருவத்தில், தெரிந்துகொள்ள முடியாது!"

அவள் குரல் நடுநடுங்கியது. கண்கள் நீர் வடித்தன. தேம்பி அழுதாள். அவள் கைகளைப் பிடித்து மெதுவாகத் தடவிக்கொடுத்தான்.

"மேரி, உன்னை நான் காதலித்தேன்! இதயப் பூர்வமாகக் காதலித்தேன்! இன்னும் உன்னை நான் காதலிக்கிறேன்—ஆனால் காலம் அதிகமாகக் கடந்து விட்டது!"

"காலம் கடந்துவிடவில்லை! காலம் அதிகமாகக் கடந்து விடவில்லை, பைரன்! இப்பொழுதும் நாம் ஒருவரை ஒருவர் காதலிக்கலாம்!"

"இப்பொழுதும் என்ற பதத்திற்குள் எவ்வளவு பொருள் அடங்கியிருக்கிறது தெரியுமா, மேரி? உன் கல்யாணம், உன் கணவன், உன் குழந்தை, மறைந்துபோன ஐந்தாண்டுகள்—இவ்வளவும் அந்த இப்பொழுதும் என்ற வார்த்தைக்குள் அடைப்பட்டுக் கிடக்கிறது!"

அப்பொழுது உயிருக்கு உயிராக அவளைக் காதலித்தான். அவள் முகத்தைப் பார்த்து மகிழ்ந்தான். புன்னகையில் சொக்கினான். சிரிப்பில், சிந்தையைப் பறி கொடுத்தான். கிடைப்பாளோ மாட்டாளோ என்றெண்ணி ஏங்கினான். அவள் நினைவால் பல இரவுகள் தூங்காமலேயே பாழாயின. குளிரில் வாடி, கொட்டும் மழையில் காத்திருந்தான். திருமணம் செய்து கொள்ளலாம் என்று வேண்

டினான். திரும்பியும் பாராமல் ஓடினாள். காதல் முறிந்த தற்காகக் கண்ணீரும் விட்டான்........ அதெல்லாம் ஒரு காலம்!

அவன் காதலை, இப்பொழுது அவள் எதிர்பார்க்கிறாள். கொடூரமாக அன்று நடந்து கொண்டவள், இன்று கொஞ்சி மகிழ அழைக்கிறாள்! கல்யாணத்திற்கு மறுத்தாள் அன்று, கட்டியணைக்க விரும்புகிறாள் இன்று!

நந்தவனத்தில் அன்று உதாசினம் செய்ததற்காக இன்று பழிதீர்த்துக்கொள்ள அவன் விரும்பவில்லை அந்தப் பழைய மேரி, அவன் உள்ளத்தில் நிறைந்திருக்கிறாள். புதியதாக மலர்ந்த ரோஜா அவள்! மனதிலிருந்து அந்த ரோஜவை எடுத்துவிட்டு, இந்தக் கசங்கிப்போன ரோஜாவிற்கு இடம் தர, அவன் விரும்பவில்லை.

"இனி பயனில்லை! நீ வேறொருவனின் வாழ்க்கையோடு பின்னப்பட்டு விட்டாய்! முன்போலவே நாம் காதல் கொள்ள, இனி முடியாது!"

"பைரன்!" ஏமாற்றத்தின் எதிரொலி, அவள் குரலில் நிறைந்திருந்தது.

"காலம் கடந்து விட்டது!" அவன் குரலிலும், சோகம் தேங்கியிருந்தது.

"நீ எவ்வளவு மாறிவிட்டாய், பைரன்!"

"இதற்கெல்லாம் காரணம் நீதான் மேரி! ஒழுங்கான ஒரு கணவனாகத் திகழ, நான் ஆசைப்பட்டேன்!

மனைவியைத் தவிர மாற்ருள் முகத்தையும் பார்க்காத, இலட்சிய புருஷனாக விளங்க விரும்பினேன்! அந்த இலட்சியம் உன்னால் தவிடு பொடியாக்கப்பட்டு விட்டது! மலருக்கு மலர் பறந்து செல்லும் வண்டாகி விட்டேன்! வித விதமான கனிகளைத் தேடிச் செல்லும் பறவையாகி விட்டேன்! பதினேழு வயதாக இருந்த அந்த பைரனாக, இனி நான் மாற மாட்டேன்—மாறவும் முடியாது!"

"பிரிந்தவர் திரும்பவும் ஒன்ருகச் சேர்ந்திருக்கிரேம்! என் காதலை ஏற்றுக் கொள்! கெஞ்சுகிறேன்! பைரன்! மறுக்காதே—மரணத்தின் வாயில் என்னைத் தள்ளாதே!"

"வேண்டாம் மேரி, வேண்டாம்! உன்னை நான் ஏற்றுக் கொண்டால், என் உள்ளத்தின் சுடர் விளக்கான அந்த மேரி செத்துவிடுவாள்! அந்த மேரிதான், என் கவிதையின் ஜீவன்—கற்பனையின் ஊற்று! அவளை இழக்க ஒருபோதும், நான் ஒப்பேன்!" என்று கூறி, வேகமாக அவ்விடத்தைவிட்டுச் சென்று விட்டான்.

அவன் உருவம் இருளில் சென்று விட்டதை, அவள் கண்டாள்; தேம்பி யழுதாள். அவன்மீது அவளுக்குக் கோபம் வரவில்லை — அனுதாபமே ஏற்பட்டது. "இவனை மணந்திருந்தால், வாழ்வு பூஞ்சோலையாகி விட்டிருக்குமே!" துக்கத்தோடு இப்படி, முணுமுணுத்துக் கொண்டாள். அவன் சென்ற திசையைப் பார்த்தாள். அவள் இளமை, அவள் எதிர்கால நம்பிக்கை—எல்லாமே அவனோடு போய்விட்டதாக உணர்ந்தாள்.

# 7. தந்தை இப்படி! மகள் அப்படி!

ஓட்டலைக் கடந்து காலையில் நடந்து கொண்டிருந்தான், பைரன். தன்னைத் தானே அவன் வெறுத்துக் கொண்டான். "மலர் வாடிவிட்ட பிறகு, உண்டோ, பயன் ?'' மெதுவாக இப்படிக் கூறிக்கொண்டான்.

மேரியின்மீது கொண்ட காதல் இன்னும் அவன் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்துக்கொண்டிருந்தது. அவளைத் திரும்பவும் ஏற்றுக்கொள்ள முடியுமா? ஏற்றுக்கொண்டால், இருவரின் வாழ்க்கையுமல்லவா பாழ்பட்டுவிடும்? சிந்தனையால் அவன் உள்ளம் குழம்பி விட்டிருந்தது.

மன வருத்தத்தைத் தீர்க்கும் மருந்தாக, லூசி கிராமை நாடிச் செல்ல நினைத்தான்.

லூசியின் வீட்டினுள் அவன் நுழைந்தபோது, அவள் தந்தை எட்கார் கிராம், அங்கே உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவனைக் கண்டதும் அக்கிழவன், முகத்தைக் வேறு பக்கமாகத் திருப்பிக் கொள்ளவே, பைரன் மாடிமீதேறி அவள் படுக்கை அறையினுள் சென்றான்.

எட்கார் கிராம், ஒரு பலசரக்கு வியாபாரி. செலவு என்றால் கண்களை இறுக மூடிக் கொள்வான். பணமென்றால் வாயை அகலமாக விரிப்பான். "பணம்! பணம்!'' இதுதான் அவன் வாழ்க்கையின் இலட்சியம். பணம் படைத்த ஒருவனுக்கு, தன் மகளைக் கல்யாணம் செய்துவைக்க வேண்டுமென்ற ஆசை, அவனுக்கு

அதிகம். ஆகவே தன் மகன் ஏழைகளோடு, எக் காரணத்தைக் கொண்டும் பழகாதபடி, பத்திரமாகப் பார்த்துக் கொண்டான்.

ஏராளமான சொத்துக்குப் பைரன் சொந்தக்காரன் என்பதை அறிந்ததால், மகளோடு அவன் பழகுவதை அக்கிழவன் தடை செய்யவில்லை. பழகுவதைத் தடுத் தால், பழமை விரும்பி என்று தன்னைப்பற்றி பைரன் எங்குத் தப்பாக எண்ணி—மகளைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் போய்விடுகிருனே—என்ற பயம் அவ னுக்கு!

பழகும் நேரத்தில் மகளின் பரிசுத்த கற்பு, பறி போய்விட்டாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமே என்ற திகிலும், அவனுக்கு இருந்து வந்தது.

பைரன் வரும் நேரங்களில், தாெனாரு மதிப்பான குடும்பத்தைச் சேர்ந்தவன்—பணமும் நிறைய படைத்த வன்—நவநாகரீகத்தை நன்ருக அறிந்தவன்—என்ப தைக் காட்டிக்கொள்ள, அக்கிழவன் தவறுவதில்லை.

எனவேதான், அன்று பைரன் மாடியின்மீது ஏறியதைப் பார்த்தும்—பார்க்காதவனைப் போலவும் மகளின் படுக்கையறையின் கதவு திறந்து மூடும் சப்தத் தைக் கேட்டும்—கேட்காதவனைப் போலவும், இருந்து விட்டான். பெரிய மனிதனுக இருப்பவன், இப்படிப் பட்ட அற்பமான விஷயங்களை எல்லாம், கவனிக்கக் கூடாது அல்லவா?

வாலிபர்கள் என்ருல் லூசிக்கு ஒரே தித்திப்பு பல ரகமான காளைகளோடு பழகுவதிலே, அவளுக்கு

அலாதியான ஆசை. உடல் உறுதியும், உல்லாசப் போக்கும் கொண்ட எவனையும், அவள் வெறுத்து ஒதுக்குவது கிடையாது.

ஒருநாள் அவள் பைரனைச் சந்தித்தாள். அவன் முகம் அழகாக இருப்பதைக் கண்டாள். உல்லாச மாகப் பேசினாள்—உறுதியான உடல் கொண்டவன் என்பதை அறிந்தாள். பைரனை ஒப்பிடும்போது, அவ ளது முன்னைய காதலர்கள் எல்லாம் வெறும் சொத்தை கள், என்பதாக உணர்ந்தாள்.

பைரன் அன்று எதிர்பாராத விதமாக வந்ததால், அவள் அதிக மகிழ்ச்சியடைந்தாள். மொழியால் அன் போடு வரவேற்று, விழியால் கட்டிலைக் காட்டினாள். அவன் சிரித்தான். மடியில் அவள் சாய்ந்தாள். வீணை யின் தந்தி அசைந்தது; வீரிட்டு இசை எழுந்தது!

பைரன் தூங்கிவிட்டான். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. ஆகவே அவன் முகத்தைப் பார்த்தபடி, பக் கத்தில் சாய்ந்திருந்தாள். உறுதியானவன். உவப்பளிப் பதற்கு ஏற்றவன். காதல் யாத்திரை அவள் புறப்பட் டது முதல், இப்படிப்பட்ட காளையை அவள் கண்ட தில்லை. அழகிய அவனது முகத்தைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு மகிழ்ச்சிப் பொங்கியது. நிம்மதியோடு கண் களை மூடினாள்—நித்திரையில் ஆழ்ந்தாள்.

திடீரென்று கிழவன் விழித்துக்கொண்டான். மக ளிடம் பேச சென்ற பைரன், மறுபடியும் திரும்பவில்லை என்ற விஷயம் கவனத்திற்கு வந்ததும், பதை பதைத்து எழுந்தான். இரவு மணி மூன்று என்பதை அறிந்

ததும், அவன் திகில் அதிகமாற்று. மகள் என்ன வானுளோ—அவன் இதயம் துடித்தது.

அவசர அவரமாக மாடிக்குச் சென்றான். மகளின் மஞ்ச அறையின் தகவைத் தள்ளினுன், திறக்க! திறக்க அது உள்ளே தாளிடப் பட்டிருப்பதைக் கண்டதும், என்ன விபரீதம் நடந்துவிட்டதோ என்ற கிலி, அவனைப் பிடித்தாட்டியது.

கதவை மெல்லத் தட்டினுன். திறக்கவில்லை. அழுத்தித் தட்டினுன் திறக்கவில்லை. ஆத்திரங்கொண்டு எட்டி எட்டி உதைத்தான்!

பைரன் விழித்துக் கொண்டான் "லூசி! லூசி'!" என்று கிழவன் அழைக்கும் சப்தமும், கதவை உதைக்கும் ஓசையும் கேட்டு, அவன் திடுக்கிட்டான். பக்கத்தில் படுத்திருந்த லூசியைத் தட்டி எழுப்பினுன். மெதுவாக அவள் கண்களைத் திறந்தாள்.

"உன் அப்பா வந்துவிட்டார், லூசி!" என்று சொல்லிக்கொண்டே, ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டான்.

"இப்பொழுது நாம் என்ன செய்வது?" என்று பயந்து அவள் கேட்டாள்.

"நடக்க வேண்டியது நடந்துவிட்ட பிறகு, நடுங்கி என்ன பயன்? முதலில் ஆடை உடுத்திக் கொள்!"

"அவர் கோபிப்பாரே!"

"எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன், லூசி!"

உள்ளே, லூசி ஆடைகளைச் சரி செய்துகொண்டு, தலை மயிரைத் தள்ளிக் கொண்டிருக்கும்போது—வெளியில், கிழவன் மகள் கெட்டுவிட்டாள் என்ற முடிவிற்கு வந்துவிட்டான். இரவு மூன்று மணிக்கு மகளின் படுக்கையறையில் ஒரு வாலிபன்! ஒரு தந்தையின் பெருமைக்கு இது இழுக்கு அல்லவா? மதிப்பைக் காப்பாற்றிக்கொள்ள ஒரே வழி—திருமணம்! கிழவனின் யோசனை இப்படியெல்லாம் சென்றுகொண்டிருந்தது.

"விரைவாகக் கதவைத் திறந்துவிடு, லூசி! இல்லாவிட்டால், உன் அப்பா போடுகிற சப்தத்தில் அண்டை வீட்டார் எல்லோரும் எழுந்துகொள்வார்கள்!"

லூசி கதவைத் திறந்தாள்.

"இதென்ன அக்கிரமம்!" என்று கிழவன் கத்தினான். உதறும் அவன் கையிலிருந்த, மெழுகுவத்தி ஆடியது. மெதுவாக அறையைவிட்டு, பைரன் வெளியே வந்தான்.

"என் மகளைப் பாழ்படுத்தி விட்டாய் நீ!" என்று கிழவன் அலறினான்.

"பார்த்துச் சொல்லுங்கள் இவளை—பாழா? படுத்தியாவிட்டேன்?" பைரன் இப்படிச் சொன்னதும், கிழவனின் கோபம் அதிகமாயிற்று.

"இந்தத் திருட்டுச் செயலுக்காக, இவளை நீ திருமணம் செய்துக் கொள்ள வேண்டும்!"

"நீங்கள் தவருக எண்ணிவிட்டீர்கள்!"

"இவளோடு உனக்குள்ள உண்மையான தொடர்பை, இனி உன்னால் மறக்க முடியாது! மறைத்தாலும் நான் ஒத்துக்கொள்ளமாட்டேன்!"

"நான் மறைக்கப் போவதில்லை!"

"அப்படியானால், இவளை நீ கல்யாணம் செய்து கொண்டுதான் ஆகவேண்டும்!"

"என்னால் முடியாது!"

"முடியாதென்றாலும், நான் சும்மா விடமாட்டேன்!"

"சரி, நான் திருமணம் செய்துகொள்கிறேன்!"

கடைசியில் பைரன் ஒத்துக்கொண்டது, கிழவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. திருமணத்திற்குத்தான் சம்மதித்தாயிற்றே. இனி அவளைத் தொட்டால் என்ன? தந்தையின் எதிரிலேயே மகளுக்கு முத்தமிட்டான்!

"இதையெல்லாம் நாம் இனி கவனிக்கக் கூடாதென்று கிழவன் மாடியைவிட்டுக் கீழே இறங்கிவிட்டான்!

"லூசி! எப்படி உன் தந்தையை ஏமாற்றிய என் திறமை?" என்று பைரன் கேட்டதும், அவள் சிரித்தாள். கல்யாணத்தைப்பற்றி கவலையே, அவளுக்கு எப்பொழுதும் ஏற்பட்டது கிடையாது! இனிமேலும் ஏற்படப் போவதில்லை!

பலசரக்கு வியாபாரியின் வீட்டை விட்டு, பைரன் வெளியே புறப்பட்டான். "காதலுக்காக உயிரையும் விடுவேன்," என்று சொல்லும் பெண்களின் கூட்டத்தைச் சேர்ந்தவள் அல்ல, லூசி! காதலுக்கு முக்கியத்துவம் தராத அவள், பைரனுக்கு மிகவும் பிடித்திருந்தாள்.

## 8. சுரண்டற் கூட்டமும் சூதாட்டமும்

அடுத்த நாள் தன் தாய் உட்கார்ந்திருந்த அறையினுள் பைரன் வந்தான். அப்பொழுது பகல் மணி பதினொன்று இருக்கும்.

சவுத்வெல் அவனுக்கு மிகவும் வெறுத்து விட்டது. இனியும் அந்த ஊரில் இருப்பது என்பது, அவனால் முடியாத காரியம். பண நெருக்கடி அதிகமாகிவிட்டதால், மேலும் அங்கிருப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்தான்.

திடீரென்று அவன் மனதில் ஒரு யோசனை தோன்றியது. வட்டிக்குப் பணம் வாங்கிக்கொண்டு, வருத்தம் தெரியாமல் கொஞ்ச காலம் லண்டனில் கழிக்க, அவன் தீர்மானித்தான்.

"இன்று நான் லண்டனுக்குப் போகலாம் என்று இருக்கிறேன்!" தாயின் முகத்தைப் பார்த்தபடியே இப்படி அவன் கூறினான்.

"இதற்கெல்லாம் உன்னிடம் பணம் ஏது?" வெறுப்போடு அவள் கேட்டாள்.

"வட்டிக்குப் பணம் வாங்கப் போகிறேன்!"

"வட்டிக்குப் பணமா? அது ஆளையே விழுங்கி விடுமே!"

"நான் முடிவு செய்து விட்டேன்!"

அவளோடு மேலும் பேச்சு வளர்த்த விரும்பாததினால், அந்த அறையைவிட்டு வெளியே சென்றான். பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களைத் தயார் செய்யும்படி வேலைக்காரனுக்குக் கட்டளையிட்டான். அதிகமான வட்டிக்குக் கடன் வாங்கிக்கொண்டு, லண்டனுக்குச் சென்றான்.

அந்த பணத்தைக்கொண்டு—கடன் தொல்லைகளைச் சிறிது குறைத்துக் கொண்டு—அங்கே ஓரளவு நிம்மதியாக நாட்களைக் கடத்தி வந்தான்.

"ஆங்கிலக் கவிஞரும், திறமையற்ற விமரிசனரும்" (English Bards and Scotch Reviewers) என்ற நூலை எழுதி அப்பொழுதே வெளியிட்டான்.

"எடின் பர்க் ரிவியூ" என்ற பத்திரிகை, அவனது முதற் கவிதைத் தொகுதியைப்பற்றி, மிக மிகக் கேவலமாக மதிப்புரை தந்திருந்தது. அந்தப் பத்திரிகையின் போக்கைக் கண்டிப்பதற்காகவே, அந்நூலை அவன் எழுதினான். பதினெட்டாம் நூற்றாண்டின் ஈடும் இணையுமற்ற வசைப்பாடல் நூலாக அது திகழ்ந்தது.

நியூஸ்டீட் என்ற தன் சொந்த கிராமத்திற்கு 1809-ம் ஆண்டு அவன் திரும்பினான். ஆங்காங்கே உதிர்ந்தும், மிகவும் பழமையாகவும், இருந்த சொந்த

வீடு, புதிய கட்டிடத்தைவிட மதிப்பு வாய்ந்ததாகவும் கவர்ச்சிகரமாகவும் அவனுக்குத் தோன்றியது. அங்கே அமைதியும் ஆறுதலுமிருப்பதாக உணர்ந்தான்.

மனதில் அலை மோதிக்கொண்டிருந்த உணர்ச்சிகளைக் கவிதைகளாக வடித்தான். அதே ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் தேதி, அவனது இருபத்தோராம் பிறந்த நாள் வரவிருந்தது. அதற்கான அழைப்புகளை, தன் தோழர்களுக்கு அனுப்பினான்.

அவனது இருபத்தோராம் பிறந்தநாள் உதயமாயிற்று. சீனப்பட்டுத் திரைகளை விலக்கிக் கொண்டு கட்டிலைவிட்டு வெளியே வந்தான். எவ்வளவு மகிழ்ச்சியோடு அத்தினம் கழியப் போகிறதென்பதை எண்ணியதும், அவன் உள்ளம் பூரித்தது.

மாடியில் நின்றபடியே வெளியே பார்த்தான். அவன் வீட்டைச் சுற்றியிருந்தபடியே இடங்கள் ஆள் நடமாட்டமில்லாமல், அருவருப்பாகத் தோன்றியது. இன்னும் சிறிது நேரத்தில் அவனது கேம்பிரிட்ஜ் தோழர்கள் வந்து விடுவார்கள். சூன்யமாகவிருக்கும் இடங்களெல்லாம், கலகலப்பாக மாறிவிடப் போகின்றன. பைரன் முகத்தைத் திரும்பினான். போட்ஸ்வின் என்ற அவனது நாய் பக்கத்தில் நின்றிருப்பதைக் கண்டான். மகிழ்ச்சியால் அது வாலை ஆட்டிக் கொண்டிருந்தது. அதன் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, விருந்திற்கான ஏற்பாடுகள் சரியாக நடைபெறுகின்றனவா, என்பதைக் காண மாடியை விட்டுக் கீழே வந்தான்.

பிரதம சமையற்காரனின் அதிகாரம் தடபுடலாக இருக்கிறது. வேலைக்காரிகள் இப்படியும் அப்படியும் ஓடியோடி வேலை செய்கிறார்கள். காய்கறிகளை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். ரொட்டிகள் தயாராகின்றன. பதமாகும் பலகாரங்களின் வாசனை, நாக்கில் தண்ணீர் ஊறச் செய்கிறது.

இவைகளையெல்லாம் கவனித்துவிட்டு, வீட்டிற்கு வெளியே வந்தான். வண்டிகள் வரும் சப்தம் கேட்கவே, அப்பக்கமாகத் திரும்பிப் பார்த்தான். ஸ்ரோப் டேவிஸ், ஆப்பவுஸ் முதலிய தோழர்கள், ஆரவாரத்தோடு வந்து கொண்டிருந்தார்கள்.

விரைவில் அந்த வீடு ஜீவக்களையோடு விளங்கியது. விருந்து ஆரம்பமாயிற்று. மேஜைகளின்மீது ரகரக மான தட்டுகளிலே விதவிதமான தின்பண்டங்கள் வைக்கப்பட்டன. கைக்குக்கை மதுக் கோப்பைகள் மாறிக் கொண்டிருந்தன. மாலை நேரமாக ஆக, விருந் தினர்களின் மகிழ்ச்சியும் பெருகிக்கொண்டே சென்றது.

கடைசியில் வெள்ளி மூடி போட்ட ஒரு பெரிய தட்டை இருவர் தூக்கிக்கொண்டு வந்தனர். அவர்கள் சுமந்துவந்த விதத்தைக் கவனித்தால், அது மிகவும் கனமாக இருந்தது என்பது நன்றாக விளங்கும்.

அது விருந்தினர்களுக்குப் பெருத்த ஆச்சரியத்தை அளித்தது. தட்டில் கொண்டு வருவது என்ன என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

"பெரிய காளையை அப்படியே தீய்த்துக் கொண்டு வருகிறார்களா?" என்று ஸ்ரோப் கேட்டான்.

“உங்களுக்கெல்லாம் மிகவும் பிடித்தமானது!” என்று சிரித்துக் கொண்டே, பைரன் பதிலளித்தான்.

இசை ஆரம்பமாயிற்று. தட்டின் மேல்மூடி அகற்றப்பட்டது. அனைவர் கண்களும் ஆச்சரியத்தால் அகலமாக விரிந்தன!

உடல் நெளிய ஒரு ஒய்யாரி தட்டைவிட்டு எழுந்தாள்! அரை நிர்வாணமாக இருந்த அவள், அங்க அசைவுகளோடு ஆரம்பித்தாள், நடனத்தை! அவளொரு கிராமப் பெண்! அந்தச் சுற்றுப்புற ஊர்களுக்கு அவள் தான் அழகு ராணி!

“இவள் யார்?” என்று ஆப்பவுஸ் வினவினன்.

“இவள் விருந்தினர்களுக்கு அன்பளிப்பா?” என்று துள்ளிக் குதித்துக் கொண்டே, ஸ்ரோப் கேட்டான்.

இருள் மெல்ல மெல்ல படர்ந்துகொண்டே நங்கையின் நடனம், அனைவரையும் களிப்பில் ஆழ்த்தியது.

ஆடல் முடிந்ததும் அவ்வழகி, பக்கத்திலிருந்த தோட்டத்தினுள் ஓடினள். தோழர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். ஸ்ரோப் அவளைத் துரத்திக் கொண்டு ஓடினன்.

அன்றிரவு கழிந்து மறுநாள் பொழுது புலர்ந்தது. விருந்துக்காக வந்திருந்த கிராம வாசிகள், தம் தம் ஊர்களுக்குப் புறப்பட்டார்கள். ஸ்ரோப்பும், ஆப்பவுஸும் வேட்டை நாய்களை அழைத்துக்கொண்டு, வேட்டைக்குப் புறப்பட்டார்கள்.

அறையில் பைரன் மட்டும் தனிமையில் உட்கார்ந்திருந்தான். எதிர்பார்த்த பணம் கிடைக்காததினால், அவன் வெளிநாடுகளுக்குச் செல்ல போட்டிருந்த திட்டம், பூர்த்தியாகாமல் போய்விடும்போலிருந்தது. அந்தச் சிந்தனையிலேயே அவன் ஆழ்ந்து விட்டிருந்தான்.

திடீரென்று ஒரு பெண்ணின் கதறல் கேட்டது. அந்தச் சப்தம், பைரனைச் சிந்தனையிலிருந்து விழித்தெழச் செய்துவிட்டது. ஏதோ எதுவோ என்று பயந்து கீழே வேகமாக வந்தான்.

"நாய்! நாய்!" என்று கத்திக் கொண்டே, ஒரு பெண் இப்படியும் அப்படியும் பயந்து ஓடிக்கொண்டிருந்தாள். போட்ஸ்வின் குலைத்துக் கொண்டே, அவளைத் துரத்திக் கொண்டிருந்தது. அதன் கண்கள் அகலமாக விரிந்திருந்தன. வாயிலிருந்து எச்சில் ஒழுகிக் கொண்டிருந்தது. அவளது ஆடையைப் பிடித்து, அது கிழித்துவிட்டது.

"போட்ஸ்வின்!" பைரன் அழைத்தான்.

அவன் அழைத்ததை அது பொருட்படுத்தவே இல்லை. அந்தப் பெண் எங்கோ ஓடி மறைந்துவிட்டதால், வேலைக்காரர்களின்மீது அது பாய்ந்தது. உயிருக்காக அவர்கள் பயந்து ஓடினார்கள். "பைத்தியம் பிடித்த நாய்!" என்ற சப்தம் எல்லாப் பக்கங்களிலும் எழுந்தன.

"போட்ஸ்வின்! போட்ஸ்வின்!" என்று அழைத்துக்கொண்டே அதன் பின்னால் பைரன் ஓடினான். அந்த நாய் திரும்பிக்கூட பார்க்கவில்லை. கடைசியாக ஒரு

கதவின்மீது தலையை இடித்துக் கொண்டு, 'தொப்' பென்று கீழே விழுந்தது.

ஏதாவது அதற்கு அடிப்பட்டு விட்டதோ என்று பதை பதைத்து, அதன் அருகே பைரன் சென்றான். அதைப் புரட்டிப் பார்த்தான். அதன் இதயத் துடிப்பை அறியத் தொட்டுப் பார்த்தான். போட்ஸ்வின் செத்து விட்டிருந்தது! அதை அவனால் நம்பவே முடியவில்லை. ஆசையோடும் அன்போடும் வளர்த்து வந்த நாய் மாண்டுவிட்டது. அவன் கண்கள் கலங்கின. ஆசை யோடு அவன் நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் இக்கதி தானா?

அந்த நாயின் பக்கத்தில், முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு அவன் உட்கார்ந்தான். மாலை வந்து விட்டது. வேட்டைக்குச் சென்ற நண்பர்கள் திரும்பி விட்டார்கள்.

அன்றிரவே பிக்கடில்லி என்ற ஊருக்குச் செல்ல அவன் தோழர்கள் துடி துடித்தார்கள். மறுநாள் பொழுது விடிந்ததும் நாயைப் புதைக்காமல், தன்னால் வர முடியாது என்று பைரன் கூறிவிட்டான்.

மறுநாள் தோட்டத்தில், அந்த நாயைப் புதைத்து, ஒரு சமாதி கட்டினான். அழகான ஒரு கவிதை எழுதி, அதை ஒரு கல்லில் செதுக்கச் செய்து, அந்தச் சமாதி யின்மீது புதைத்தான்.

ஒரு வாரம் கழித்து ஸ்ரோப் ஆப்பவுஸ் முதலிய தோழர்களோடு, அவன் பிக்கடில்லியில் இருந்தான். நண்பர்களின் பேச்சும், சிரிப்பும் அவன் கவலையை

மறக்கச் செய்தன. வெளிநாடுகளுக்குப் பிரயாணம் செய்ய வேண்டுமென்ற ஆசையை, அவனுல் அடக்க முடியவில்லை.

அவன் விரும்பிய புகழ், அவ்வளவு சுலபமாக அவனுக்குக் கிடைத்துவிடவில்லை. கவிதைகள் வெளியான போதிலும், அவைகளால் ஏமாற்றமும் தொல்லையும் தவிர, வேறொன்றும் கிடைக்கவில்லை. அவனது வக்கீல் ஹான்சன் என்பவரிடமிருந்து பணம் எதிர்பார்த்தான். அதுவும் கிடைக்கவில்லை.

ஒரு நாள் மாலை ஸ்ரோப், ஆப்பவுஸ் ஆகியவர்களோடு, அவன் ஓட்டலுக்குச் சென்ருன்.

"பிரயாணத்திற்குப் பணம் தர ஹான்சன் மறுத்துவிட்டான்!" என்று வருத்தத்தோடு தன் தோழர்களிடம் கூறினுன்.

"நல்ல ஆட்டத்தில் நூறு கினிகள் பந்தயம் கட்டினுல், பிரயாணத்திற்கான பணம் சுலபத்தில் கிடைத்து விடும்!" என்ருன், ஸ்ரோப்.

பைரன் வெறுப்போடு திரும்பிப் பார்த்தான். சூதாட்டத்தால் பாழாகிறவன் ஸ்ரோப் என்பதை அவன் நன்கு அறிவான்.

"இன்று நீ சூதாட்டத்திற்குச் செல்லக் கூடாது!" அதிகாரமான குரலில் அவன் கூறினுன்.

"போகத்தான் போகிறேன்!" மகிழ்ச்சியோடு ஸ்ரோப் சொன்னுன்.

"எப்படி போகிருய் என்பதை நான் பார்க்கிறேன்!"

"யாராலும் இன்று என்னைத் தடுக்க முடியாது. அதிர்ஷ்டம் இன்று என்னை அணைக்கப் போகிறது! ஆமாம், எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது!"

"அதிர்ஷ்டம் அடிக்கப் போவதாக நேற்றுக்கூடத் தான், உனக்குத் தோன்றியது. என்ன ஆயிற்று? ஒரு வருட வாடகையைத் தோற்றுவிட்டாய்!"

"அதெல்லாம் துரும்புக்குச் சமம், பைரன்! இன்றிரவு எல்லா நஷ்டத்தையும் ஈடு செய்துவிடுவேன்! ஆமாம், என் மனதிற்குள் இருந்து கொண்டு ஏதோ அப்படி நம்பிக்கை தருகிறது!" என்று உறுதியான குரலில் ஸ்ரோப் பேசினன்.

ஓட்டலைவிட்டு அவர்கள் வெளியே வந்தார்கள். அப்பொழுது வெளியில் இருள் மூடிக்கொண்டிருந்தது. ஒரு வாடகை வண்டியை பைரன் கூப்பிட்டான். வண்டி பக்கத்தில் வந்து நின்றது.

அவன் திரும்பிப் பார்த்தபோது, ஸ்ரோப் அங்கே இல்லை. எப்படியோ அவர்களைவிட்டுப் பிரிந்துச் சென்று விட்டான்.

ஆப்பவுஸ்னும் பைரனுமாகச் சேர்ந்து, அவனைப் பல ஓட்டல்களில் தேடினார்கள். அவர்கள் அறிந்த சூதாட்டம் நடைபெறும் இடங்களுக்கெல்லாம் சென்றார்கள். எங்கும் அவன் காணப்படவில்லை. கடைசியாக மேடம் டுபாய்ஸ் என்பவளின் வீட்டிற்கும் சென்று பார்த்துவிடுவது என்று முடிவிற்கு வந்தார்கள்.

மேடம் டுபாய்ஸ் ஒரு பெரிய சீமாட்டியைப்போல நடித்துக்கொண்டு, வீட்டில் விபசாரமும், சூதாட்டமும் நடத்தி வந்தாள். அவள் வீட்டில் சூதாட்டத்தில் ஜெயித்துவிட்டாலும், பொழுது விடிந்து பார்த்தால் பையில் பணமிருக்காது. அதற்காக அடித்துப் பிடுங்கிக் கொள்வாளோ என்ற சந்தேகம் வேண்டாம். ஒரு முறை அவள் வீட்டிற்குப் பணத்தை எடுத்துச் சென்று விட்டால், அப்பணம் மறுபடியும் திரும்பாது. சூதாட்டத்தில் காலியாகிவிடும்—இல்லை—சூதாட்டத்தில் ஜெயித்துவிட்டால், பக்கத்தில் வந்து நின்று உடல் மினுக்கும் ஒய்யாரிகளின் புன்னகையில் கரியாகிவிடும். அவள் விதவிதமான பெண்களைத் தயாராக வைத்திருப்பாள். யார் யாருக்கு எது சுவையோ, அந்தச் சுவைக்கேற்ற சுந்தரிகள் நிச்சயம் அங்கே கிடைப்பார்கள்.

அவள் வீட்டின் கதவை பைரன் தட்டினான். கதவு திறக்கப்பட்டது. உள்ளே பட்டுத் திரைகள் காற்றில் அசைந்துகொண்டிருந்தன. திரையைத் தள்ளிக்கொண்டு மேடம் டுபாய்ஸ் வெளியில் வந்தாள்.

“பிரபுக்கள் வரவேண்டும்!” என்று புன்னகையோடு, இனியக் குரலில் வரவேற்றாள்.

“ஸ்ரோப் டேவிஸ் இங்கே இருக்கிறாரா?” என்று பைரன் கேட்டான்.

“இங்கு பலர் வருகிறார்கள்! அவ்வளவு பேருடைய பெயர்களையும் என்னால் கவனம் வைத்துக்கொள்ள

முடிவதில்லை!” என்று சிரித்தபடியே, அவள் பதிலளித்தாள்.

“இங்குதான் அவன் வந்திருப்பதாக நாங்கள் எண்ணுகிறோம். இன்று நிறைய அவன் குடித்துவிட்டிருக்கிறான். ஆகவே அவன் இன்று சூதாடக்கூடாது! அதைத் தடுக்கவே நாங்கள் வந்திருக்கிறோம்!” என்று ஆப்பவுஸ் கூறினான்.

அதைக்கேட்டதும் அவள் முகத்தில் சிரிப்பு மறைந்து, கோபம் தோன்றியது.

“உங்களுக்குச் சூதாட்டத்தில் விருப்பமில்லை என்றால், வெளியில் சென்றுவிடலாம்! இங்கு ஆடவருபவர்களைக் கெடுக்க, உங்களுக்கு உரிமை இல்லை!”

நிலைமையை எப்படிச் சமாளிப்பதென்று பைரன் யோசித்தான். அவனுக்கொரு எண்ணம் தோன்றியது.

“சூதாட்டம் தவிர வேறு......நான் கேள்விப்பட்டேன்!” என்று புன்னகையோடு பைரன் கேட்டான்.

அவன் முகத்தை அவள் உற்றுப்பார்த்தாள். பிறகு அவள் புன்னகை செய்தாள்.

“ஆமாம்! உள்ளே வாருங்கள்!” என்று அவர்களை அழைத்துக்கொண்டு, மாடிக்குச் சென்றாள்.

விசாலமான அறை ஒன்றினுள் நுழைந்ததும், அங்கே பெண்கள் கூட்டமாக இருப்பதைக் கண்டனர். விதவிதமான பட்டுகள் அணிந்து, அனைவரும் பார்ப்பதற்கு அழகாக விளங்கினர். எங்கெங்கோ இருந்து

தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவந்து, சேகரித்து வைத்திருந்த அழகு கூட்டமது.

கோடியிலிருந்த அறையில் அவளது தற்போதைய காதலனோடு ஸ்ரோப் சூதாடிக்கொண்டிருப்பதையும், அதுவரைக்கும் சில நூறு பவுன்கள் அவன் தோற்று விட்டதையும் அவள் அறிவாள். சூதாட்டம் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்பது அவள் ஆசை. ஆகவே பைரனும், அவன் தோழனும் அந்த ஆட்டத்தைக் கெடுத்துவிடாதபடிப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று எச்சரிக்கையோடு, அவள் இருந்தாள்.

சிகப்புத் தொப்பி அணிந்திருந்த ஒரு பெண்ணின் மீது பைரனின் கண்பட்டது. அவளுக்கு வயது இருபதுக்கு மேல் இருக்காது. அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். ஒருவருக்கொருவர் சில சைகைகள் செய்துக் கொண்டனர்.

மேடம் டுபாய்ஸ் அந்தப் பெண்ணைத் தன் பக்கத்தில் வரும்படி, கண் காட்டினுள். அவள் அருகேவந்து நின்றதும், "அவனை ஒரு விநாடிக்கூட நீ தனியாக விடக்கூடாது! தெரியுமா?" என்று கட்டளை யிட்டாள்.

அந்தப் பெண் பைரனை அழைத்துக்கொண்டு தனியான வேருெரு அறைக்குச் சென்ருள். திடீரென்று அவளை விட்டுவிட்டு, கோடியிலிருந்த அறையை நோக்கி அவன் ஓடினுன்.

அந்த அறையின் கதவைப் பைரன் வேகமாகத் திறந்ததும், மூவருேடு ஸ்ரோப் உட்கார்ந்து, சூதாடிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

மாடம் டுபாய்ஸின் காதலனுன பருத்திருந்த மனிதன் பைரனைக் கோபத்தோடு பார்த்தான்.

"நீ யார்? எங்கே வந்தாய்?" என்று உரக்க அவன் கத்தினுன்.

ஸ்ரோபின் எதிரே பணம் மிகவும் குறைந்தும், மற்றவர் எதிரே பணம் குவிந்தும், இருப்பதைப் பைரன் கண்டான்.

"இழந்ததுபோதும், எழுந்து வந்துவிடு, ஸ்ரோப்!" என்று பைரன் அழைத்தான்.

"வா பைரன், நீயும்வந்து ஆடு!"

"உனக்குப் பைத்தியமா பிடித்துவிட்டது? எழுந்து வந்துவிடு, ஸ்ரோப்!"

"இல்லை! அதிர்ஷ்டம் எனக்கு அடிக்கும்போல் தோன்றுகிறது! ஆட்டத்தை நான் முடிக்க மாட்டேன்!"

ஸ்ரோபின் கையைப் பிடித்து பைரன் இழுத்தான். உடனே பருத்த மனிதன் பைரனை இழுத்துக்கொண்டு போய், அறைக்கு வெளியே விட்டுவிட்டு, கதவைமூடி, தாளிட்டுக் கொண்டான்.

பைரன் அறைக்குவெளியே தள்ளப் படுவதற்கும், மேடம் டுபாய்ஸ் தன் அடியாட்களோடு அங்கேவந்து சேர்வதற்கும், சரியாக இருந்தது.

அடியாட்கள் அவனை பரபரவென இழுத்துக் கொண்டுபோய் தெருவில் விட்டுவிட்டு, வீட்டின் கதவை மூடிக்கொண்டனர்.

தெருவில் நின்றபடியே பைரன் அந்த வீட்டைப் பார்த்தான். நஷ்டத்திலிருந்து நண்பனைக் காப்பாற்ற முடியாமல் போயிற்றே, என்றெண்ணி பெருமூச்சு விட்டான்.

மறுநாள் காலை ஸ்ரோபின் வீட்டிற்குச் சென்றான். இரவு அவனுக்கு எவ்வளவு பணம் போயிற்று என் பதை அறிய விரும்பினான்.

"ஸ்ரோப் இருக்கிறானா?" என்று வேலைக் காரனைப் பார்த்துக் கேட்டான்.

"தூங்குகிறார்!"

"அவசரமாக அவனை நான் பார்க்க வேண்டும்!"

வேலைக்காரன் தயங்கினான். பைரன் நேராக மாடிக்குச் சென்றான். அங்கிருந்தபடியே, வேலைக் காரனைப் பார்த்தான். அவன் முகம் பயத்தால் மாறி விட்டிருந்தது.

"பயப்படாதே! பழியை என்மீது போட்டுவிடு!" என்று சொல்லிவிட்டு, ஸ்ரோப் படுத்திருந்த அறையைத் திறந்தான், பைரன்.

ஸ்ரோப் நன்றாக குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். மதுவாலும், தூசியாலும் அவன் ஆடைகள் அழுக்கடைந்துவிட்டிருந்தன.

மேஜையின் மீதிருந்த ஒரு பாத்திரத்தைப் பார்த்ததும், பைரனுக்கு ஆச்சரியம் அதிகமாகிவிட்டது. கண் களைக் கசக்கிக்கொண்டு பார்த்தான். ஆமாம்! அந்தப் பாத்திரம் நிறைய, பணம் இருந்தது!

குறட்டைவிட்டுத் தூங்கும் ஸ்ரோப்பையும், பாத்திரத்திலிருக்கும் பணத்தையும் அவன் மாறி மாறிப் பார்த்தான். நண்பனைத் தட்டி எழுப்பினான்.

"பைரன்! இப்பொழுது நான் எங்கு இருக்கிறேன்?" கண்களைக் கசக்கிக்கொண்டே, எழுந்து உட்கார்ந்தான், ஸ்ரோப்.

"நீ வீட்டில் இருப்பது ஆச்சரியம்தான், ஸ்ரோப்!"

"மேடம் டுபாய்ஸ் வீட்டில் சூதாடிக்கொண்டிருக்கும்போது, நீ வந்தாய் அல்லவா?"

"ஆமாம்!"

"அதன் பிறகு நடந்ததை நீ அறிந்தால் வியப்படைவாய்!" என்று சொல்லிக்கொண்டே, ஸ்ரோப் பணமிருந்த பாத்திரத்தைக் காட்டினான்.

"அதிர்ஷ்டம் அடிக்கப் போவதாகச் சொன்னேனே, பார்! பார், பணத்தை!" என்று சொல்லி உரக்கச் சிரித்தான்.

"அப்படியானால் நானும் சூதாடியிருக்கலாம்! பிரயாணத்திற்கான பணமாவது கிடைத்திருக்கும்!" என்று குறும்போடு பைரன் சொன்னான்.

மேஜையின் மீதிருந்த பணத்தை எடுத்து வந்து, பைரனின் கையில் கொடுத்து, இதை உன் வெளிநாட்டுப் பிரயாணத்திற்கு வைத்துக்கொள்!" என்று ஸ்ரோப் பூரிப்போடு சொன்னான்.

"எனக்கு வேண்டாம்! சூதாட்டத்தில் கிடைத்த இந்தப் பணம், எனக்கு வேண்டாம்!" என்று வேதனையோடு பைரன் கூறினான்.

"பைரன், முட்டாள்தனமாகப் பேசாதே! நீ வந்து என் கையைப் பிடித்து இழுத்த பிறகுதான்—ஆட்டம் மாறியது—அதிர்ஷ்டம் எனக்கடித்தது. இனு மாக வேண்டாம் என்றால் கடனாகப் பெற்றுக்கொள்! பணம் கிடைக்கும்போது திருப்பிக்கொடு—கொடுக்கா விட்டாலும் அக்கறை இல்லை! இனி நீ வெளிநாடு களுக்குச் செல்லலாம்—கவலை வேண்டாம்!" என்று அன்பான குரலில் ஸ்ரோப் சொன்னான்.

எவ்வளவோ பைரன் மறுத்தும், ஸ்ரோப் அவனைச் சும்மா விடவில்லை. கடைசியில் வேறு வழியில்லாமல், அந்தப் பணத்தை பைரன் ஏற்றுக் கொண்டான்.

ஆப்பவுஸ், வேலைக்காரன் வில்லியம் ஆகியோரோடு ஸ்பெ்ன் செல்ல அவன் திட்டமிட்டான். அதற்காக மறுநாள் காலையே, பால்மத் என்ற துறைமுகப்பட் டிணத்திற்குப் போய்விட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டான்.

# 9. தொட்டான்! துவண்டாள்!

ஆப்பவுஸ், வில்லியம் ஆகியோரோடு பைரன், பால்மத் வந்து சேர்ந்தான். அங்கிருந்து கடல் மார்க்க மாக லிஸ்பன் செல்லவேண்டும்.

புயல் வீசிக்கொண்டிருந்ததாலும், கடல்கொந்தளித் துக்கொண்டிருந்ததாலும், குறிப்பிட்ட தினத்தில்கப்பல் புறப்படவில்லை. "இன்னும் சில நாட்கள்கழித்து கப்பல் புறப்படும்" என்று காப்டன் கிட் தெரிவிக்கவே, அவ் வூரிலேயே பைரன் தங்க வேண்டியதாயிற்று.

ஒருநாள் அதிகாலையில் கதவு தட்டும் சப்தம் கேட் கவே, பைரன் விழித்துக்கொண்டான். கதவைத் திறந்து பார்த்ததில், அங்கே மூச்சுவாங்க ஒரு கப்பல் வேலைக்காரன், நின்றிருந்தது தெரிந்தது.

"இன்னும், ஒருமணி நேரத்தில் கப்பல் புறப்படப் போகிறது. பிரபு!" என்று பணிவோடு கூறிவிட்டு அவன் சென்றான்.

பால்மத்தை விட்டுக் கப்பல் புறப்பட்டது. பைரன் தன் சொந்த நாட்டைப் பார்த்தான். காரணம் தெரியாத ஒரு சிரிப்பு வந்தது.

அவனைப் புகழாத—அவன் கவிதைகளை மதிக் காத—சொந்த நாட்டைவிட்டு அவன் செல்கிறான். அதைக் குறித்து அவனுக்குக் கொஞ்சமும் கவலை இல்லை.

ஆனால், வில்லியத்தின் முகம், கவலையினால் மிகவும் சோர்ந்துவிட்டிருந்தது. புதிய மனைவியான கல்லியை விட்டுப் பிரிந்தால் அவனுக்கு வருத்தம் ஏற்படாதா? அவளை எண்ணியதும் அவன் கண்கள் கலங்கின. வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்ற ஆசை, எள்ளளவும் அவனுக்குக் கிடையாது. பைரன்மீது அவனுக்கு அளவுகடந்த அன்பு. அந்த அன்பே அவனைக் கடல் கடந்து செல்ல தூண்டியது.

காலை மலர்வதற்கும், கப்பல் போர்ச்சுகல் நாட்டின் துறைமுகமான லிஸ்பன் போய்ச் சேருவதற்கும் சரியாக இருந்தது.

லிஸ்பன் நகரத்தின் உயரமான பாட மாளிகைகள், பைரனை வரவேற்றன. மிகுந்த களிப்போடு அவன் நகருக்குள் நுழைந்தான். வீதிகளின் வழியே நடந்து சென்றபோது, பற்பல விநோதங்களை—இங்கிலாந்து தேசத்தில் காணாத விதவிதமான காட்சிகளை— அவன் கண்டான்.

சுகமென்பது இன்னதென்று கண்டறியாத பரம ஏழைகள், ஒரு பக்கத்தில்—உலகத்திலுள்ள சகல சுக போகங்களையும் அனுபவித்துக்கொண்டு, வாழ்க்கையின் உச்சாணிக் கொம்பில் ஒய்யாரத்தோடு உட்கார்ந்திருக்கும் செல்வ சீமான்கள், மற்றொரு பக்கத்தில். நடுத் தெருக்களில் பிச்சைக் கேட்டுக்கொண்டு நிற்கும் நாதியற்றவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்காமல், காரிகையர்களோடு கை கோர்த்துக்கொண்டு உல்லாசமாக செல்லும் கனவான்கள்!

சாலையின் ஓரங்களில் திக்கற்ற பிணங்கள்! ஒவ்வொரு பிணத்தின் மார்பின் மீதும் ஒரு தட்டு. அந்தத் தட்டில், வழிப்போக்கர்கள் ஏதாவது சில்லறை போட்டு விட்டுச் செல்வார்கள். அந்தச் சில்லறையைக்கொண்டு தான், அந்தப் பிணத்தை அடக்கம் செய்தாக வேண்டும்.

நகரின் நாலா பக்கங்களிலும் பிரிட்டிஷ் சிப்பாய்கள் சுற்றிக்கொண்டிருந்தனர். அவர்களோடு கை கோர்த்துக் கொண்டு, ஆனந்தமாகச் சிரித்துக்கொண்டு போர்ச்சுகீஸிய பெண்கள் சென்றனர். இதே போர்ச்சுகீஸிய பெண்கள், ஒரு மாதத்திற்கு முன்பு பிரஞ்சு சிப்பாய்களுக்குத் தங்கள் அழகையும், கற்பையும் விலை கூறியவர்கள். தங்கள் நாட்டை எந்தெந்த இனத்தார் பிடித்தாலும், அவர்களோடு கொஞ்சி மகிழவும், குலவிக்கூடவும் அந்தப் பெண்கள் தயாராக இருந்தனர். இது தான் போர்ச்சுகல் தேசத்தின், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நிலைமை.

லிஸ்பன் நகருக்குள் நுழைந்தபோது பைரனுக்கு இருந்த மகிழ்ச்சி, அதைச் சுற்றிப் பார்த்ததும் வெறுப்பாக மாறிவிட்டது.

மறுநாள் அந்நகரைவிட்டு விட்டு, ஆப்பவுஸ், வில்லியம் ஆகியவர்களோடு சின்ட்ரா நகருக்கு அவன் சென்றான். அங்கே ஒரு ஓட்டலின் மாடியில் அவர்கள் தங்கினர்.

ஒரு நாள் காலை பைரன் மட்டும் தனியாக, அவ்வூரிலிருந்த ஒரு மாதா கோயிலுக்குச் சென்றான். கோயிலைச் சுற்றிலும் பலவிதமான மரங்கள் உயர்ந்து வளர்ந்து

குளிர்ச்சியான நிழலைக் கொடுத்துக் கொண்டிருந்தன. அந்த நிழலில் சிறிது உட்கார்ந்திருந்து விட்டு, பிறகு அவன் கோயிலினுள் நுழைந்தான்.

அங்கே மெடோன்னுவின் சிலை ஒன்று அழகோடு இருந்தது! அந்தச் சிலையின் முன்பு பைரன் நின்று, அதைச் செய்தவனின் கைத்திறமையை வியந்து கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு அழகான பெண் அந்தச் சிலையின்முன் ஒரு மெழுகுவத்தியைக் கொண்டு வந்து வைத்துவிட்டு, கண்களை மூடிக் கொண்டு சில வினாடிகள் தியானத்தில் ஆழ்ந்தாள்.

அந்த அழகியைக் கண் சிமிட்டாமல் பைரன் பார்த்தபடி நின்றிருந்தான். அந்தப் பாவை கண் திறந்ததும், எதிரே எழிலோடு நின்றிருந்த பைரனைப் பார்த்தாள். மறுகொடி அந்த மலர் மேனியாளின் முகத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அவனைச் சிறிது உற்றுப் பார்த்துவிட்டு அவள் செல்லத் தொடங்கினாள்.

பைரன் கோயிலுக்கு வெளியே வந்தான். அந்த அழகி திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் நடந்து சென்று, மரத்தின் அடியிலிருந்த ஒரு மேடையின்மீது உட்கார்ந்தாள்.

அந்த மதிமுகவதியின் சுழல் விழி—அந்தச் சுழல் விழி உதிர்ந்த காதல் மொழி—பைரனுக்குப் புது உற்சாகத்தைத் தந்தன; அவள் அருகே சென்று, சிறிது தயங்கி நின்றான்.

"உட்காருங்கள்!" என்றாள். மொழியால் அல்ல விழியால்! அவளுக்கு அருகே மேடை மீது அமர்ந்தான்.

"நீங்கள் இங்கிலாந்து தேசம்தானே?" என்று ஆங்கிலத்தில் அவள் கேட்டதும், அவன் ஆச்சர்யமடைந்தான்.

"ஆமாம் நான் இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்தவன்தான். இந்த ஊருக்கு வந்து இரண்டு நாட்களாகின்றன!......"

"அல்ல! நான் போர்ச்சுகீஸிய பெண்! எனக்கு ஆங்கிலம் பேசத் தெரியும்!"

"அப்படியா? உன்னேடு பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்!"

"நானும்......"

"ஏன் தயங்குகிருய்? உனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையா?"

"திருமணம்! அந்த விலங்கு எனக்குச் சிறுவயதிலேயே—புத்தி தெரியாத பருவத்திலேயே—பூட்டப்பட்டுவிட்டது! என் கணவருக்கு ஐம்பது வயதிற்கு மேலிருக்கும்!" என்று சோகத்தோடு கூறிவிட்டு, அவன் முகத்தைப் பார்த்து, ஒரு பெருமூச்சு விட்டாள். "விசனம் வேண்டாம், விருந்திட நான் தயார்!" என்று சொல்வதைப் போல, அவளைப் பாாத்துப் புன்னகை செய்தான்.

"தங்கள் பெயர்?" என்று மெதுவாக அவள் கேட்டாள்.

"பைரன்!" என்று சிறிது பெருமையோடு அவன் கூறினன்.

"பைரன்!" என்று அவள் முணுமுணுப்பதைக் கேட்டதும், சிறிது தைரியத்தோடு, அவள் உடலோடு உராயும் அளவிற்கு, நகர்ந்து உட்கார்ந்தான்.

"உன் பெயர்?" என்று சொல்லிக் கொண்டே, அவளது பொற்கரங்களை மெதுவாகப் பிடித்தான். நாணத்தோடு அவள் தலை குனிந்து கொண்டாள். அவளது நாடி நரம்புகளில் உணர்ச்சியின் கொக்கரிப்பு எழுந்து விட்டதென்பதை, அவன் கண்டு கொண்டான்.

"உன் பெயர் என்னவென்று கேட்டேனே? சொல்லக்கூடாதா—அல்லது சொல்ல வெட்கமாயிருக்கிறதா?"

"என் பெயர் டோன்னு லூஷியா!"

"உன் கணவன் பெயர்?"

"டோன் ஜோஸ்!" என்று சொல்லிக்கொண்டே அவள் மேடையை விட்டு எழுந்தாள்.

"ஏன் எழுந்து விட்டாய்?"

"கோயிலுக்கு வருபவர்கள் யாராவது நம்மைப் பார்த்துவிட்டால்........?"

"உன் கணவனிடம் சொல்லிவிடுவார்களோ என்ற பயமா?"

"ஆமாம் அவன் மிகவும் முரடன்! வாருங்கள் வீட்டிற்குச் செல்லலாம்! அங்கு என் சோகக் கதையை உமக்குக் கூறுகிறேன்!"

"வீடு தூரத்திலிருக்கிறதா?"

"இல்லை......வெகு சமீபத்தில்!"

தெருக்களின் வழியாக நடந்து சென்று, உயர மான மதிற் சுவர்களால் சூழப்பட்ட ஒரு பெரிய மாளிகையினுள் நுழைந்தனர். அந்த மாளிகை கம்பீரத்தோடும் அழகோடும் விளங்கியது. அதைச் சுற்றிலும் கண் கவரும் வண்ண மலர்கள் நிறைந்த ஒரு நந்தவனம் இருந்தது. அந்த மலர்ச் சோலையில், பைரனும் அந்த அழகியும் ஒரு மேடையின் மீது பக்கத்தில் பக்கத்தில் அமர்ந்தனர்.

சிறிது நேரத்தில் டோன்னுலூஷியா, தன் பணிப் பெண்ணிடம் சிற்றுண்டியும் மதுவும் கொண்டு வரும்படிக் கூறினாள். சிட்டுப் போல் பறந்து சென்ற அந்த பணிப்பெண், சிறிது நேரத்தில் அவைகளைக் கொண்டு வந்து, அவர்கள் எதிரே வைத்தாள்.

பைரன் மதுக்கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டு, எதிரிலிருந்த மங்கையைப் புன்னகையோடு பார்த்தான். அந்த இன்பவல்லிக்கு வயது இருபத்தைந்துக்கு மேல் இருக்காது. பட்டு போன்ற மேனி, பரவசத்தைத் தூண்டிவிடும் சுடர் விழிகள். அவளைப் பார்க்கப் பார்க்க, அவனது உள்ளத்தில் பசி அதிகமாயிற்று.

"உன் கணவன் பெருத்த செல்வந்தன் போலத் தெரிகிறதே!"

"ஆமாம்! என் பெண்மையின் துடிதுடிப்பை—இளமையின் தாகத்தை—பணத்தால் தணித்துவிட முடியுமா? முன்பே சொன்னேனே, அவனுக்கு ஐம்பது வயதிற்கு மேலிருக்கும் என்று!" என்று சோகம் நிறைந்த குரலில் சொல்லிக் கொண்டே, அவனது கையைப் பிடித்து, மார்பில் அழுத்திக் கொண்டு, நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

"ஐம்பது வயதா?...... இருபத்தைந்து இருபத்தைந்து வயதிலே இரண்டு கணவர் இருந்தால், உனக்குச் சந்தோஷமாக இருக்கும் அல்லவா?"

கன்னத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டே அவன் இப்படிக் கூறியதைக் கேட்டதும், அவள் 'களுக்' கெனச் சிரித்து விட்டாள்.

"இவ்வளவு பெரிய மாளிகையில், உனக்கு எப்படி பொழுது போகிறது?"

"இதே கேள்வியைப் பல முறை என்னை நானே கேட்டுக் கொள்வதுண்டு!...... கண்ணீரும் பெருமூச்சுமாகக் காலத்தைக் கழித்துக் கொண்டு வருகிறேன்!" என்று சொன்னதும், அவளது கண்கள் கலங்கின.

பைரன் அவளது கண்ணீரைத் துடைத்தான். கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட சிளிமொழியாளின் வேதனை, அவனது உள்ளத்தைத் தொட்டது. போர்ச்சுகிஸியப் பெண்கள் திருமணமான பின்னர்

தான், இஷ்டம் போலக் காதலர்களைத் தேர்ந்தெடுக்கச் சுதந்திரம் பெறுவார்கள், என்ற உண்மையை முன்னரே பைரன் அறிவான்.

சிற்றிடையில் கைகளைக் கொடுத்து, அருகே இழுத்தான். அவனது அணைப்பிற்கு, அவள் உடலைத் தளர்த்திக் கொடுத்தாள். மார்போடு தழுவினன்.

ஆகா! வயோதிகனின் கரங்களுக்கும், வாலிபனின் கரங்களுக்குமிடையே எவ்வளவு வித்தியாசம்? அணைப்பது என்பதின் அர்த்தமே, இப்பொழுது தானே பூர்ணமாக உணர முடிகிறது! அந்தப் பெண்ணின் அகம் குளிர்ந்தது! குளிர்ந்ததா? அல்ல அல்ல! கூத்தாடியது!

"சூரியனின் வெப்பம் வியர்வையை உண்டாக்குகிறது! மாடிக்குச் செல்லலாம்—குளிர்ச்சியாக இருக்கும்!" என்று குறுநகையோடு கூறினள்.

மாடியில் நன்ருக அலங்கரிக்கப்பட்டிருந்த ஓர் அறையினுள் இருவரும் சென்றனர்.

"இதோ வந்து விட்டேன்!" என்று சொல்லி விட்டு, வேருெரு அறையினுள் சென்ருள். கட்டிலின் மீது பைரன் மட்டும் தன்னந் தனியனுக உட்கார்ந்திருந்தான். சுவர்களில் மாட்டப்பட்டிருந்த சித்திரங்களின் எழிலை ரசிக்கத் தொடங்கினன்.

சில விணுடிகளில் அந்தச் சிற்றிடையாள் சிரித்த முகத்தோடு உள்ளே வந்தாள். மெல்லிய ஆடையை

அவள் அணிந்து வந்திருந்தாள். மோகனங்கியின் மேனியின் வனப்பையும் வசீகரத்தையும் அந்த மெல்லிய ஆடை தெள்ளத் தெளிய வெளியே காட்டிக் கொண்டிருந்தது.

கையைப் பிடித்து இழுத்து, கற்கண்டு உடலாளைக் கட்டிலின் மீது உட்கார வைத்தான். தங்க கன்னத்தில் முத்தமிட்டான்; தழுவினன். ஒரு பூனைக் குட்டியைப் போல, அவனது அணைப்பிலே பூரித்துக் கிடந்தாள்.

கூந்தலில் அவள் சொருகி யிருந்த ஊசிகளை எடுத்துத் தூரமாக வைத்தான். கருநிறக் கூந்தல் அவளது பொன்நிறமான தோள்களில் சரிந்துவிழுந்தது. கூந்தலில் அவள் தடவி யிருந்த மல்லிகை வாசனைத் தைலம், அவனைக் கிறு கிறுக்கச் செய்தது. அனிசம் பொன் மேனியில் புகைபோல் மூடியிருந்த அந்த மெல்லிய ஆடையையும், அப்புறப்படுத்தி விட்டான். நாணத்தோடு அந்த நங்கை, கட்டிலில் சாய்ந்தாள். தோள்களைப் பிடித்து அழுத்தினன், கன்னத்தோடு கன்னம் உராய, நொடிக்கு நொடி களிப்பு அதிகரித்தது. போதை நிறைந்த அவளது பார்வையும், பளபளப்பான அவள் தேன் உடலும்—அவனது உணர்ச்சித் தீயை உக்கிரத்தோடு எரியச் செய்து விட்டன. சிரித்தான்! பெருமூச்சு விட்டாள்! தொட்டான்! துவண்டாள்!

களைப்பால் அப்படியே தூங்கிவிட்ட பைரன் கண்ணைத் திறந்து பார்த்தபோது, ஏதோ பழக்கமில்

லாத இடத்தில் படுத்துக் கொண்டிருப்பதாக உணர்ந்தான். மலர்க் கரம் ஒன்று அவன் தோள்களை வருடியது. "நீண்ட நேரம் தூங்கி விட்டீர்!" என்று குயில் குரலொன்று கூறிற்று.

பைரன் திரும்பிப் பார்த்தான். டோன்னு ஊாசியா குறும்பும் குதூகலமும் நிறைந்த பார்வையை அவன் மீது வீசினுள்.

"இரவு வந்து விட்டது!" என்று செவ்விதழ்களில் புன்னகை பூக்க, அந்தச் சேல் விழியாள் மெதுவாகக் கூறினுள்.

பைரன் ஜன்னல் பக்கம் பார்த்தான். வெளியில் இருள் கப்பிக் கொண்டிருந்தது. வானத்தில் நட்சத்திரங்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. மலர் மணம் அந்த அறையில், கம கம வென வீசிக் கொண்டிருந்தது.

அவள் கட்டிலை விட்டுக் கீழே இறங்கினுள். வெள்ளை நிறமான பட்டு ஆடையை அணிந்துகொண்டாள்.

"நான் போக வேண்டும்!" என்று சொல்லிக் கொண்டே, பைரன் எழுந்து உட்கார்ந்தான்.

"ஏன்?" என்று திடுக்கிட்டு கேட்டாள்.

"திருடர்களால் குத்தப்பட்டு விட்டேனே அல்லது வேறு ஏதாவது ஆபத்து நேரிட்டு விட்டதோ

என்றெண்ணி, என் நண்பன் கவலைப் பட்டுக்கொண் டிருப்பான்!''

"அவருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்! அதை வேலைக்காரி மூலமாகக் கொடுத்து அனுப்பு கிறேன்!''

"இரவாகியும் நான் இங்கிருப்பது.........''

"பயப்படாதீர்கள்! என் கணவன் வீடு திரும்ப இன்னும் மூன்றுநாட்கள் பிடிக்கும்!''

பைரனின் சிந்தனை வேகமாக வேலை செய்தது. மூன்று நாட்கள்! அவனுக்கு அவசரமான வேலை ஒன்றுமில்லை! இன்பவானில் பறக்கச் சிறகடித்துக் கொண்டு, துடிதுடிப்போடு இருக்கும் இந்தப் பெண் பறவையை, தனியாக விட்டுவிட்டுப் போய்விடுவது பாவம்!

அவனது தயக்கத்தைக் கண்டதும், அவள் எழுந்து சென்று, எழுதுகோல் கொணடுவந்து கொடுத்தாள்.

"ஒரு பெண்ணின் தட்டமுடியாத விருப்பத்தின் படி, நான் இங்கு தங்கவேண்டியிருக்கிறது. சனிக் கிழமை இரவு, நான் அங்கு வருகிறேன். பிரயாணத் திற்கு வேண்டிய சாமான்களைக் கட்டிவைக்கும்படி வில்லியம் பிளட்சரிடம் சொல்லவும்.'' என்று ஆப்பவு ஸுக்கு ஒரு கடிதம் எழுதி முடித்தான்.

லூஷியா மணியடித்ததும், ஒரு பணிப்பெண் அறையினுள் அவசரமாக ஓடிவந்தாள். சிறிதுநேரம் அவ்விரு பெண்களும் ஏதோ முணுமுணுத்தனர். கடைசியில் அப்பணிப்பெண் அக்கடிதத்தை எடுத்துச் சென்றாள்.

"அவள் என்ன சொல்லுகிறாள்?" என்று பைரன் கேட்டான்.

"ஒன்றுமில்லை! என் கணவனின் வேலைக்காரனை பெர்னாண்டோவிற்கு, அவள் பயப்படுகிறாள்!"

மற்ற வேலைக்காரர்களைப்பற்றி........."

"பயப்படவேண்டிய அவசியமே இல்லை! ஏனென்றால் நான் திருமணம் செய்துகொண்டபோது, அவர்களெல்லோரும் என்னோடு வந்தவர்கள்!......மணி பத்துக்குமேலாகிவிட்டது, நாம் சாப்பிடலாம்!"

நந்தவனத்தில் ஒரு பூமரத்தின் அடியில், அவர்கள் இரவு சாப்பாடு உண்டனர். மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த வெள்ளிச் சாமான்களும், பரிமாறப்பட்ட பல்சுவை உண்டியும்-அந்தப் பெண்ணின் குடும்ப அந்தஸ்தை நன்றாகக் காட்டின.

பைரன் மதுக்கோப்பையைக் கையில் எடுத்துக்கொண்டு, "சுவர்க்க பூமியில் மூன்றுநாட்கள்!" என்று மகிழ்ச்சியோடு சொன்னான்.

"இவ்வளவு ஆண்டுகளாக நான் கஷ்டப்பட்டுக் கொண்டு வாழ்ந்திருந்ததற்குப் பலன், இந்த மூன்று நாட்கள்தாம்!" என்று அவள் சிரித்துக்கொண்டே கூறினுள்.

அவர்களிருவரும் கிண்டல் செய்துகொள்வதும், கன்னத்தைத் தட்டுவதும், கலகலவெனச் சிரிப்பது மாக இருந்தனர். புதருக்குள் பதுங்கிப் பதுங்கி ஓர் உருவம் கவனிப்பதை, அவர்கள் தெரிந்துகொள்ள வில்லை.

நாட்கள் வேகமாகப் பறந்தோடின. மூன்ரும் நாள் இரவும் வந்துவிட்டது. பைரன் புறப்படத் தயாராஞன்.

"வேண்டாம்! இதற்குள் நீங்கள் போகவேண் டாம்! இரவு இவ்வளவு நேரமாகியும் என் கணவன் வரவில்லை! இனி அவன் நாளை காலைதான் வரு வான்!"

காந்தத்தைப்போல அவள் இழுத்தாள். இளமை ததும்பும் பூங்கொடியாளை இதற்குள் விட்டுப் பிரிய, அவனுக்கும் மனம் வரவில்லை. ஆகவே இரவு அங்கே தங்கியிருக்க அவன் இசைந்தான்.

அந்த இன்ப இரவின் ஒரு நொடியையும் தூக் கத்தில் வீணுக்க, அவர்கள் விரும்பவில்லை. ஒவ் வொரு விடியும், எப்படியெப்படி அதிகமான இன் பத்தை அடைய முடியும், என்பதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

திடீரென்று கதவு வேகமாகத் தட்டும் சப்தம் கேட்டது. ஹாஷியா திடுக்கிட்டெழுந்து சென்று கதவைத் திறந்தாள். அப்பொழுது அவள் உடலில் ஆடை எதுவுமில்லை.

"அவர் வருகிறார்! அவருடன் ஆயுதம் தாங்கிய ஆட்களும் வருகின்றனர்! ஆமாம், வேகவேகமாக வருகிறார்கள்!" என்று ஒரு பணிப்பெண் நடுநடுங்கும் குரலில் கூறினாள்.

ஹாஷியா கதவை மூடித் தாளிட்டுக்கொண்டாள். அவள் வெலவெலத்துவிட்டாள். வியர்வையால் அவள் உடல் நனைந்துவிட்டது.

"பைரன்! எழுந்திருங்கள்! விரைவாக ஆடை அணிந்துகொள்ளுங்கள்!"

திடீர் அதிர்ச்சியால் தாக்குண்டு, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, பைரன் கட்டிலை விட்டுக் கீழே குதித்தான். ஆடைகளை அணிந்துகொண்டு, அவசர அவசரமாக ஜன்னல்பக்கம் ஓடினான். ஓடியவன், திரும்பவும் கதவு பலமாகத் தட்டப்படுவதை கேட்டதும், ஒரு அடிகூட மேலே எடுத்துவைக்க முடியாமல், கற்சிலைபோல நின்றுவிட்டான்.

"நான் எங்கே ஒளிந்துகொள்வது? கட்டிலுக்கு அடியில் மறைந்துகொள்ளட்டுமா?" என்று தடுமாறும் குரலில், அவன் கேட்டான்.

"வேண்டாம்! சுலபமாக அகப்பட்டுக்கொள்வீர்கள்! அழுக்குத் துணிகள் போடும் பெட்டியில் உட்

கார்ந்துகொள்ளுங்கள்! உங்கள் மேலே அழுக்குத் துணிகளைப் போட்டு மறைத்துவிடுகிறேன்.

ஜாக்கிரதை மூச்சுப்பேச்சு இருக்கக்கூடாது! அசைந்தாலும் போதும், நம்மிருவர் உயிரும் பலி யாகிவிடும்!''

கதவு தட்டும் சப்தம் நொடிக்கு நொடி அதிக மாயிற்று. இன்னும் சிறிதுநேரம் தாமதித்தால், கதவு பிளந்துகொள்ளும். ஆடைகளைச் சரி செய்து கொண்டு, முகத்தை நன்ருகத் துடைத்துக்கொண்டு, லூஷியா கதவைத் திறந்தாள்.

வாயற்படியில் அவள் கணவன் டோன் ஜோஸ், கண்கள் சிவக்க, மீசை துடிக்க நின்றுகொண்டிருந் தான். அவனுக்குப்பின்னல் பலர் கைகளில் கத்தி களும் துப்பாக்கிகளும் வைத்துக்கொண்டிருந்தனர். இருவேலைக்காரர்கள், கைகளில் தீப்பந்தங்கள் வைத்திருந்தனர்.

"உள்ளே உன்னேடு ஒரு ஆங்கிலேயன் இருக் கிருன்!'' என்று கணவன் கர்ஜித்தான்.

"ஏன் இப்படி கத்துகிறீர்கள்! எவனே ஆங்கி லேயனும்-என்னேடு இருக்கிருனும்! இதென்ன பிதற் றல்! உமக்கென்ன பைத்தியமா? அல்லது குடிமயக் கத்தில் உளறுகிறீர்களா? நடுநிசியில் வந்து என் தூக்கத்தைக் கெடுத்ததுமல்லாமல், வீதியில் திரியும் நாய்களை உடன் அழைத்துக்கொண்டுவந்து, வீண்

பழிவேறு சுமத்துகிறீர்கள்? நம் திருமணச்சத்தியங்களை, நான் மீறிவிட்டேன் என்று சந்தேகிக்க உமக்கு எங்கே இருந்து இவ்வளவு தைரியம் வந்தது?'' என்று ஆவேசம் வந்தவளைப்போல அவள் பேசினாள்.

டோன்ஜோஸ் பதிலொன்றும் சொல்லாமல், தன் ஆட்களோடு அந்த அறையினுள் நுழைந்தான். பீரோக்களைத் திறந்துபார்த்தனர், கட்டிலுக்கடியில் பார்த்தனர், பெட்டிகளுக்குள்ளும் திரைகளுக்குப் பின்னாலும் தேடிப்பார்த்தனர். மூலைமுடுக்குகளிலெல்லாம் தடவிப்பார்த்தனர். எங்கும் அவனைக் காணோம்!

ஒரு பாவமும் அறியாத அபலையைப்போல, லூஷியா கட்டிலின்மீது உட்கார்ந்திருந்தாள்.

“தேடுங்கள்! நன்றாகத் தேடுங்கள்!'' என்று ஆத்திரத்தோடு அவள் கத்தினாள். கணவன் மனைவியைத் திரும்பிப் பார்த்தான். அவன் முகம் பரிதாபமாகத் தோன்றியது.

“தேடுங்கள்! அறைமுழுவதும் கண்களைத் திறந்துகொண்டு தேடுங்கள்! என்னை அவமானத்தில் ஆழ்த்தி, எனக்கு விபசாரி பட்டம் சூட்டுகிறீர்! என்னைவிட முப்பது வயதிற்குமேல் மூத்த உம்மை மணந்துகொண்ட எனக்கு-இது போதாது, இன்னும் வேண்டும்! என் இளமையையும் அழகையும் கண்டு

மயங்கி, திருமணம் செய்துகொள்கிறேன் என்று ஒற்றைக்காலில் தவம் செய்த என் வயதிற்கேற்ற வாலிபர்களை, வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளி விட்டு, உம்மைத் திருமணம் செய்துகொண்டேனே- எனக்கு இது போதாது, இன்னும் வேண்டும்!'' என்று ஆத்திரமும் அழுகையும் நிறைந்த குரலில் சொல்லிக்கொண்டே, கட்டிலில் குப்புற விழுந்து தேம்பிதேம்பியழுதாள்.

அறையின் மத்தியில் ஒன்றும் புரியாமல் கண வன் நின்றுகொண்டிருந்தான். பக்கத்திருந்த பெர்னண்டோ என்ற வேலைக்காரனை முறைத்துப் பார்த்தான். அவன் நடுநடுங்கினன். "முகத்தில் கரி பூசிக்கொண்டேன்!'' என்று டோன்ஜோஸ் மனதிற்குள்ளேயே, முணுமுணுத்துக்கொண்டார்?.

"கண்டகண்டவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு, கட்டிய மனைவியைச் சந்தேகிப்பவன்-ஒரு ஆணு?'' என்று லூஷியா, கணவனின் காதில் விழும்படியாக முணுமுணுத்தாள்.

டோன்ஜோஸ் மனைவியின் அருகே சென்றான்! அவளைச் சமாதானம் செய்யவேண்டியது, இப் பொழுது அவனது கடமையாகிவிட்டது. மெதுவாக அவளது தோள்களின்மீது கையை வைத்தான். அந்தக் கையை வேகமாக உதறித்தள்ளினுள்.

"சந்தேகம் கொண்ட கிழமே, என்னைத் தொடாதே!" என்று பற்களை நறநறவெனக் கடித்துக்கொண்டு அவள் கூறினுள்.

"கோபம் வேண்டாம், ஹாஷியா! என்னை மன்னித்துவிடு! பெர்னுண்டோ கூறியதை-நான் நம்பி விட்டேன்!"

"என் சொல்லைவிட, உமக்கு வேலைக்காரர்களின் சொல்லில் நம்பிக்கை அதிகம்! கிழவன்களை மணந்துகொள்ளும், பெண்களின் கதி இதுதானே!"

"ஹாஷியா! அடிக்கடி என்னைக் கிழவன் கிழவன் என்று சொல்லாதே! எனக்கு ஏதோ சுறுக்குசுறுக்கெனத் தைக்கிறது!"

"நீங்கள் கிழவன் இல்லாமல், எனக்கேற்ற குமரரா?"

"போதும் ஹாஷியா! இவ்வளவுபேர் முன்னிலையில் என்னை அவமானப்படுத்தாதே!"

"கள்ளக்கணவன் அறையிலிருக்கிறுன் என்பதை நீங்கள் தேடி பார்க்கும்போது, என்னைமட்டும் அவமானம் பிடுங்கித்தின்னவில்லையா?"

அழுக்குப்பெட்டியில் அடைக்கலம் புகுந்திருந்த பைரன், "இவள் கல்லில் நாருரிப்பாள்போலிருக்கிறதே!" என்று மனதிற்குள்ளேயே சொல்லிக் கொண்டான். அழுக்கு நாற்றமும், புழுக்கமும்,

மூச்சு தாராளமாக விடமுடியாத நிலைமையும் அவனை மிகவும் சங்கடத்திலாழ்த்தின!

"லூஷியா! என்னை மன்னித்துவிடு!" என்று கிழக்கணவன் கெஞ்சினன்.

"போதும்! முதலில் என் படுக்கையறையைவிட்டு வெளியே போ! போ!" என்று அவள் கத்தியதும், தன் ஆட்களோடு அவன் வெளியே சென்றுவிட்டான்.

அறைக் கதவைத் தாளிட்டுவிட்டு, அழுக்குப் பெட்டியிலிருந்த காதலனை வெளியே வரச்சொன்னள்.

"உமக்கு எதிர்பாராதவிதமாக, என்னல் சங்கடம் ஏற்பட்டுவிட்டது! மன்னித்துக் கொள்ளுங்கள்!" என்று சொல்லி, அவனது உதட்டில் முத்தமிட்டாள்.

"வேலைக்காரர்கள் செல்லும் படிகளின் வழியாக வெளியேறிவிடுங்கள்! வேலைக்காரி உமக்கு வழி காட்டுவாள்!"

மார்போடு அவளை இறுக அணைத்துக்கொண்டு, செவ்விதழ்களில் தேனை உறிஞ்ச ஆரம்பித்தான்.

"போதும் பைரன்! உம்மை அவன் பார்த்துவிட்டால், கொன்றுவிடுவான்! அவர்கள் குழப்பத்திலிருக்கிறார்கள்! இதுதான் தக்க சமயம், வெளியே சென்றுவிடுங்கள்!"

பைரன் அறையைவிட்டு வெளியே சென்றதும், அவள் கட்டிலின்மீது சாய்ந்து கண்ணீர்விட்டாள்.

நந்தவனத்தின் மதிற் சுவரைத் தாண்டிக் குதித்து, பைரன் தெருவை அடைந்தான். அப்பொழுதுதான் அவனல் தாராளமாக மூச்சுவிட முடிந்தது.

"இந்தப் பெண்ணிற்கு அழகைப்போலவே, அற்புதமான மூளையுமிருக்கிறது!" என்று முணுமுணுத்து, தனக்குத்தானே சிரித்துக்கொண்டான்.

# 10. 'ஐயோ! காதலா? வேண்டாமே!'

தெருக்களில் இருள் கொட்டி வைத்திருந்தது. முன்பின் தெரியாத வெளிநாடுகளில், தான் பெறும் அனுபவங்களைப் பற்றி எண்ணிய வண்ணம், பைரன் நடந்து கொண்டிருந்தான். இந்த இரவு, அவனது வாழ்க்கையில் மறக்கமுடியாத ஓர் இரவு.

சிறிது நின்றான். திரும்பிப் பார்த்தான். ஹாஷியாவின் மாளிகையில் எரிந்துகொண்டிருந்த விளக்குகள், இருளில் நன்றாகத் தெரிந்தன.

"அதோ காரிருளைக் கிழித்துக்கொண்டு பிரகாசம் தெரிகிறதே, அந்த மாளிகையில் ஒரு கனி மாது இருக்கிறாள்! அலுப்பு சலிப்பு இல்லாமல் அனுபவிப்

பதற்கு ஏற்ற ஆரணங்கு அவள்! பருக பருகத் திகட்டாத் தேன், அவள்! நுகர நுகர மணங் குன்ருத தாமரை, அவள்! ஆகா, வாழ்விலே நான் மறக்க முடியாத வானவில், அவள்!" ஹர்ஷியா மாளிகையின் விளக்கைப் பார்த்ததும், அவன் இவ்வாறெல்லாம் எண்ணமிடலானுன்.

ஜன நடமாட்டமில்லாத தெருக்களின் வழியே திரும்பவும் நடக்க ஆரம்பித்தான். தான் தங்கியிருந்த ஓட்டலின் மாடிப் படிகளில் ஏறி அவன் சென்ற போது, வேலைக்காரனுன வில்லியம் பிளட்சரின் அறையில் ஏதோ சப்தம் கேட்கவே, தயங்கி நின்ருன்.

"தூக்கத்திலிருந்த என்னை ஏன் எழுப்பினுய்?" என்று வில்லியம் கத்தினுன்.

"கத்தாதே, யாராவது விழித்துக் கொள்ளப் போகிருர்கள்!" என்று ஒரு பெண் மெதுவாகப் பேசினுள்.

"வில்லியத்தின் அறையில் பெண் குரல்!" என்று பைரன் முணுமுணுத்துக் கொண்டே, அந்த அறையின் கதவு பக்கமாக நின்று, என்ன பேசுகிருர்கள் என்பதைக் கவனிக்க ஆரம்பித்தான்.

"வழி தெரியாமல், இந்த அறையினுள் வந்து விட்டாயா?" என்று வில்லியம் திரும்பவும் உரத்த குரலில் கேட்டான்.

"இதோபார்! ஏன் இப்படி கத்துகிறாய்?......... வழி தெரியாமல் இந்த அறைக்கு நான் வரவில்லை!.."

"வேறு?"

"உன்னோடு பேசத்தான் வந்தேன்!"

"பேச வந்தவள், ஏன் என் பக்கத்தில் படுக்கையில் படுத்தாய்?"

"உனக்குக் கொஞ்சம்கூட சூட்சுமம் தெரியவில்லையே!"

"சூட்சுமமாவது சுண்ணும்பாவது! நடு ஜாமத்தில், நான் தனியாகப் படுத்துக் கொண்டிருக்கும் போது வந்து, பக்கத்தில் ஏன் படுத்தாய்? இதற்கு முதலில் பதில் சொல்!"

"எனக்கு......"

"அட! ஏன் தயங்குகிறாய், சொல்!"

"எனக்கு....வெட்கமாக இருக்கிறது, சொல்ல!"

"வெட்கமா?"

"ஆமாம்! எனக்கு உன்மேலே காதல்!"

"ஐயோ! காதலா? வேண்டாமே!"

"பயப்படாதே! யாரும் பார்த்துவிடமாட்டார்கள்!" என்று சொல்லிக் கொண்டே அவன் கையைப் பிடித்தாள்.

"ஐயோ! வேண்டாம்! நான் கல்யாணமானவன்! எனக்கு மனைவியிருக்கிறாள்!"

"எங்கே?"

"இங்கிலாந்து தேசத்திலே!"

"போர்ச்சுகல் தேசத்தில், ஒரு மனைவி வேண்டாமா?"

"தூ! அந்தக் கெட்ட வழிக்கெல்லாம் நான் ஆளில்லே!" என்று சொல்லிக் கொண்டே, அவளைக் கை பிடித்திழுத்துக் கொண்டுபோய் அறைக்கு வெளியே விட்டான்.

பைரனைப் பார்த்ததும், அந்தப் பெண் படிகளில் இறங்கி ஓடி விட்டாள்! பைரன் கலகலவெனச் சிரித்தான்.

"வில்லியம்! ஒரு பெண்ணை இப்படியா நடத்துவது?"

"இல்லை எஜமான்! நாம் வந்து இந்த ஓட்டலில் தங்கியதிலிருந்து, என்னை இவள் ஆடு முறைப் பதைப்போல முறைத்துக் கொண்டிருந்தாள்! திடீரென்று இன்றிரவு என் பக்கத்தில் வந்து படுத்துக் கொண்டாள்!" என்று கோபத்தோடு வில்லியம் கூறியதைக் கேட்டதும், பைரன் திரும்பவும் சிரித்தான்.

"அவளோடு சிறிது நேரம் விளையாடினால், பிரயாணத்தின் களைப்பு போய் விடுமே!"

"வேண்டாம் எஜமான்! என் மனைவி சல்லிக்குத் தெரிந்தால், அவள் என்ன பாடுபடுவாள்?

எஜமான், இந்த வெளி தேசங்களே எனக்குப் பிடிக்கவில்லை! சுத்த மோசம்! சுத்த மோசம்!" என்று வெறுப்பு நிறைந்த குரலில் வில்லியம் கூறினன்.

"வெளி தேசங்கள் உனக்குப்பிடிக்க வில்லை என்ருல், நீ இங்கிலாந்துக்குத் திரும்பிவிடு! சல்லியோடு இன்பமாக நாட்களைக் கழிக்கலாம்!"

"எஜமானே! நானில்லாமல் உங்களால் பிரயாணம் செய்ய முடியுமா? என்னைத் தவிர உங்களது மேன்மை, வேறு யாருக்குத் தெரியும்? என் எஜமான் எங்கெங்கு செல்கிருரோ, அங்கெல்லாம் சென்று அவர் நலத்தைக் கவனித்துக் கொள்ள வேண்டியது, என் கடமை அல்லவா? ஆனல் இந்த காப்பி நிறப் பெண்களின் வலையில் மட்டும் நான் விழமாட்டேன்!" என்று சிரித்துக் கொண்டே வில்லியம் கூறினன்.

பைரன் புன்னகை செய்துவிட்டு, தன் நண்பனை ஆப்பவுஸின் அறையினுள் நுழைந்தான். மெழுகுவத்தியின் வெளிச்சத்தில் அவன் ஏதோ அந்நேரத்தில் எழுதிக் கொண்டிருந்தான். காலடிச் சப்தத்தைக் கேட்டதும் அவன் திரும்பி பார்த்தான். பைரனைக் கண்டதும், அவன் முகத்தில் புன்னகை தோன்றியது.

"இந்நேரத்தில் என்ன எழுதுகிருய்? நான் சென்றதிலிருந்து, இன்னும் நீ எழுதிக் கொண்டிருக்

கிருய் என்று நான் நினைக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு, பைரன் சிரித்தான்.

"எங்களை எல்லாம் மறந்துவிட்டாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!" என்று குறும்போடு ஆப்பவுஸ் கூறினன்.

"அவள் மிகவும் அழகி! என் வாழ்க்கையில் அப்படிப்பட்ட அற்புதமான பெண்ணை நான் பார்த்ததே கிடையாது!"

"ஒவ்வொரு பெண்ணும், ஆரம்பத்தில் உனக்கு அப்படித் தோன்றுவதுதானே, வழக்கம்?

"புது ஜோரில் எல்லாப் பெண்களும் மோகனங்கிகளைப் போலத் தோன்றினலும், இவள் ஒரு தனி ரகம்!"

"பொழுது போக்கிற்காக உனக்குப் பெண்கள் தேவைப்படுகிருர்கள், பைரன்!"

"பொழுது போக்கிற்காகமட்டுமல்ல, என் மனப் பசியைத் தணிக்கவும் மங்கையர் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றனர்! இளமை பொங்கும் பெண்களோடு குலாவும்போது, எனக்கு இரட்டிப்பு வாழ்நாள் வந்து விட்டதைப் போலத் தோன்றுகிறது!"

"மலரைப் பறித்து நுகர்ந்ததும் வீசியெறிந்துவிடுவதைப்போல, மங்கையரையும் நீ நடத்துகிருய்!"

"ஆமாம், ஆப்பவுஸ்! சுவைத்ததும் எறிந்து விடுவேன்! ஒரே கனியைத் திரும்பத் திரும்ப ருசி பார்க்கும் பழக்கம் என்னிடமில்லை! பெண் மிகவும் கவர்ச்சிகரமானவள்! உலகிலுள்ள எல்லாவற்றை யும்விட அவளுக்கு அதிக சக்தியுண்டு! ஒருநாள் அவளோடு கழித்துவிட்டால், மறுநாள் அவள் எனக்கு வெறும் சருகு ஆகிவிடுகிறாள்! இதுதான் என் பரிபூர்ணமான காதல் கதை! ஆனால் ஒரே ஒரு பெண்—என் ஜீவனோடு ஜீவனாகிவிட்ட அந்தப் பெண்ணை மட்டும் என்னால் மறக்க முடியவில்லை! சதா சர்வகாலமும் அவள் என் இதய பீடத்தில் சதிராடிக் கொண்டிருக்கிறாள்!"

பைரன் திடீரென்று பேச்சை நிறுத்திவிட் டான். மேரி சாவொர்த் அவன் மனக் கண்முன் வந்து நின்று, முத்துப் பற்களைக் காட்டினாள். அவன் முகம் வாடியது.

யாரை எண்ணி அவன் அப்படி முகவாட்ட மடைகிறான் என்பதை அறிந்து கொண்ட ஆப்பவுஸ், பேச்சை வேறு திசையில் திருப்பினான்.

"நாளைய தினம் நாம் ஸ்பெயினுக்குப் புறப்படு கிறோம்! அங்குள்ள மலைகளின் அமைப்பு மிகவும் அற்புதமானது என்று உனக்கு முன்னரே நான் சொல்லியிருக்கிறேன்!"

"ஆமாம் நன்ருக நினைவிருக்கிறது! தூக்கம் வருகிறது! நீ படுத்துக் கொண்டு ஸ்பெயின் தேசத்து மலைகளைப் பற்றி கனவு கண்டு கொண்டிரு!"

"நீ?"

"நானும் கனவு காணப் போகிறேன்!"

"எதைப் பற்றியோ?"

"அங்கே கிடைக்கப் போகும் அழகு மேனிகளைப் பற்றியும், நீல விழிகளைப் பற்றியும்!" என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டு, பைரன் தன் அறைக்குச் சென்று விட்டான்.

# 11. கன்னியும் காய்ச்சலும்

போர்ச்சுகல் நாட்டின் துறைமுகமான லிஸ்பன் நகரத்தைவிட்டு, நண்பனேடும் வேலைக்காரனேடும் பைரன் புறப்பட்டான். ஒரு ஊரில் ஒரு வாரத்திற்குமேல் அனேகமாக அவன் தங்குவது கிடையாது. எனவே பற்பல ஊர்களையும் தேசங்களையும், வேகமாகக் கடந்து சென்று கொண்டே இருந்தான்.

எந்தந்த ஊரில் அவன் தங்கினலும் விளக்கின் ஒளியைப் பார்த்ததும் விட்டில் பூச்சிகள் வந்து விழுவதைப்போல—கவிஞனின் வட்டமான வசீகர முகத்தைக் கண்டு மான்விழி மடந்தையர் மயங்கி,

அவனது மடியிலே கொடிபோல் துவண்டு, கொள்ளை கொள்ளையாக இன்பம் கொடுத்தனர். புது புது மலர்கள்! புது புது மணம்! விதவிதமான கனிகள்! வெவ்வேறான இனிப்பு!

போர்ச்சுகல், ஸ்பெயின், மால்டா தீவு, அல்பேனியா ஆகிய தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு, பைரன் கிரீஸ் தேசம் வந்து சேர்ந்தான்.

அப்பொழுது கிரீஸ் துருக்கியர்களின் ஆதிக்கத்திலிருந்தது. டில்பி என்ற சிறிய நகரத்தில் தங்கியிருந்தபோது, ஒரு நாள் பைரனும் ஆப்பவுஸும் ஒரு சிறிய மலையின்மீது இருந்த சூரிய தேவனை அபோலோவின் கோயிலுக்குச் சென்றனர். துருக்கியர்களின் படையெடுப்பினால், அழகிய அக்கோயில் ஆங்காங்கே பழுதாகிவிட்டிருந்தது. ஒரு காலத்தில் மந்தைமந்தையாகப் பக்தர்கள் வந்து கொண்டிருந்த அந்த இடம், இப்பொழுது ஜனநடமாட்டமே இல்லாத பாலைவனம்போலிருந்தது.

மலையின்மீது இருந்தபடியே நகரத்தின் எழிலைப் பைரன் கவனித்தான். வீதிகளில் துருக்கிய சிப்பாய்கள் ஆணவத்தோடு நடந்துகொண்டிருக்கிறார்கள். அந்தச் சிப்பாய்களைக் கண்டு கிரேக்கர்கள், பயந்து ஓரமாக ஒதுங்கிநிற்கிறார்கள். பிளேட்டோ, அலெக்ஸாண்டர் ஆகியோரின் வம்சத்தில் தோன்றிய கிரேக்கர்கள்-ஒருகாலத்தில் உலகத்திலேயே

தீரத்தின் நிலைக்களமாக, வீரத்தின் விளைநிலமாக விளங்கியவரின் சந்ததியார்-இன்று அன்னியனைக் கண்டு அஞ்சி நடுங்கிப் பதுங்குகிறார்களே என்றெண்ணி, பைரன் மிகுந்த வேதனை அடைந்தான்.

சிறிதுநேரம் கழித்து அவர்கள் தங்கியிருந்த-காலஞ்சென்ற ஆங்கில ஸ்தானிகரின் மனைவியின்-வீட்டிற்குத் திரும்பினார்கள். அந்த விதவைக்கு முப்பத்தைந்து வயதிற்குமேலிருக்கும். அந்த வயதி லும் அவள் அழகியாகவே விளங்கினாள். அவள் பைரனிடம் மிகுந்த அன்போடு இருந்ததோடு, அவர் கள் வசதியாகத் தங்கியிருப்பதற்கான சவுகரியங் களையும் செய்துகொடுத்தாள். அவளுக்கு **தெரிசா** என்றொரு மகளிருந்தாள். கவிஞனுக்கான வசதி களைச் செய்துதரும் பொறுப்பை அந்த மகளிடம் ஒப்புவித்திருந்தாள்.

தெரிசாவுக்கு வயது பதினாறு இருக்கும். பைர னின் மனதைச் சொக்கவைக்கும் மிகுந்த அழகியாக அவளிருந்தாள். அவனைப் பார்க்கும்போதெல்லாம் புன்னகை செய்வாள். நாணத்தால் அவள் முகம் 'குப்'பென்று சிவக்கும்.

அந்த வீட்டில் தான் அமைதியோடும் ஆனந்தத் தோடும் இருப்பதாகப் பைரன் உணர்ந்தான். தன் பிரயாணத்தைப்பற்றிய கவிதை நூலொன்றை அங்கே அவன் எழுதத்தொடங்கினான். "சில்டி ஹரோல்டின் பிரயாணம்" என்பது அந்த நூலின்

பெயர். பைரனின் எல்லா நூல்களையும்விட அது சிறந்தது எனப் பாராட்டப்படுகிறது.

மாலை நேரம் வந்துவிட்டது என்பதைக்கூட கவனிக்காமல் ஒருநாள் நீண்டநேரம், அவன் எழுதிக்கொண்டே இருந்தான். அப்பொழுது மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு தெரிசா உள்ளே வந்தாள். கொண்டுவந்திருந்த தேநீரை அந்தக் கெண்டைவிழியாள் மேஜையின்மீது வைத்தாள். பைரன் நிமிர்ந்து பார்த்தான். அவள் புன்னகையோடு அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

தேநீர் அருந்திக்கொண்டே அந்தத் தேன்மொழியாளைப் பைரன் உற்றுப்பார்த்தான். அவளது கவர்ச்சியும் கன்னிப்பருவமும், அவனது கண்ணையும் கருத்தையும் கவ்வின.

அவளுக்கு வயது பதினாறு! அந்த வயதில்தான் மேரிசாவொர்த்தின்மீது அவன் காதல்கொண்டதும்!

அப்பொழுதுதான் அலர்ந்த ரோஜாமலரைப் போலிருந்த அந்தப் பெண்ணைப் பார்க்கப்பார்க்க, கழிந்துபோன நாட்களை எண்ணி அவன் வருத்தமடைந்தான். முட்டாள்தனமாகத் தன் இளமையைப் பாழாக்கிக்கொண்டதாக அவன் கருதினான். வாழ்க்கையை மிகவும் வேகமாகக் கழித்துவிட்டதைப் போலவும், வயதாகிவிட்டவனைப்போலவும் அவன் உணர்ந்தான்.

"உன்னிடம் இளமை கூத்தாடுறெது!" என்று மெதுவாக அவன் கூறினன்.

"நீங்களும் வயதானவராகத் தெரியவில்லையே!" என்று அவள் நாணத்தோடு முணுமுணுத்தாள்.

"பார்வைக்கு நான் வயதானவனைப்போலத் தெரியமாட்டேன்! ஆனல் சிலசமயங்களில் எப்படி நான் உணருகிறேன்!"

"நீண்டநேரம் எழுதியதால் மிகுந்த களைப்போடு இருக்கிறீர்கள்! கொஞ்சம் மது அருந்துகிறீர்களா?"

"மதுவா?"

"ஆமாம்!"

அவன் எழுந்து அழகியின் அருகே நெருங்கினன். அப்பொழுது அந்த அறையே கிடுகிடுவென்று ஆடுவதைப்போல அவனுக்குத் தோன்றியது. வீட்டின் கூரையும் தரையும் ஒன்ருவதைப்போல அவனுக்குத் தெரிந்தது. அவன் தலை கிறுகிறுவெனச் சுற்றியது. அப்படியே வேரற்ற மரத்தைப்போலத் தரையில் சாய்ந்துவிட்டான்.

தெரிசாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன செய்வதென்றே தெரியாமல் சில விஞடிகள் கற்சிலை போல் நின்றுவிட்டாள். சிறிது அதிர்ச்சிக் குறைந்ததும் அறையைவிட்டு வெளியே ஓடி, "அம்மா! அம்மா!!" என்று கத்தினள். அவள்

அம்மாவும் வேலைக்காரர்களும் ஓடிவந்தனர். பைரனைத் தூக்கிக் கட்டிலில் படுக்கவைத்தனர்.

ஜுரத்தோடு பலநாட்கள் அவன் படுக்கையிலேயே கிடந்தான். ஜுரத்தின் வேகம் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டிருந்ததே ஒழிய, கொஞ்சமும் குறையவில்லை. அவன் ஏதேதோ பிதற்றினான். அவன் மனதில், சென்றுபோன நாட்கள் கோர உருவத்தோடு தோன்றின, மேரி சா வொர்த்தின் உருவமும், தெரிசாவின் உருவமும் ஒன்றோடொன்று கலந்துவிட்டதுபோன்ற பிரமை அவனுக்கு ஏற்பட்டது.

எஜமான் செத்துவிடுவாரோ என்றுகூட வில்லியம் எண்ணிவிட்டான். பத்துநாட்களுக்குப்பிறகு பைரனின் ஜுரம் சிறிது குறைந்தது. பிறகு சில நாட்களில் அவன் எழுந்து உட்காரவும், சிறிது எழுந்து நடக்கவும் ஆரம்பித்தான்.

அந்தநேரத்தில் ஆப்பவுஸ் இங்கிலாந்துக்குத் திரும்பவேண்டிய அவசியம் வந்துவிட்டது. தனது அன்பான நண்பனைத் தனியே விட்டுச்செல்ல மனமின்றி, அவன் வருத்தத்தோடு தாயகம் திரும்பினான்.

பைரனுக்கு இங்கிலாந்திலிருந்து தன் வக்கீல் ஹான்சனிடமிருந்து பல கடிதங்கள் வந்தன. மேலும் தன்னால் பணம் அனுப்ப முடியாதென்றும், உடனே பைரன் திரும்ப வேண்டுமென்றும் வக்கீல் கண்டிப்

போடு கடிதம் எழுதியிருந்தான். வேறு வழியின்றி பைரன் இங்கிலாந்து திரும்பினன்.

அவன் லண்டனை அடைந்தபோது, ஆப்பவுஸ் அங்கே இல்லை. அவன் ராணுவத்தில் சேர்ந்து, லண்டனுக்கு வெகு தூரத்தில் ஏதோ ஒரு ஊரில் இருந்து கொண்டிருந்தான்.

"சில்டி ஹரோல்டியின் பிரயாணம்" என்ற நூலை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைப் பைரன் கவனித்தான். அந்த நூல் வெளியானல் தன் பேரும் புகழும் அதிகமாகுமென்று அவன் நம்பினன். அந்த நம்பிக்கை, பொய்யாகிவிடவில்லை.

## 12. துக்கம்! மகிழ்ச்சி! ஏமாற்றம்!

சொந்த கிராமமான நியூ ஸ்டீடில், பைரனின் தாயார் மிக்க வேதனையான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தாள். அவளுக்குக் கிடைத்துவந்த சொற்ப வருமானம், இன்பமான வாழ்க்கையை நடத்தப் போதவில்லை. ஆனல் முரட்டுச் சுபாவமும் குடிப் பழக்கமும் அவளைவிட்டுப் போகவில்லை.

ஒருநாள் அவள் மாடியை விட்டுக் கீழே இறங்கி வந்தாள். அப்பொழுது நன்ருகக் குடித்துவிட்டு, அந்த போதையில் மிதந்துகொண்டிருந்தாள். வேலைக்

காரி ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து அவளிடம் தந்தாள். அதை அவள் பிரித்துப் படித்தாள்.

பைரன் வாங்கின கடன் சம்மந்தப்பட்ட கடிதம் அது. அதைப் படித்ததும் — தரவேண்டிய கடன் தொகையைக் கவனித்ததும் — அவள் கத்த ஆரம்பித்துவிட்டாள். மகனை வாயில் வந்தபடித் திட்டிக் கொண்டே, வேகமாக படிகளின்மீது எறினள் — மாடிக்குச்:செல்ல. திடீரென்று கால் நழுவிவிட்டது! குடி வெறி வேறு. உருண்டு கொண்டே வந்து கீழே விழுந்தாள். விழுந்தவள், திரும்பவும் எழுந்திருக்கவே இல்லை. பிணமாகிவிட்டாள்! எவ்வளவு முரட்டுத்தனமாக வாழ்ந்தாளோ, அவ்வளவு முரட்டுத்தனமாகவே மாண்டாள்.

லண்டனிலிருந்த பைரனுக்குச் செய்தி கிடைத்தது. அந்தச் செய்தி அவனை மிகுந்த வருத்தத்தில் ஆழ்த்தியது. உடனே அவன் தன் சொந்த கிராமத்திற்குச் சென்று, அன்னைக்குச் செலுத்தவேண்டிய கடைசி மரியாதைகளைச் செலுத்திவிட்டு, அங்கு சிறிது காலம் தங்கியிருக்க நினைத்தான்.

பைரனின் புதிய நூல் வெளியாயிற்று. அது மக்களின் மனதைப் பெரிதும் கவர்ந்து விட்டது. அந்த ஒரே ஒரு புத்தகம் பைரனை, இலக்கியவானிலே ஜகத்ஜோதியாகப் பிரகாசிக்கும் சூரியனுக்கி விட்டது.

அவன் லண்டனுக்குத் திரும்பியதும், தன் வாழ்க்கையில் பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டதென் பதைக் கண்டான். முன்பெல்லாம் அலட்சியத்தோடு அவனைப் பார்த்தும் பார்க்காதவர்களைப் போலச் சென்றவர்களெல்லாம், அவனைக் கண்டதும் மரியா தையோடு அருகே வந்து பேச ஆரம்பித்தார்கள். ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வேறு வந்து குவிந்தன. சுருக்கமாகச் சொன்னல், அவனது இருபத்திநான்காம் வயதில், லண்டன் அவனது காலடியில் கிடந்தது.

ஒரு நாள் அவன் வழக்கமாகச் செல்லும் ஓட் டல் ஒன்றுக்குச் சென்றான். நடன அறைக்குள் நுழைந்தபோது, அவனைப் பார்த்துப் பெண்கள் புன்னகை செய்தனர்.

அங்கே அப்பொழுது, ஆணும் பெண்ணுமாக உடலோடு உடல் ஒட்டியும் ஒட்டாததும்போல், நடன மாடிக்கொண்டிருந்தனர். சில பெண்கள் தங்க ளோடு நடனமாடும்படி பைரனை அழைத்தனர். அவன் மறுத்துவிட்டான்.

ஒரு நாற்காலியில் உட்கார்ந்தபடி, ஆடும் உட லழகிகளைக் கவனிக்க ஆரம்பித்தான். அப்பொழுது அவன் பக்கத்தில் சீமாட்டி மெல்போர்ன் வந்து உட்கார்ந்து, தன்னை அறிமுகம் செய்து கொண்டாள். அவளுக்கு வயது அறுபதுக்குமேலிருக்கும். பைர னின் கவிதைகள் அவள் உள்ளத்தை அதிகமாகக்

கவர்ந்துவிட்டன. ஆகவே அவனோடு பேசுவதிலும், அவனைப் பார்ப்பதிலும் ஒரு தனியான திருப்தி யடைந்தாள்.

சிறிது நேரம் இருவரும் கவிதா உலகத்தைப் பற்றிப் பேசினர். சீமாட்டி தன் மருமகளான **கரோலின் லாம்பு** என்ற அழகியைக் கவிஞனுக்கு அறிமுகம் செய்தாள். அந்தப் பேரழகி பைரனின் மனதில் ஒரு நொடியில் புகுந்துகொண்டாள். அவளை இமைகொட்டாமல் பார்த்தான். அழகி முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொணடாள்.

பைரன்! நீங்கள் விரும்பினால், கரோலின் உங்களோடு நடனமாடுவதில் பெருமை கொள்வாள்!'' என்று சிரித்துக்கொண்டே சீமாட்டிக் கூறினாள்.

"பைரன் எழுந்தான். கரோலினின் கையைப் பிடித்தான். அவள் கோபத்தோடு, பிடித்தகரத்தை உதறிக்கொண்டு அந்த அறையை விட்டு வெளியே சென்று விட்டாள். அவளது இச் செய்கை அறையிலிருந்த அனைவரையும் திகைக்கச் செய்து விட்டது. சீமாட்டியின் முகம் சுண்டி விட்டது. கவிஞனின் முகத்தில் அசடு வழிந்தது.

"இந்த அகங்காரியோடு அவள் கணவன் வில்லியம் லாம்பு எப்படிதான் வாழ்கிறானோ!'' என்றாள் ஒருத்தி.

"இவள் யாருக்குமே அடங்குவதில்லையாமே?'' என்றாள் மற்றொருத்தி.

"அழகி என்ற நினைப்பிலே, ஆணவம் போலிருக்கிறது!" என்றாள் வேறொருத்தி.

இப்படியாக அந்த அறையிலிருந்த அனைவரும் தனித்தனியாக அவளைப் பழித்தும் இழித்தும் பேசலானார்கள்.

"மன்னிக்கவேண்டும்!" என்று சீமாட்டி பேச்சை ஆரம்பித்தாள்.

"பரவாயில்லை! இதில் எனக்கு ஒன்றும் கவலை இல்லை!" என்றான் பைரன்.

"நாளை எங்கள் வீட்டில் ஒரு விருந்து. அதற்குத் தாங்கள் அவசியம் வரவேண்டும்!" என்று கெஞ்சி அழைத்தாள் சீமாட்டி. "சரி" என்று அவன் இசைந்தான்.

மறுநாள் சீமாட்டியின் வீட்டிற்குள் அவன் நுழைந்தபோது, உள்ளே ஒரே சிரிப்பு மயமாக இருந்தது. அவனைக்கண்டதும் அனைவரும் மரியாதை செலுத்தினர். பிறகு நடனம் ஆரம்பமாயிற்று. கரோலின் அவன் பக்கம் வந்து நின்றாள். ஓரவிழிகளால் அவனைப் பார்த்துக்கொண்டே, கையை நீட்டினாள். அந்தக் கரத்தை அவன் சிறிது தயக்கத்தோடே பிடித்தான். இருவரும் சிறிது நேரம் மற்றவர்களைப் போலவே நடனமாடினர்.

"மாடிக்குச் செல்லலாம்!" என்று அவள் மெதுவாகக் கூறியதும், "சரி" என்று சொல்லிக்கொண்டே அவளைப் பின் தொடர்ந்தான்.

அங்கே அழகான ஒரு சிறிய அறையினுள் இருவரும் நுழைந்தனர்.

"கரோலின், என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லையா?" என்று உட்கார்ந்ததும் அவளைப் பார்த்து அவன் கேட்டான்.

"நான் அப்படிச் சொல்லவில்லையே!"

"நேற்று என்னோடு நடனமாட ஏன் மறுத்தாய்?"

"எனக்குப் பயமாக இருந்தது!"

"எதைக் கண்டு உனக்கு பயம் ஏற்பட்டது!"

"உமது கவிதைகளை நான் படித்திருக்கிறேன்! அந்தக் கவிதைகள், என் மனதில் ஏற்படுத்திய கொந்தளிப்பிலிருந்து, இன்னும் நான் விடுபடவே இல்லை!"

"என் கவிதைகளா உன்னை கலங்கும்படிச் செய்துவிட்டன? இப்பொழுது நீ ஏன் நடுங்குகிறாய்? உன்னிடம் என் கவிதைகளைப் பற்றி பேச நான் வரவில்லையே! என்னைக் கண்டு ஏன் இப்படிப் பயப்படுகிறாய்?"

"தெரிய வில்லை!"

"சாதாரண மனிதனான என்னிடமா உனக்குப் பயம்?"

"சாதாரண மனிதரல்ல தாங்கள்! ஆணழகர் — ஆகவே உம்மைப் பார்க்கும்போது......"

பேச்சை எப்படி முடிப்பதென்று புரியாமல் அவள் திணறினாள். அவள் அச்சத்தின் காரணத்தை அவன் புரிந்துகொண்டான். அவன் அழகு எங்கே தன்னைத் தவறான வழிக்கு இழுத்துக்கொண்டு சென்றுவிடுகிறதோ என்று அவள் அஞ்சினாள். அந்த அச்சமே அவனிடம் நெருங்காதபடி அவளைச் செய்தது. நடனம் ஆடியபோது, திடீரென்று தனியாக அவனிடம் பேசவேண்டுமென்ற சபலம் அவளுக்கு ஏற்பட்டது. அந்த உணர்ச்சியின் வேகத்தில், அவனை மாடியறைக்கும் அழைத்துக்கொண்டு வந்துவிட்டாள். அறையில் ........ தனிமையில் ...... அவள் நடுக்கம் கொண்டாள்.

"பயப்படாதே, கரோலின்!" என்று சொல்லிக்கொண்டே, அவளது கையைப் பிடித்தான். கையின் நடுக்கத்தை அவனால் உணர முடிந்தது.

"கரோலின்!"

"ஏன் சோகமாகப் பார்க்கிறீர்கள்?"

"என் சோகத்தை மகிழ்ச்சியாக மாற்றும் ஆற்றல் உன் கையிலிருக்கிறது, கண்ணே!"

"நான் எப்படி உமக்கு மகிழ்ச்சித்தர முடியும்? நான் திருமணமானவள்! எனக்குச் சொந்தமாக ஒரு கணவன் இருக்கிறார்!"

"மனமிருந்தால்........"

"நான் விலங்கிடப்பட்டிருக்கும் ஒரு கைதி! மனமிருந்தாலும், முடியாது!"

"நீ என்னைக் காதலிக்கிறாய் அல்லவா?"

"அவசியமற்ற இக் கேள்விக்கு நான் பதிலளித்தால், என் அவஸ்தைதான் அதிகமாகும்!...... நீங்கள் போகலாம்! ஆமாம், இப்பொழுதே இந்த அறையை விட்டுப் போய் விடுங்கள்!"

பைரன் அவளை அணைக்க முயன்றான். அவன் பிடியிலிருந்து தப்பி, அறையின் ஒரு மூலையில் போய் நின்றாள். அவள் முகத்தில் கோபம் பொங்கியது.

"என்னை மன்னித்து விடு! நான் செல்கிறேன்! நான் சென்ற சில வினாடிகளில் என்னை மறந்துவிட உன்னால் முடியும்! ஆனால் உன்னை என் வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாது!" என்று சொல்லிவிட்டு அந்த அறையை விட்டு வேதனையோடு வெளியே சென்று விட்டான்.

"பைரன்! நீ சொல்லியது உண்மை அல்ல!" என்று மனதிற்குள்ளாகவே அவள் முணுமுணுத்துக் கொண்டாள்.

அவள் மட்டும் அந்த அறையில் தனியாக நின்றிருந்தாள். அவனை மறந்துவிட வேண்டுமென்று நினைத்தாள். அது அவளால் முடியாத காரியமென்பதை மெல்ல மெல்ல உணர்ந்தாள். "பைரன்! பைரன்!" என்று நொடிக்கு நொடி அதிகமான சப்தத்தை, அவள் மனம் எழுப்பியது! ஏதோ ஒரு சக்தி, அவளைத் தவறான வழிக்கு இழுத்துச் செல்வதாக அவள் அறிந்தாள். அறிந்தாளே அன்றி

அந்தச் சக்தியினின்றும் அவளால் மீள முடியவில்லை! இந்த உலகமே அவளுக்குச் சுற்றியது. ஆனால் ஒரு வன் மட்டுமே ஆடாமல் அசையாமல் நிற்பதுபோல அவளுக்குத் தோன்றியது.

பைரனின் மனம் குழம்பியது. இப்படிப்பட்ட குணம்படைத்த பெண்ணை அவன் இதற்கு முன்னர் சந்தித்ததே கிடையாது. அவளொரு விசித்திரமான அழகியாக இருந்தாள். அவளை மறந்துவிடுவதுதான் நல்லதென்று நினைத்தான். ஆனால் அவளிடமுள்ள ஏதோ ஒருவிதகவர்ச்சி, அவனை வேதனைப்படுத்திற்று அன்று விருந்து முடிந்ததும், வாட்டத்தோடு தான் தங்கியிருந்த ஓட்டலுக்குத் திரும்பினான்.

"எஜமான்! உங்களைப் பார்க்க யாரோ ஒரு பெண் வந்திருக்கிறாள்!" என்று வேலைக்காரன் வில் லியம் கூறியதும், பைரன் திகைத்தான்.

"நான் யாரையும் சந்திப்பதாகச் சொல்ல வில்லையே".

"அவள் பெயரைச் சொல்ல மறுத்துவிட்டாள். என்ன செய்தி என்றும் கேட்டேன். வாழ்வதா சாவதா என்பதைப்பற்றிய விஷயம்! என்று சுருக்க மாகக் கூறிவிட்டு மௌனமாகிவிட்டாள்!"

பைரன் அறையினுள் நுழைந்தான். அங்கே அவன் கண்ட காட்சி, காண்பது கனவோ என்று எண்ணும்படிச் செய்தது.

## 13. பூரிப்புத்தந்தாள்! புளித்துவிட்டாள்!

“கரோலின், நீயா?” என்று வியப்பும் களிப்பும் நிறைந்த குரலில் பைரன் கேட்டான்.

“ஆமாம் பைரன், நான்தான்! உன்னைப்பார்க்கவும், உள்ளத்திலுள்ளதைத் தெரிவிக்கவுமே வந்திருக்கிறேன்!” அவள் குரலில் அச்சமும் ஆனந்தமும் கலந்திருந்தன.

“எல்லாம் நீ சொல்லியாகிவிட்டதே! எந்தவகையிலும் நீ இங்கு வந்தது சரியல்ல!”

“என்னைத் திருப்பியனுப்ப உன்னால் முடியாது! நான் காதலிக்கிறேன்—உன்னை! முதன்முறையாகப் பார்த்தபோதே, என் இதயத்தில் நீ தாவிப் புகுந்து கொண்டாய்! உனக்கு மகிழ்ச்சியளிக்கவே நான் பிறந்திருக்கிறேன் என்பதை இப்பொழுது உணர்கிறேன்!”

“உடனே உன் கணவனிடம் திரும்பிப்போ! என்னைக் காதலிப்பதாகச் சொல்வது பைத்தியக்காரத்தனம்! தெரிகிறதா—பைத்தியக்காரத்தனம்!”

“என்னைப்போலவே, உன் மனமும் என்னைக் காதலிக்கிறது!”

“கொஞ்சமும் கிடையாது, கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்—போய்விடு!”

"இல்லை! என்னோடு நீ விளையாடுகிறாய்!" என்று சொல்லிவிட்டு, முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டாள்.

பைரன் அவள் கைகளைப் பற்றினான். அவள் தலைமயிரை அன்போடு தடவிக்கொடுத்தான். பெண்ணின் அழகும் இளமையும், அவன் மனதில் குதூகலத்தை உண்டாக்கியது. அவள் முகத்தைத் திருப்பி உற்றுப்பார்த்தான்.

"பைரன்!" என்று சொல்லிக்கொண்டே, அவனை வேகமாக அணைத்துக்கொண்டாள். ஆவேசம் வந்தவளைப்போல, அவனது கன்னத்திலும் உதட்டிலும் மாறிமாறி முத்தங்கள் வைத்தாள்.

"நம் இருவரின் வாழ்க்கையையும் ஒன்றாகப் பிணைத்துவிட, உன்னால் முடியாது! அப்படிச் செய்தால், நாம் இருவரும் அழிந்துவிடுவோம்!" என்றான் பைரன்.

"மகிழ்ச்சியை எங்கேயாகிலும் அழித்துவிட முடியுமா?" என்று கூறிவிட்டு, அவனது உதட்டில் ஒரு முத்தம் கொடுத்தாள்.

"வாழ்க்கையின் உண்மையை உன்னால் தெரிந்து கொள்ள முடியாது! ஆகவே நாம் ஒருவரை ஒருவர் காதலிப்பதென்பது முடியாத காரியம்!"

"இதோ நாம் காதலிக்கிறோமே—ஏன் முடியாது என்கிறாய்?"

"காரோலின்! காதலென்பது ஒரு வானவில்! பார்ப்பதற்கும் ரசிப்பதற்கும் சிறிதுநேரம் அழகாகவும் ஆனந்தமாகவும் இருக்கும்! ஆனல் வானவில் நீண்டநேரம் அப்படியே இருந்துவிடாது— மறைந்துவிடும்; இதுதான் காதலேப்பற்றி, நான் கொண்டிருக்கும் கருத்து!"

"காதலும் உயிரும் ஒன்றேன்பதே என் கருத்து, பைரன!"

"அதனல்தான் உன்னேக் காதலிக்க முடியாது என்று சொல்கிறேன்! காதலும் உயிரும் ஒன்றென்று சொல்லும் பெண்களேக் கண்டாலே, எனக்குப் பிடிக்காது! கூந்தலில் சூடும் மலரென்று, காதலே எண்ணும் காரிகையரைக் கண்டால்தான், எனக்குப் பிடிக்கும்!"

"அப்படிப்பட்ட கேவலமானப் பெண்ணல்ல நான்!"

"என்ன செய்யலாம், உயிரைக் காதலுக்காகத் தத்தம் செய்யும் உயர்ந்த குணக்குன்று அல்லவே நான்!

"பைரன், முதலில் உன்னே அவமதித்தேனே, அதற்காகப் பழிக்குப்பழி வாங்கும் எண்ணத்தோடு பேசுகிறீர்கள் என்பதை, புரிந்துகொண்டேன்! என்னே வாட்டி வதைத்தது போதும்! தாள முடியாமல் தத்தளிக்கிறேன்......தயவுசெய், பைரன்! உன் அடைக்கலம், நான்! உன் அடிமை, நான்!" என்று

உணர்ச்சிமிக்கக் குரலில் சொல்லிக்கொண்டே, அவனது மார்போடு சாய்ந்து, கன்னங்களைத் தடவினாள். பைரன் ஏதோ கூற வாய்த்திறந்தான். திறந்த வாயைப் பேச முடியாதபடி அப்படியே மூடிவிட்டாள்.

"பைரன்! பேசாதே! பேசிப்பேசி என் வேதனையை அதிகமாக்காதே!"

"கரோலின்! உன்னைத்தொட நான் தகுதியற்றவன்! ஆபாசமான வாழ்க்கையை நடத்தினவன், நான்! ஆனந்தமற்ற சூழ்நிலையில் இப்பொழுது நான் சிக்கியிருக்கிறேன்! எனக்கிருக்கும் தொல்லைகள் போதாதென்று, நீவேறு தொல்லை தராதே!"

"பணம் பற்றிய தொல்லைகளாக இருந்தால், என் வைர நகைகளை உனக்குத் தந்துவிடுகிறேன்!"

"இல்லை, கரோலின்! உன்னிடமிருந்து நான் எதையுமே எதிர்பார்க்கவில்லை!"

"பைரன்! நன்ருக இப்படிப் பார்! என்னைக் காதலியாக நீ ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்னை நானே அழித்துக்கொள்வேன்! இது சத்தியம்!" என்று ஆத்திரத்தோடு சொல்லிக்கொண்டே, மேஜையின்மீதிருந்த பைரனின் கைத்துப்பாக்கியை எடுத்தாள்.

அவள் முரட்டுச்சுபாவம் வாய்ந்தவள் என்பதையும், சொல்லியவிதம் செய்துவிடும் துணிவு படைத்தவள் என்பதையும், பைரன் அறிவான். ஆகவே

துப்பாக்கியை அவள் கையில் எடுத்துக்கொண்டதைக் கண்டதும், அச்சமடைந்தான். புன்னகையோடு அவள் கையிலிருந்த துப்பாக்கியை வாங்கி, மேஜையின்மீது வைத்துவிட்டு, இறுக அணைத்து 'இச்' சென்று ஒரு முத்தமும் தந்தான். பரவசத்தால் அவள் முகம் மலர்ந்தது.

"கரோலின், வா! உன் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு வருகிறேன்!"

"எங்கு காதலிருக்கிறதோ, அதுதான் என் வீடு! பழையபடியே பேசினால், என் உயிரைப் போக்கிக் கொள்கிறேன், பார்!"

துப்பாக்கியை எடுக்கப்போன அவள் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். அடிக்கடி அவள் உடலைத் தொட்டதில், அவனுக்கும் உணர்ச்சி யேற்பட்டுவிட்டது, "சரி!" என்றான். "சந்தோஷம்!" என்றாள்.

பொழுது புலர்ந்தது. புன்னகையோடு அவள் பைரனை விட்டுப்பிரிந்தாள், நாட்கள் ஓடின. அவன்மீது கொண்ட காதல் அவள் மனதில் இன்னும் அதிகமாக ஓங்கிநின்றது. "தேனை உறிஞ்சியதும், தேன் அடையை வீசியெறிந்துவிடவேண்டும்! மதுவைப் பருகியதும், கோப்பையை எறிந்துவிடவேண்டும்!" என்ற எண்ணங்கொண்ட, அந்த எண்ணத்திலேயே நாட்களைக் கழித்துவந்த பைரனுக்கு, பூரிப்புத்தந்த கரோலின் புளித்துவிட்டாள்.

அப்பொழுது பைரனின் புகழ் இங்கிலாந்து முழுவதும் பரவியிருந்தது. ஆகவே அவன் செயல் ஒவ்வொன்றையும் மக்கள் உன்னிப்போடு கவனித்த னர். கரோலின், சீமான் வீட்டு மருமகள். அவள் குடும்பம் மிகவும் புகழும் கவுரவமும் வாய்ந்தது. எனவே பைரனும் அவளும் காதல் கொண்டது, லண்டன் முழுவதும் பேசப்படும் விஷயமாகிவிட்டது. பற்பல வட்டாரங்களில், அந்த வதந்தி காற்றுபோல் வேகமாகப் பரவ ஆரம்பித்துவிட்டது. அதை அறிந்த பைரன் மிகுந்த வேதனை அடைந்தான். கரோலினோடு கொண்ட தொடர்பை, பூர்ணமாக்க் கத்தரித்துக்கொள்ள வேண்டுமென்ற முடிவிற்கு வந்தான்.

"உன்னைப்போன்ற கவிஞர்கள், நல்ல முறை யில் நடந்துகொள்ளவேண்டுமென்று மக்கள் எதிர் பார்க்கிறார்கள்!" என்று ஒருநாள் பைரனிடம், சீமாட்டி மெல்போர்ன் கூறினாள்.

"எதைப்பற்றிச் சொல்லுகிறீர்கள்?" என்று சிறிது தயக்கத்தோடு பைரன் கேட்டான்.

"திருமணமானப் பெண்களோடு தொடர்பு வைத்துக்கொள்வது, எப்பொழுதுமே ஆபத்தான காரியமாகும்!"

"என்ன செய்யலாம், உணர்ச்சிகளை மனிதனால் கட்டுப்படுத்த முடியவில்லையே?"

"முடியாதுதான்!" என்று கூறிவிட்டு சீமாட்டி உரக்கச் சிரித்தாள். தன் மருமகளோடு கொண்டுள்ள உறவைப்பற்றிதான், சீமாட்டி மறைமுகமாகக் கூறுகிருள் என்பதை, அவன் புரிந்துகொண்டான்.

"திருமணம் ஒன்றுதான், உன்னை நல்லவழியில் அழைத்துச் செல்லும் என்று, நான் கருதுகிறேன்! பண நெருக்கடியிலிருந்தும்—மனக்கவலையிலிருந்தும்—நிரந்தரமான விடுதலையை, கல்யாணம் உனக்கு அளிக்கும்!"

"என்னைத் திருமணம் செய்துகொள்ள, எந்தப் பெண்ணுக்குத் துணிவும் தைரியமும் வரும்?"

"புகழ் மிக்க கவிஞனை உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள, எவ்வளவோ பெண்கள் பூரிப்போடு நான் நீ என்று முன்வருவார்கள்! நானொரு பெண்ணைச் சொல்கிறேன், நீ தவருக எண்ணிக்கொள்ள மாட்டாயே?"

"யார் அவள்?"

"என் அண்ணன் மகள் **அனபெல்லா,** உனக்குத் தெரியும் அல்லவா? அவளுக்கு உன்மீதும், உன் கவிதைகள்மீதும், நிறைய அன்பும் ஆசையும் உண்டு!"

"அப்படியா?"

"ஆமாம் பைரன், அவள் மிகவும் நல்ல பெண்! அத்துடன் அவளுக்கு ஏராளமான சொத்துமிருக்

கிறது! அந்தத் திருமணத்தின்மூலம் உங்கள் இருவருக்குமே மகிழ்ச்சி உண்டாகும்!''

"என்னை அவள் மணந்துகொள்ள இசைவாளா?

"முயற்சி செய்து பார், முடியாமல் போய் விடாது!''

"மணம் கவலைக்கு மாற்று மருந்தாகாது! சில சமயங்களில், அது தொல்லையாக முடிவதுமுண்டு!''

"தற்போது இருக்கும் உனது நிலைமையைவிட, வேறு எதுவுமே அவ்வளவு தொல்லையாக இருக்க முடியாது! கரோலினேடு கொண்டிருக்கும் உறவை அறுத்துக்கொள்! அது உங்கள் இருவருக்குமே நன்மையாக இருக்கும்! பைரன், உன்மீது நான் கொண்டிருக்கும் அன்பினல் இதையெல்லாம் சொல்கிறேன்—வேறுவிதமாக எண்ணிவிடாதே!''

"உங்கள் யோசனையை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்!''

இருவரும் ஒரு ஓட்டலினுள் நுழைந்தனர். அவளை விட்டுப் பிரிந்து, பைரன் தனியாக ஒரு இடத்தில் போய் உட்கார்ந்தான்.

"பைரன்!'' என்று அழைத்துக்கொண்டே, சீமாட்டி ஜேன் அவனை நோக்கிப் புன்னகையோடு வந்தாள். அவனைவிட இருபது ஆண்டுகளுக்கு மேல், அவள் மூத்தவளாக இருப்பாள். பெரிய பணக்காரி. அந்த வயதிலும் சிங்காரியாகவே

விளங்கினுள். அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

அவர்களிருவரும் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கையில், ஏதோ ஒரு குரல் பின்புறமாகக் கேட்கவே அவன் திரும்பிப்பார்த்தான். மலர்ந்த முகத்தோடு கரோலின் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அவன் முகத்தைச் சுளித்துக்கொண்டான்.

,'உன் அத்தையும் இங்கு வந்திருக்கிருள்'' என்று வெறுப்போடு அவன் கூறினன்.

“அதைப்பற்றியெல்லாம் எனக்கு அக்கறை இல்லை! உன்னைக் காண்பதில், பேசுவதில், மகிழ்ச்சி கொள்வதில்—யாரும்—எந்தச் சக்தியும்—என்னைத் தடுத்து நிறுத்த முடியாது!” என்று கடகடவென்று அவள் பதிலளித்தாள்.

சீமாட்டி ஜேன் அவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள். அந்தப் புன்முறுவலில் குறும்பு இருந்தது. பிறகு பைரனும் ஜேனும் எழுந்து, வேறொரு அறையினுள் நுழையச்சென்றனர். அறையினுள் நுழைவதற்கு முன்னர், அவன் கையைப் பிடித்து கரோலின் நிறுத்தினுள்.

“என்னைக் கவனிக்காமல், இவளோடு எங்கே செல்கிருய்!” என்று கோபத்தோடு அவள் கேட்டாள்.

“உன் தொல்லை அதிகமாகிவிட்டது! உன்னைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை!”

"ஏன், கிழவி கிடைத்துவிட்டதாலா?"

"கரோலின் இந்தக் குறும்புப்பேச்சை, உன் கணவனிடம் கூறு! உன் அறிவைக் கண்டு, அவன் மெச்சிக்கொள்வான்! பலமுறை சொல்லியாகிவிட்டது, உன்னோடு நான் உறவு வைத்துக்கொள்ள முடியாது என்று!"

"பைரன், நம் காதல்........."

"காதலில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று ஆயிரம்தடவைகள் சொல்லியிருப்பேன்! மலருக்கு மலர் பறந்துசெல்லும் வண்டு நான் என்பதை நீ அறிவாய்!"

"ஆமாம் அறிவேன்! வண்டு இப்பொழுது வாடிய மலரை நாடுகிறது."

"வாடியமலராக இருந்தாலும், தேன் கிடைத்தால் சரி!"

"பைரன், என்னோடு இப்பொழுது நீ வரப் போகிருயா இல்லையா?"

"பயமுறுத்துகிருயா? பயனென்றும் ஏற்படாது!"

"இதோபார்!" என்று சொல்லிக்கொண்டே, பக்கத்து மேஜையின்மீதிருந்த ஒரு கத்தியை எடுத்தாள்.

"என்னை நீ வெறுத்தால், இந்தக் கத்தியிலேயே நான் தற்கொலை செய்துகொள்வேன்!"

"நீ தற்கொலை செய்துகொண்டால், எனக்கென்ன நஷ்டம்!" என்று வெறுப்போடு சொல்லி விட்டு, அந்த அறையினுள் நுழைந்துவிட்டான்.

திடீரென்று ஒரு பெண்ணின் கதறல் கேட்டதும், ஓட்டலிலிருந்தவர்கள் அனைவரும் திடுக்கிட்டு, அப்பக்கமாக ஓடிவந்தனர். பைரனும் ஓடிவந்தான்.

கரோலினின் மார்பில் கத்தி நுழைந்துவிட்டிருந்தது. ரத்தம் குபுகுபுவென்று வெளியே ஓடி வந்துகொண்டிருந்தது. அவள் உணர்ச்சியற்றுத் தரையில் விழுந்துகிடந்தாள்.

சீமாட்டி மெல்போர்ன் மருமகளின் மார்பி லிருந்த கத்தியை இழுத்து, வெளியே எடுத்தாள். உடனே வேலைக்காரன்மூலம், தன் மகன் வில்லியம் லாம்பிற்குச் செய்தியனுப்பினாள். அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்க, பைரனுக்கு வேதனையாக இருந்தது.

"இவள் இப்படிச் செய்துகொள்வாள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!" என்று பைரன் தயக்கத்தோடு சொன்னான்.

"பைரன், உன்மீது நான் குற்றங் கூறவில்லை!" என்று சீமாட்டி பதிலளித்தாள்.

சீமாட்டியின் பெருந்தன்மை, அவனது கவலையை இன்னும் அதிகமாக்கிற்று. "லண்டனைவிட்டு, வெளியூரில் சிறிதுகாலம் நான் சென்றிருந்தால்

தான், கரோலின் என்னை மறப்பாள்!” என்று அவன் நினைத்தான்.

அந்த எண்ணத்தை அவன் ஜேனிடம் சொன்னான். பக்கத்திலிருக்கும் தன் கிராமத்தில், தன்னோடு அவன் சிலநாட்கள் தங்கியிருக்கவேண்டுமென்று, அவள் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

# 14. வாடிய மலரில் தேன்!

கிராமத்தில் சீமாட்டி ஜேனோடு அமைதியாக நாட்களைப் பைரன் கழித்துக்கொண்டிருந்தான். அவள் போக்கு அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவளுக்குக் குழந்தைகள் இருந்தன. கணவனும் இருந்தான். பைரனைவிட வயதில் மூத்த ஒரு பெண்ணும் அவளுக்கு இருந்தாள்.

“சூரியன் உதயமாகும்போது எப்படி அழகோடு விளங்குகிறதோ, அதேபோல அஸ்தமிக்கும் நேரத்திலும் அழகோடு இருக்கிறதல்லவா? பெண்கள் கன்னிப்பருவத்தில் கவர்ச்சிகரமாக இருப்பதைப் போலவே, இளமை குன்றி வயோதிகத்தை அடைவதற்குமுன்பும் அழகிகளாகவே தோன்றுகிறார்கள்!” இப்படி எண்ணியதும் பைரன், தனக்குத்தானே சிரித்துக்கொண்டான்.

ஒருநாள் மாலைநேரத்தில் பைரனும் சீமாட்டி ஜேனும், படகில் உல்லாசமாகச் சென்றுகொண்

டிருந்தார்கள். சின்னஞ்சிறு கன்னிப் பெண்ணைப் போல, அவள் சிரித்தும் குலுக்கியும் அவன் மனதை கவர்ந்தாள். அவளது கூந்தலை அவன் தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தான். அவனது சட்டையின் பொத்தானை அவள் திருகிக்கொண்டிருந்தாள்.

"இப்பொழுது கரோலின் எப்படி இருக்கிருளோ?" என்று சீமாட்டி பேச்சை ஆரம்பித்தாள்.

"ஜேன்! அவளைப் பற்றிப் பேசாதே! பேசினல் என் மனம் வேதனை அடைகிறது! அந்தப் பெண்ணின் காதல் வெறியினல், அவள் குடும்பக் கௌரவத்திற்கும், என் புகழுக்கும், கறை ஏற்பட்டு விட்டது!"

"உணர்ச்சிகளுக்குத் தன்னை அடிமையாக்கிக் கொள்ளும் அவளை, பைத்தியக்காரி என்றுதான் நான் சொல்வேன்! எவளாவது காதலுக்கு, அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பாளா? எனக்குக் காதலின்மீது விருப்பமில்லையா, அல்லது நான் காதல் செய்யாமல்தான் இருந்து விடுகிறேனு?......"

"இப்பொழுது என்னேடு நீ காதல் புரிந்து கொண்டுதானே இருக்கிருய்!"

"அதைத்தான் நான் சொல்கிறேன், பைரன்! குடும்பம், குழந்தைகள் முதலியவற்றைக் கவனித்து விட்டு, ஓய்வு நேரத்தில் பொழுது போக்கிற்காக நான் காதல் விளையாட்டில் ஈடுபடுகிறேன்! வாழ்க்

கையே காதல், காதலே வாழ்க்கை என்றெல்லாம் சிலர் சொல்கிறார்களே, அவர்களை அனுபவமில்லாத முட்டாள்கள் என்றுதான் நான் சொல்வேன்!''

"காதலைப் பற்றி நம் இருவரின் கருத்தும் ஒன்றாக இருப்பதினால்தான் — உன்மீது எனக்கு ஆசை அதிகம், ஜேன்!'' என்று சொல்லிக் கொண்டே, அவளை முத்தமிட்டான்.

"இப்பொழுது கொஞ்சம் கூட வெட்கப்படாம லிருக்கிறாயே, முதன்முதலாக நீ காதல் புரிய ஆரம் பித்தபோதும் இப்படித்தான் இருந்தாயோ?'' என்று கள்ளச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே, அவன் கேட்டான்.

"முதன் முதலாகக் காதல் புரிந்த போதா?''

"ஆமாம், ஜேன்!''

"அட பையா, அப்பொழுது உன் அம்மாவிற்கு கல்யாணம்கூட ஆகியிருக்காதே!'' என்று சொல்லி விடலாமா என்றுகூட, அவள் எண்ணினாள். அப் படிச் சொல்வது நாகரிகமல்ல என்பதினால் மட்டு மல்ல, அதைக் கேட்டதும் எங்கே அவன் தரப் போகும் இன்பத்தைத் தராமல் நிறுத்திவிடுவானோ என்ற பயமே, அவளை வாயை மூடிக்கொள்ளும்படிச் செய்தது.

"ஜேன், ஏன் மௌனமாகிவிட்டாய்?''

"ஒன்றுமில்லை, பைரன்! காற்று வேகமாக வீசுவதால், குளிர் அதிகமாகிறது!

"குளிரா? என் மார்பின் வெப்பம்......"

"ஆமாம், கண்ணாளா!" என்று சொல்லிக் கொண்டே, அவனை இறுகத் தழுவிக்கொண்டாள்.

"கன்னியரோடு பழகும்போது, எல்லாவற்றையும் நான்தான் முதலில் வலியவலிய செய்யவேண்டியிருக்கிறது! செய்யப்போவது இன்னதென்றே தெரியாதவர்களைப்போலவும், பாம்பு கடிக்குமோ தேள் கொட்டுமோ என்று பயந்து நடுங்குபவர்களைப் போலவும், பாசாங்கு செய்வார்கள்! ஆனால் இவள்..... நானாக எதையும் செய்யவேண்டுமென்று துளியும் எதிர்பார்க்கவில்லை! பசிகொண்டவன் வேண்டிய உணவைத் தானே எடுத்துச் சாப்பிடுவதைப்போல, தனக்குப் பிடித்தமானதை எல்லாம் இவளே செய்து கொள்கிறாள்! குமரிகளுக்கும் கொஞ்சம் வயதான பெண்களுக்கும் வித்தியாசம் இதுதான்!" என்று எண்ணி, அவன் மனதிற்குள்ளேயே சிரித்துக் கொண்டான். அவளது விருப்பமென்னும் காற்று வீசிய திக்கிலெல்லாம் வளைந்து தரும் நாணலானான், கவிஞன்! வாடியமலரில் தேன் இருக்கக் கண்டான்! உண்டான், களிப்புக்கொண்டான்!

ஒருவாரத்திற்குப் பிறகு பைரன், லண்டன் திரும்பினான். வேலைக்காரனை வில்லியம், எங் கெந்த கடன்காரர்கள் வந்து, என்னென்ன திட்டி

விட்டுச் சென்றூர்கள் என்பதைத் தன் எஜமான னிடம் தெரிவித்தான்.

அப்பொழுது பைரனுக்கு அறுபதாயிரம் பவுன் களுக்குமேல் கடனிருந்தது. நியூஸ்டீடிலிருக்கும் சொத்தையெல்லாம் விற்றூல்கூட, கடனுக்குச் சரி யாகாது. புகழின் மகிழ்ச்சி ஒருபுறமிருந்தபோதி லும், கடன்காரர்களின் தொல்லே மற்ளுருபுறம் அவனே வாட்டிவதைத்தது. மனிதப் பண்பும் இரக்கமுமில்லாத கடன்காரர்கள், அவனேக் கேவல மாகப் பேசவும், கண்டிப்போடு கேட்கவும் ஆரம் பித்துவிட்டார்கள். "நண்பர்களிடம் நயமாகப் பேசி பணம்பெற்று நாமம்போடுபவன்! நான் ஏமாந் தேன் நீங்களும் ஏமாறுதீர்கள்" என பறைசாற்றி, பிறர் நலத்துக்கு பாடுபடுவதாக நடித்து, தன் வாழ்வை உயர்த்திக்கொள்ளும் நச்சு எண்ணம் படைத்தவர்கள் நிறைந்த உலகில் பைரன்மட்டும் எப்படி நிம்மதியோடு வாழ முடியும்? இந்த வேதனேயி லிருந்து எப்படி விடுதலே பெறப்போகிறேம் என் றெண்ணி, அவன் நொடிக்குநொடி சாகாமல் செத் துக்கொண்டிருந்தான்.

**அந்தோ கடன் தீதே! அந்தோ கடன் தீதே!**
**வாங்கும்பொழுது கடன் மிகவும் கொண்டாட்டம்!**
**வைத்த கெடுக் கடந்தால் அதிக திண்டாட்டம்!**
**ஈங்குவை பணம் என்ருல் கால் கைகள் ஆட்டம்!**
**எடுப்பார் பின் அயலூர் ஓட்டம்!**

**அந்தோ கடன் தீதே! அந்தோ கடன் தீதே!**
**கடன் தருவோனோர் கசடனானலும்,**
**கடன் தரும் போதவன் துரையினைப் போலும்,**
**திடமொடு பேசுவான் அவனிடம் மேலும்**
**சிக்கினால் மானமேநிர் மூலம்!**
**அந்தோ கடன் தீதே! அந்தோ கடன் தீதே!**

கவிஞனான பைரன் இப்படி ராகத்தோடு பாட்டுப்பாடவில்லையே அன்றி, இதைவிட அதிகமாகவே மனதில் எண்ணி துக்கமடைந்தான். "கடன்! கடன்! கடன்!" என்று சதாகாலமும் அவன் உள்ளம் சோகத்தோடு கதறிக்கொண்டிருந்தது.

செயின்ட் ஜேம்ஸில் தங்கியிருந்த ஆசை அக்காளான அகஸ்டா, ஒருநாள் அவனைச் சந்தித்தாள். அவளைக் கண்டதில் பைரனுக்குப் பெருத்த மகிழ்ச்சி.

அவன் வாழ்க்கையில் எவ்வளவோ பெண்களைச் சந்தித்திருக்கிறான்—பழகி இருக்கிறான்—பரவசமடைந்தும் இருக்கிறான். ஆனால் இரண்டே இரண்டு பெண்கள்மட்டுமே, அவன் மனதில் நிரந்தரமான இடத்தைப் பெற்றிருந்தனர். ஒருத்தி மேரிசாவொர்த் மற்றொருத்தி அகஸ்டா. பல ஆண்டுகளுக்குப்பிறகு அகஸ்டாவைப் பார்த்ததால், மனதில் மறைந்து கிடந்த அன்பு அவ்வளவையும், அவள் மீது கொட்டினான். பிறகு இருவரும் அடிக்கடிச் சந்திக்கலானார்கள். அவளைக் காணும் நேரங்களிலெல்லாம்

அவன் மனம் அமைதியையும் ஆனந்தத்தையும் அடைந்தது.

கடன்காரர்களின் தொல்லை, விஷத்தைப்போல நாளுக்குநாள் ஏறிக்கொண்டே சென்றது. "இந்த வேதனையிலிருந்து எனக்கு விடுதலை உண்டா?" என்று அவன் தன்னைத்தானே அடிக்கடிக் கேட்டுக்கொண்டான்.

"திருமணம் ஒன்றுதான், உன்னை நல்ல வழியில் அழைத்துச் செல்லுமென்று நான் கருதுகிறேன்! பண நெருக்கடியிலிருந்தும்—மனக்கவலையிலிருந்தும் —நிரந்தரமான விடுதலையை, கல்யாணம் உனக்கு அளிக்கும்!" என்று அன்றொருநாள் சீமாட்டி மெல்போர்ன் கூறியது, அவன் நினைவிற்கு வந்தது. அந்தச் சீமாட்டியின் யோசனையின்படியே நடந்து கொள்வதென்று முடிவு செய்தான். அனபெல்லா என்ற அழகி, அடிக்கடி அவன் மனக்கண் முன் தோன்றி தோன்றி மறைந்தாள்.

## 15. கவலைக்கு மருந்து கல்யாணமா?

பைரனைத் திருமணம் செய்து கொள்ள அன்பெல்லா சம்மதித்து விட்டாள். அந்தச் சம்மதம், அவனுக்குக் களிப்புத் தருவதற்குப் பதில் கவலையையே தந்தது. இல்வாழ்க்கை என்பது ஒரு சிறை. சகல சுதந்திரங்களையும் பறி கொடுத்துவிட்டு, அந்தச்

சிறையில் தன்னைத்தானே அடைத்துக் கொள்வதை அவன் கொஞ்சமும் விரும்பவில்லை. கடன்காரர் களின் தொல்லையை எண்ணுகையில், அந்தக் கன்னியின் கையைப் பிடிப்பதைத் தவிர, வேறு வழி ஒன்றும் அவனுக்குப் புலனாகவில்லை.

திருமண தினத்தன்று காலை, அவன் சாலையோரமாகச் சிறிதுநேரம் உலாவிவிட்டு வரச் சென்றான். "இன்னும் சிலமணி நேரத்தில், கல்யாணம் எனும் சங்கிலியால் கட்டப்பட்டு, குடும்பம் எனும் இருண்ட சிறைக்குள் தள்ளப்படப் போகிறேன்!" என்று வேதனையோடு தனக்குத்தானே முணு முணுத்துக் கொண்டான்.

வாழ்க்கையில் ஏதோ பெரிய தவறைச் செய்து விட்டவனைப்போல அவன் துக்கமடைந்தான் கடந்துபோன நாட்களெல்லாம், அவன் கவனத்திற்கு வந்தன. மேரி சாவொர்த்மீது கொண்ட காதல், அக்காள் அகஸ்டாமீது கொண்ட அன்பு, ஆப்பவுஸ்மீது கொண்ட தோழமை — இவற்றை எல்லாம் அழித்து ஒழிக்கவும், சிதைத்துச் சீர்குலைக்கவுமே — அனபெல்லா, தன் வாழ்க்கைச் சோலையில் புகுகிறாள் என்றெண்ணினான்.

தேன் கிடைக்கும் மலர்களை நாடி, பண்ணிசைத்துப் பறந்து செல்லும் தும்பியாக — கவிதா மண்டலத்தில் கட்டுக் காவலில்லாமல் சுற்றித் திரியும் குயி

லாக — இனி தான் இருக்க முடியாது என்றெண்ணியதும், அவன் மனம் திடுக்கிட்டது.

வேதனையோடு அவன் வீட்டிற்குத் திரும்பினன். திருமண நேரம் வந்துவிட்டது. வேத புத்தகத்திலிருந்து பாதிரியார் ஏதேதோ படித்துக் காட்டினர். அந்த உபதேச மொழிகள் ஒன்றும் அவன் மனதில் பதியவே இல்லை. மோதிரத்தை அனபெல்லாவின் கையில் சொருகியபோது, "என் உயிரையும் உடலையும் இந்த ஒரு பெண்ணிடத்திலேயே ஒப்படைத்துவிடுவதா?" என நினைத்ததும், அவனுக்கு அழுகையே வந்துவிடும்போல் தோன்றியது. ஆனல் விரைவில் தன் உணர்ச்சிகளை ஒரு கட்டுக்குள் கொண்டு வந்துவிட்டான். இந்த திருமணத்தால், தான் களிப்படைவதாகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்று அவன் எண்ணினன்.

"உன் மகிழ்ச்சிக்காக இந்த மோதிரத்தை உனக்கு அளிக்கிறேன்!" என்று அனபெல்லாவின் முகத்தைப் பார்த்தபடி, சிரித்துக்கொண்டே அவன் கூறினன்.

பதிலொன்றும் சொல்லாமல் அவள் தலை குனிந்துகொண்டாள். அவனது முகத்தை ஒருமுறை பார்க்கவேண்டுமென்று அவள் எண்ணினள். ஆனல் மணமகளுக்கு ஏற்படும் இயற்கையான நாணத்தால், அவளால் அவ்விதம் செய்ய முடியவில்லை. பிறகு இருவரும் மாடியிலிருந்த ஒரு அறைக்குச் சென்றனர்.

அறையில் ஜன்னலின் அருகே பைரன் நின்றான். மகிழ்ச்சி நிறைந்த முகத்தோடு அனபெல்லா, அவன் அருகே வந்து நின்றாள்.

"நீ ஏன் என்னைத் திருமணம் செய்து கொண்டாய்?" என்று உணர்ச்சியற்ற குரலில் பைரன் வினவினதைக் கேட்டதும், அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

"உம் கவிதைகளையும், அதைவிட அதிகமாக உம்மையும் நான் காதலிக்கிறேன்!" என்றாள், அவன் முகத்தை உற்றுப் பார்த்தபடி. அவள் குரலில் அச்சமும் நடுக்கமும் கலந்திருந்தன.

"உனக்கு முன்பே, பல பெண்கள் என்னைக் காதலித்திருக்கிறார்கள் என்ற உண்மை, உனக்குத் தெரியுமா?"

இந்தக் கேள்வியைக் கேட்டதைவிட, மார்பில் கத்தியால் ஒரே குத்தாகக் குத்தி என்னைக் கொன்று விட்டிருந்தால், நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன்!" என்று ஆத்திரத்தோடு சொல்ல வேண்டுமென்று எண்ணினாள். ஆனால் கோபமும் சோகமும் அதிகமாகிவிட்டதால், அவளால் அப்படிச் சொல்ல முடியவில்லை.

பெரிய செல்வந்தனின் ஒரே மகளானதால், அவள் சிறு வயது முதலே மிகவும் செல்வமாக வளர்க்கப்பட்டாள். மனம் சிறிது புண்படும்படியாக யாராவது எதாவது சொல்லிவிட்டால், அவளால்

அதைத் தாளமுடியாது. உடனே கோபத்தோடு கொக்கரிக்க ஆரம்பித்துவிடுவாள். அத்தகைய குணங் கொண்ட அனபெல்லா, கணவனின் பொறுப்பற்ற பேச்சைக் கேட்டு, துக்கமும் துடி துடிப்பும் கொண்டாள்.

இரவு! கட்டிலறை! வாடிய முகத்தோடு பைரன், மஞ்சத்தின்மீது உட்கார்ந்திருந்தான். ஜன்னலின் அருகே நின்றபடி, வானத்தில் மின்னும் நட்சத்திரங் களைப் பார்த்துக் கொண்டிருந்தாள், அனபெல்லா! அதுதான் அவர்களின் முதல் இரவு!

சிறிது நேரம் மௌனத்திலேயே கழிந்து விட் டது. பிறகு பைரன், தன் பார்வையை அவளிருந்த பக்கமாகத் திருப்பினன். "அனபெல்லா!" என்று மெதுவாக அழைத்தான். தலைகுனிந்தபடி அவள் நடந்து வந்து, கட்டிலின்மீது உட்கார்ந்தாள். அருகில் அமர்ந்திருக்கும் கணவனின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கக்கூட, அவளுக்கு அந்நேரத்தில் பயமாக இருந்தது!

"அனபெல்லா! இன்றிரவு, உன் வாழ்க்கை யின் இன்ப இரவு அல்லவா? ஆனல் எனக்கோ...."

"பைரன்!"

"அழாதே! பெண்கள் அழுவதையும் சிரிப் பதையும் அன்ருடம் பார்த்துப் பாாத்து, சலித்துப் போனவன் நான்! என் பக்கத்தில் படுத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை உனக்கு இருந்தால்

தாராளமாகப் படுத்துக் கொள்-நான் தடை சொல்ல வில்லை! ஆனால் ஒரே படுக்கையில் பெண்களின் பக் கத்தில் படுத்துப் படுத்து, எனக்கு வெறுப்பு ஏற் பட்டு விட்டது!"

கட்டிலை விட்டு அவள் கீழே இறங்கிவிட்டாள். அவள் கண்களில் கோபக் கனல் பறந்தது. ஏறிட்டு அவனைப் பார்த்தாள். "வாழ்க்கையின் இன்பத்தை இளமையின் விருந்தை—அள்ளியள்ளி உண்ண ஆர் வத்தோடு காத்திருக்கும் ஒரு புது பெண்ணிடம், இப் படியா பேசுவது? சீ சீ! நீ ஒரு மனிதன் தானா?" என்று கேட்பது போலிருந்தது, அவளது அந்தப் பார்வை!

"பைரன்! என்னை மணந்து கொண்டதில் உமக்குச் சிறிதும் பிரியமில்லை என்றால், இப் பொழுதுகூட நீங்கள் போய்விடலாம்!"

"நான் எதற்காகப் போக வேண்டும்? அன பெல்லா, இளமையோடு இருக்கும் எந்தப் பெண்ணும் எனக்குப் பிடிக்கும்!"

அனபெல்லா காதுகளைக் கெட்டியாக மூடிக் கொண்டு, அந்த அறையைவிட்டு வேகமாக வெளியே சென்று விட்டாள். பக்கத்திலிருந்த வேறொரு அறையினுள் நுழைந்து, கட்டிலின்மீது வேரற்ற மரம் போல் சாய்ந்து விட்டாள். முகத்தை மூடிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

சிறிது நேரம் கழித்து, யாரோ வரும் காலடிச் சப்தம் கேட்கவே, கண்களைத் திறந்து பார்த்தாள்.

பைரன் கையில் ஒரு மெழுகுவத்தியோடு, அவளை நோக்கி வருவதைக் கண்டதும், கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

"அனபெல்லா!"

அவள் கண்களைத் திறந்தாள். திறந்த அந்தக் கண்களில், கோபம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது!

"கோபமாகப் பார்க்காதே, அனபெல்லா! இன்று காலைதான், நாம் திருமணம் செய்துக் கொண்டோம் என்பதை மறந்து விட்டாயா?" என்று அன்போடு சொல்லிக் கொண்டே, மெழுகு வத்தியை ஒரு மேஜையின்மீது வைத்து விட்டு அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"உம்மை என்னல் புரிந்து கொள்ள முடியவில்லையே!" என்று தேம்பும் குரலில் சொல்லிவிட்டு, முகத்தைத் தலையணையில் மூடிக் கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள்.

"அழாதே, அனபெல்லா! இன்று நம் முதல் இரவு! இன்ப இரவு! அழாதே! அழாதே, கண்ணே!" என்று கூறிவிட்டு, அவளது ரோஜாக் கன்னங்களில் முத்தங்களிட்டான். கட்டிலில் ஒரு பக்கமாக, அவள் நகர்ந்து நகர்ந்து சென்றவளை வாரியெடுத்து, மார்போடு இறுக அணைத்துக் கொண்டான். தோள் களில் அவன் நகங்கள் பதிவதை, அவள் உணர்ந் தாள். அவனது பிடியிலிருந்து விலகிக் கொள்ள அவள் திமிறினுள்.

"என்னை ஏன் நீர் வெறுக்கிறீர்?" என்று திரும்பத் திரும்ப அவள் கேட்டுக் கொண்டே, அவனது அணைப்பிலிருந்து விடுபட முயற்சி செய்தாள்.

"என்னை விட்டு விடுங்கள்!" என்று அவள் கடைசியில் கத்தினாள்.

"உன்னை எதற்காக நான் விட்டுவிட வேண்டும்? காதலியோடு விளையாட காதலனுக்குவெறும் சலுகை மட்டுமே உண்டு! அவள் மறுத்தால்—அவன் பேசாமல் வந்த வழியைப் பார்க்க வேண்டியதுதான்! ஆனால் ஒரு கணவன் தன் மனைவியின்மீது பூர்ண உரிமை கொண்டவன்! அவன் விருப்பத்தின்படி அவளை ஆட்டி வைக்கலாம்! அவள்மீது சகல உரிமைகளையும் பிரயோகிக்கலாம்!" என்று கூறி விட்டு, அவளது செவ்விதழ்களில் ஒரு முத்தம் வைத்தான்.

"இளமை மெருகோடு இருக்கும் சதைக்கு, எப்பொழுதுமே ஒரு தனிக் கவர்ச்சிஉண்டு—அது நமக்குச் சொந்தமாக இருந்த போதிலும்!" என்று புன்னகையோடு சொல்லிவிட்டு, அந்தப் பூவையைக் கட்டிலில் சாய்ந்தான்.

"இப்பொழுது ஒப்புக்காகிலும் என்னைக் காதலிப்பவரைப் போல நடிக்கிறீர்?" என்று வேதனை நிறைந்த குரலில் அவள் சொன்னாள்.

"தவறான உணர்ச்சிகளுக்கு எல்லாம் இடம் தராதே, அனபெல்லா! இன்பமாக இருக்க வேண்டிய நேரத்தில், துன்பத்திற்கு மனதில் இடந்

தராதே!'' என்று அன்போடு சொல்லிக் கொண்டே ஆசையோடு அவளது கன்னங்களைத் தடவித் தந்தான்.

அன்போடு அவன் வார்த்தைகளைக் கொட்டியதும்—ஆசையோடு தடவித் தந்ததும்—அவளது துன்பமும் துக்கமும் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டன. அவளது மலர்மேனி, மகிழ்ச்சியில் திளைத்தது!

அவன் தூங்கிவிட்டான். அவளுக்கு மட்டும் இன்னும் தூக்கம் வரவில்லை. "நிச்சயமாக நான் நகரத்தில் இருக்கிறேன்!'' என்று தூக்கத்தில் அவன் திடீரென்று பிதற்றினான். அவனைத் தட்டியெழுப்பினாள். அவன் உடல் பயத்தால் நடுநடுங்கியது. அவனைத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு, "ஏன் இப்படி பயப்படுகிறீர்கள்? ஏதாவது கெட்ட கனவு கண்டீர்களா'' என்று ஒரு தாய் தன் குழந்தையைக் கேட்பதைப் போலக் கேட்டாள்.

"அனபெல்லா! என் வாழ்க்கை எத்தகையது? நான் எப்படிப்பட்டவன்? இவற்றை, உன்னால் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது! நீயும் நானும் திருமணம் என்ற பலிபீடத்தில் சாய்ந்து, ஒருவரை ஒருவர் அழித்துக்கொண்டோம்!''

"பைரன்! இப்படியெல்லாம் இனியும் பேசாதீர்கள்! நாம் ஒருவரை ஒருவர் காதலிக்க முடியும்! சிறிது நேரத்திற்கு முன்பு நாம் எவ்வளவு களிப்போடு இருந்தோம்! ஏன் அத்தகைய இன்பத்தை

வாழ்நாள் முழுவதும் நுகரக்கூடாது? எனக்கு நம்பிக்கை இருக்கிறது பைரன், நம்பிக்கை இருக்கிறது!''

"அனபெல்லா! என்னைவிட நல்லவனைகப் பார்த்துத் திருமணம் செய்துகொண்டிருந்தால், நீ வாழ்க்கையில் இன்பத்தைக் கண்டிருப்பாய்!''

அவன் பேச்சை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. பேச்சை மட்டுமல்ல, அவனையே அவளால் தெரிந்துகொள்ள முடியவில்லை — மாதங்கள் பல ஓடியும்.

அவளை மனைவியாக ஏற்றுக்கொண்டதால், கடன் தொல்லைகளிலிருந்து அவன் விடுபட்டான். ஆனால் தன் சுதந்திரம் பறிபோயிற்றே என்ற ஏக்கம் அவன் மனதைச் சதாகாலமும் வாட்ட ஆரம்பித்து விட்டது. கவலைக்கு மருந்து கல்யாணம் என்று நம்பினான். ஆனால் அந்த நம்பிக்கை, கானல்நீராகி விட்டது. தலைவலிக்கு மருந்து சாப்பிட்டு, வயிற்று வலியை உண்டாக்கிக்கொண்டவன் கதையைப் போலாகிவிட்டதே என்றெண்ணி, வெறுப்பும் வேதனையும் அடைந்தான்.

வசந்தகாலத்தில் அவர்கள் லண்டனுக்குச் சென்றனர். வேலைக்காரனான வில்லியம், அனபெல்லாவை மிக்க மகிழ்ச்சியோடும் மரியாதையோடும் வரவேற்றான். அவனது உபசார வார்த்தைகளைக் கேட்டு, அவள் முகத்தைச் சுளித்துக்கொண்டாள்.

சொன்ன வேலைகளைச் செய்யவேண்டிய ஒரு சாதாரண வேலைக்காரன், சொந்தக்காரனைப்போல உரிமையோடு பேசி, உயிரை வாங்குகிறானே என்றெண்ணி, அவன்மீது அவள் அடிக்கடி எரிந்து விழ ஆரம்பித்தாள்.

"அனபெல்லா! வில்லியத்தை நீ மோசமாக நடத்துவதை, என்னால் அனுமதிக்கமுடியாது!" என்று ஒரு நாள் பைரன், அவள்மீது சீறி விழுந்தான்.

"ஒரு பிரபு, தன் வேலைக்காரனுக்காகப் பரிந்து பேசுவதைக் கேட்டு, நான் வெட்கமடைகிறேன்!" என்று அவள் அலட்சியமானக் குரலில் விடை தந்தாள்.

"அவன் சாதாரண வேலைக்காரன் மட்டுமல்ல, என் சகல சுக துக்கங்களிலும் பங்கெடுத்துக் கொள்ளும் நண்பனும் கூட!"

"அவன் முகத்தைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்கவில்லை! அவனை வேலையினின்றும் நிறுத்தி விட்டால் நல்லது!"

"வில்லியத்தை வேலையினின்றும் நிறுத்திவிட்டால், நான் தொலைந்தேன்! என்னுடைய பழக்க வழக்கங்களை, உன்னை விட அவன் அதிகம் தெரிந்தவன்!"

"தாங்கள் அவனைத் துரத்தாவிட்டால், என் வேலைக்காரியான கிளர் மண்டை இங்கு வரழைத்துக்கொள்வேன்!"

"யார்? அந்தக் கிழவியையா? அவள் முகத்தில் ஏற்பட்டிருக்கும் சுருக்கங்களைக் காணும்போதெல்லாம், எனக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு விடுவது வழக்கமாயிற்றே!"

"பைரன்! என் உயிருக்குயிரானத் தோழி அவள் என்பதை உமக்குக் கவனப்படுத்த விரும்புகிறேன்! ......அதுமட்டுமல்ல......." என்று பேச்சை அரைகுறையாக நிறுத்திவிட்டு, நாணத்தோடு முகத்தைத் தாழ்த்திக்கொண்டாள். அவள் முகத்தை உற்றுப் பார்த்து விட்டு, "வேறு என்ன காரணம்?" என்று அவன் கேட்டான்.

"நான்...."

"அடடா! ஏன் இப்படி வெட்கப்படுகிறாய்? என்ன செய்தி? பரவா இல்லை, சொல் அனபெல்லா!"

"தாங்கள் ஒரு குழந்தைக்குத் தந்தையாகப் போகிறீர்!" என்று மகிழ்ச்சியோடு சொல்லிக்கொண்டே, அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். களிப்பால் மலரவேண்டிய அவன் முகம், கவலையால் சுண்டிச் சுருங்குவதைக் கண்டு திடுக்கிட்டாள்.

"பாவம்! அந்தக் குழந்தை, மகிழ்ச்சியான வேறு பெற்றோர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கலாம்!" என்று அவன் சொல்லியதைக் கேட்டதும், அவள் கண்கள் கலங்கின.

"பைரன்! சென்றதை எல்லாம் மறந்துவிடுங்கள்! இன்றுமுதல் வானத்தில் பாடிக்கொண்டு பறக்

கும் குயில் மட்டுமல்ல நீங்கள், ஒரு குழந்தையின் தந்தை என்பதையும் நினைவில் நிறுத்துங்கள்! அந்த நினைப்பு, நம் புது வாழ்விற்கு வழிகோலட்டும்! ஏதேதோ எண்ணங்களால் கூம்பியிருக்கும் நம் இதயங்களை, இனியாகிலும் மகிழ்ச்சி தழுவட்டும்!... காதல், எத்தகைய இருளையும் போக்கிவிடும் நிகரற்ற ஓர் ஜோதி! அந்த ஜோதியை எனக்குத் தாருங்கள், பைரன்!" என்று அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு, அவள் கதறியழுதாள்.

"அனபெல்லா, நீ உலகமே தெரியாத பேதைப் பெண்! காதல் என்ருல், என்னவென்று எண்ணிக் கொண்டிருக்கிருய்? இரு உடல்களும் சேரும்போது ஏற்படுகிறதே சிறிது நேரம் நிலைக்கக்கூடிய ஓர் உணர்ச்சி—அந்த உணர்ச்சியையே காதல் என்ற திருநாமம் சூடி—தினந்தினம் இளைஞர்களும் இளங் கன்னியரும் தொழுகிருர்கள்! பாவம்! கடைசியில், கானல் நீரைத் துரத்திக் கொண்டோடிய மானின் கதியையே அடைகிருர்கள்!"

"நீங்கள் சொல்வது தவறு! காதல் என்பது ஓர் காந்த சக்தி! அந்தச் சக்தியே உலகத்தை நடத்திச் செல்கிறது! அந்தச் சக்தியே, யுகம் யுகாந்திரமாக மானிட வர்க்கத்தை அழிந்து போகாமல் காத்து ரட்சித்து வருகிறது! காதல் இல்லையேல்—உலகம் இல்லை—உயிர் இல்லை!" என்று உணர்ச்சியோடு அவள் பேசியதைக் கேட்டு பைரன் உரக்க சிரித்துக் கொண்டே அந்த அறையைவிட்டு வெளியே சென்ருன்.

மாதங்கள் ஓடின. வேலைக்காரி கிளர்மண்டின் அன்பான பேச்சும், ஆதரவான உபசரிப்பும், அன பெல்லாவின் கவலையை அணுவளவும் குறைக்க வில்லை. கர்ப்பவதியான அவள், சோகத்தால் வாடினாள். கண்ணெடுத்தும் பாராத கணவனை எண்ணி, கண்ணீர் வடித்தாள்.

பைரன் சிறிதும் அவளைக் கவனிக்கவில்லை. மாலை நேரங்களை நண்பர்களோடு குலாவுவதிலும், இரவு நேரங்களைச் சிங்காரிகளோடு நடனமாடுவ திலும், அவன் கழித்து வந்தான். பொழுது புலர சிறிது நேரமிருக்கும்போதுதான், அவன் வீட்டிற்குத் திரும்புவது வழக்கம்.

அப்படி ஓர் இரவு அவன் திரும்பி வரும்போது, அனபெல்லா தூங்காமல் விழித்துக்கொண்டிருந் தாள். "பைரன்! இப்பொழுதாவது வந்தீர்களே!" என்று வேதனை நிறைந்த குரலில் சொல்லிக் கொண்டே, அவன் அருகே வந்தாள்.

பனியால், அவன் தோள்கள் மிகவும் குளிர்ச்சி யாகி விட்டிருந்தன. மிதமிஞ்சிய குடியினால், கண்கள் சிவந்துவிட்டிருந்தன. ஒரு நாடகக்காரியின் அணைப் பில் ஆனந்தம் அனுபவித்துவிட்டு, அவன் வரு கிறான்! கலகலவென்ற அவளது சிரிப்பு, சல்சல வென்ற பேச்சின் இனிமை, மினுமினுவென்ற மிருது வான மேனியின் வாசனை — இவை எல்லாம் இன் னும் அவன் நினைப்பில், இன்ப உணர்ச்சியை உண் டாக்கிக்கொண்டிருக்கின்றன! அப்படிப்பட்ட

வனின் எதிரே, கண்ணீர் வழிய மனைவி நின்றால், நிலைமை எப்படியிருக்கும்?

"பைரன்!" என்று உரத்த குரலில் அவள் அழைத்ததும், அவனுக்குச் சிறிது சுய நினைவு வந்தது. அவளை வெறுப்போடு பார்த்தான்.

"அனபெல்லா! வாழ்க்கையில் உன்னை வெறுப்பதைப்போல, இதற்கு முன்பு வேறு எந்தப் பெண்ணையும் நான் வெறுத்ததில்லை!" என்று முணுமுணுத்தான்.

"பைரன், என்னைப் பாரும்!"

"உன்னைப் பார்ப்பதற்கும், உன் அழகை ரசிப்பதற்கும், இப்பொழுது எனக்கு அவகாசம் இல்லை! நான் மிகவும் களைத்திருக்கிறேன்! நீ தூங்கிவிட்டிருப்பாய் என்று நினைத்தே, வீட்டிற்குத் திரும்பினேன்! இல்லையானால், இந்தச் சுடுகாட்டின் பக்கம் தலைகூட காட்டியிருக்கமாட்டேன்!"

"என் வேதனை தெரியாமல், இப்பொழுது கூடவா கோபமாகப் பேசுகிறீர்?"

"சே! சே! என் உயிரை வாங்கத்தான் நீ பெண்ணாகப் பிறந்தாய் போலிருக்கிறது!"

"பைரன்! இப்பொழுது உம் எதிரில் நான் நிற்கிறேன்! அழகிய உமது முகத்தைப் பார்க்கிறேன்! உலகமே புகழும் மாபெருங் கவிஞரான உம்மோடு பேசுகிறேன்! ஆனால் இன்னும் சிறிது நேரத்தில், என் கண்களில் ஒளியிருக்குமோ—என்

உடலில் உயிர் இருக்குமோ—அது எனக்கே தெரியாது! இந்தக் கடைசி நேரத்தில், உமது மனைவி என்ற முறையில் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்--ஒரே ஒரு முறை—ஆசையாக, அன்பாக, அனபெல்லா என்று அழையுங்கள்! அழைக்கமாட்டீர்களா? பைரன்! நான் செத்துக் கொண்டிருக்கிறேன்!" என்று அழுகையோடு சொல்லிக் கொண்டே, பக்கத்திலிருந்த கட்டிலின்மீது சாய்ந்து, புழுபோலத் துடித்தாள்.

பைரன் தன் கண்களைக் கசக்கிப் பார்த்தான். அவளது பேச்சைப் பூர்ணமாக அர்த்தம் செய்து கொள்ள முடியவில்லையே என்று திணறினன். கடைசியில், "அனபெல்லா, உன் உடம்பிற்கு என்ன?" என்று கேட்டுக் கொண்டே, கட்டிலில் அவள் அருகே உட்கார்ந்தான்.

"நம் குழந்தை இந்த உலகத்தைப் பார்க்கத் துடிக்கிறது! அந்தத் துடிப்பு என் உயிரைப் பதைக்கச் செய்கிறது! உடனே டாக்டருக்கும் கிளர்மண்டிற்கும் ஆள் அனுப்புங்கள்!"

பைரன் அறையைவிட்டு வெளியே சென்றான். வைத்தியரை அழைத்துவர வில்லியத்தை அனுப்பிவிட்டு, வேலைக்காரியிடம் தானே சென்று செய்தியைத் தெரிவித்தான்.

மாடியில் அனபெல்லா, பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருந்தாள். கீழே ஒரு அறையில்.

பைரன் படுக்கையில் சாய்ந்து கொண்டிருந்தான், வீட்டில் ஏற்படும் சப்தங்கள், ஏதோ கனவில் கேட்பதைப் போல அவனுக்குத் தோன்றியது. வேகமாக நடப்போரின் காலடிச் சப்தம், அறையின் கதவுகள் அடிக்கடித் திறப்பதாலும் மூடுவதாலும் ஏற்படும் ஓசை, வைத்தியர் பேச்சு, வெந்நீர் கேட்கும் குரல்கள். மனைவியின் கதறல்—எல்லாம் அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தன!

சிலமணி நேரம் கழித்து, வைத்தியர் மாடியை விட்டுக் கீழே வந்தார். "பைரன்! உமக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது! உம் மனைவி நலமாக இருக்கிருள்!" என்று அவன் சிரித்த முகத்தோடு கூறி விட்டுச் சென்ருன்.

சிறிது நேரம் கழித்து, "பைரன், உம்மை அனபெல்லா அழைக்கிருள்!" என்று ஒரு குரல் கேட்டதும், அவன் சிந்தனையிலிருந்து விடுபட்டான். வெறுப்போடு எழுந்து மாடிக்குச் சென்ருன். அனபெல்லா படுக்கையில் படுத்திருந்தாள். அவள் முகம் மிகவும் சோர்ந்துவிட்டிருந்தது. அந்தச் சோர்ந்த முகத்திலும், ஓர் அமைதி ஆட்சி செய்து கொண்டிருந்தது. கட்டிலின் பக்கத்தில், குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு வேலைக்காரி நின்றிருந்தாள். கணவனைக் கண்டதும், அனபெல்லாவின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது. பைரனிடம் தனியாகப் பேச விரும்புவதால், குழந்தையைத் தன்னிடம் தந்துவிட்டு அறைக்கு வெளியே போய் இருக்கும்படி, வேலைக்காரியிடம் தெரிவித்தாள்.

வேலைக்காரி வெளியே சென்று விட்டதும், பைரன் கட்டிலின் அருகே வந்தான். அனபெல்லா வையும் குழந்தையையும் மெதுவாகப் பார்த்தான். அவன் கவனத்தைக் குழந்தை அதிகமாகக் கவர்ந் தது. அதைப் பார்க்கப் பார்க்க, அவனுக்குக் கவலைதான் அதிகமாயிற்று! எங்கோ, எப்படியோ, இன்பமாகச் சுற்றிக்கொண்டிருந்தவனுக்கு — ஒரு மனைவி! அவள் தொல்லை போதாதென்று — இப் பொழுது குழந்தை வேறு! இருக்க இருக்க அவனது பொறுப்புக்கள் அதிகமாகிக்கொண்டே போவதை எண்ணி, வேதனை அடைந்தான்.

“பைரன், நம் குழந்தையைப் பாருங்கள்! மிகவும் அழகாக இருக்கிறது அல்லவா? சின்னஞ் சிறு விரல்களையும்—அவற்றிலே ஒழுங்காக இருக்கும் நகங்களையும் பாருங்கள்!” என்றாள் அனபெல்லா, பூரிப்போடு!

அவன் பேசவில்லை. என்ன பேசுவது? பேச ஆரம்பித்தால், உள்ளத்தை அழுத்தும் வேதனையை அல்லவா கொட்டி விடுவான்?

பைரன்! இந்தக் குழந்தையின் நலத்திற்காகி லும், இனி நாம் புதுவாழ்வு ஆரம்பித்தாக வேண் டும்!”

சிறிது நேரம் கண் இமைக்காமல் அவளைப் பார்த்தான். அவன் மனதில், அவள்மீது அன்போ இரக்கமோ சிறிதும் ஏற்படவில்லை.

“பைரன்! இனி நம் வாழ்வில் கவலையே தலை காட்டாது! நமக்குக் குழந்தை பிறந்துவிட்டது பைரன், குழந்தை பிறந்துவிட்டது!” என்று களிப் போடு அவள் பேசினுள்.

“இதிலென்ன ஆச்சரியமிருக்கிறது! ஆடு மாடு களுக்குக்கூடத்தான் பிறக்கிறது!” என்று வெறுப் போடு சொல்லிவிட்டு வெளியே சென்று விட்டான்.

அனபெல்லாவின் கண்கள் கலங்கின. கோபத் தால் அவள் உடல் பதறியது. பைரனுக்கு என்ன பைத்தியமா? ஒரு சாதாரண மனிதனிடத்திலிருக்கக் கூடிய உணர்ச்சிகூட, இவனிடம் இல்லையே? கையிலிருந்த குழந்தை, அந்தக் காரிகையின் போக் கையே மாற்றிவிட்டது! பைரனிடம் இனி அவள் காதல் பிச்சை கேட்கப் போவதில்லை! குழந்தையின் நலத்திற்காக, அவன்மீது அவள் கொண்டிருந்த காதலைச் சாகடித்து விடவும், தயாராகிவிட்டாள்.

பைரன் சென்று விட்டதும், வேலைக்காரி அறை யினுள் வந்தாள். அனபெல்லா ஒன்றும் பேசாமல் மௌனமாகவே இருந்தாள். இனி பேச என்ன இருக்கிறது—அவள்தான் ஒரு முடிவிற்கு வந்து விட்டாளே?

சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் பைரன் அறையினுள் வந்தபோது, அனபெல்லா சாமான் களைப் பெட்டியில் அடுக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

"எங்கேயாவது பயணமோ?" என்று திறந்த பெட்டியைப் பார்த்தபடி, அவன் கேட்டான்.

"ஆமாம்! குழந்தையை எடுத்துக் கொண்டு என் பெற்றோர்களிடம் செல்கிறேன்!"

"நீ திரும்பவும் வருவாயா?"

அவள் பதிலொன்றும் சொல்லவில்லை, அவள் முகம் மிகவும் கடுமையாக இருந்தது. அன்பான வார்த்தைகளைப் பேச பைரனுக்கு இடமளிக்கக் கூடாதென்று, அவள் எண்ணினாள். அந்த அன்பான வார்த்தைகள், எங்கே தனது உறுதியைக் குலைத்து விடுகிறதோ என்ற பயமே, அதற்குக் காரணம். ஆகவே அவள் மிகவும் சிடுசிடுப்போடு நடந்து கொண்டாள்.

வேலைக்காரி பெட்டிகளை எடுத்துச் சென்று, வண்டியில் வைத்தாள், குழந்தையைத் தூக்கிக் கொண்டு, அனபெல்லா வண்டியில் ஏறி உட்கார்ந்தாள்.

மாடியில் நின்றபடியே, தெருவிலிருந்த வண்டியைப் பைரன் பார்த்துக் கொண்டிருந்தான். வண்டி நகர்ந்தது! கணவனை அவள் திரும்பியும் பார்க்கவில்லை!

வாழ்க்கையில் இனி தாங்கள் என்றென்றைக்குமே சந்திக்கப் போவதில்லை என்ற பயங்கர உண்மை, அந்நேரத்தில் அந்த இருவருக்குமே தெரியாது!

## 16. கல்லறைக் குயில்

விவாக விடுதலை பெறப் போவதாக அனபெல்லா எழுதியிருந்த கடிதத்தைக் கண்டதும், முதலில் அதைப் பைரன் நம்பவே இல்லை. அவனது புகழுக்கும் கௌரவத்திற்கும் சாவுமணி அடிக்க அவள் தீர்மானித்துவிட்டாள் என்பதை எண்ணிப் பார்க்கப் பார்க்க, அவன் மனம் பதறியது. அனபெல்லா, எனக்குத் துரோகம் செய்து விட்டாள்!'' என்று அடிக்கடி தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டான்.

மனைவியைப் பற்றிய கவலை ஒரு பக்கம் இருந்த போதிலும், பழையபடியே அவன் ஓட்டல்களிலும் நாடகக்காரிகளின் கூட்டத்திலும் பொழுதைக் கழித்து வந்தான். நாளுக்கு நாள் அவன் கடன், விஷம்போல ஏறிக் கொண்டிருந்தது. முன் போலவே கடன் தொல்லைக்கு அவன் பலியாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதற்கிடையில், பைரனைப் பற்றிய கேவலமான வதந்திகள் எங்கும் பரவின. மட்ட ரகமான பத்திரிகைகளில் அவனைப் பற்றிய ஆபாசச் செய்திகளும் ஒரு நடிகையைச் சேர்த்து அணைத்துக் கொண்டிருப்பது போன்ற புகைப்படமும் வெளியாயின! பொறாமைக்காரர்கள் எழுப்பிவிடும் வீண் வதந்திகளும் ஆபாசப் பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளும்—எங்கே

பைரனின் புகழை மங்கச் செய்து விடுகிறதோ என்று அவனது நண்பர்களுக்கு மட்டுமல்ல, பைரனுக்கே தன் புகழ் மங்கிவிட்டதைப் போலத் தோன்றியது. வாழ்கையில் மீள முடியாத சோகக் கட்டம் வந்து விட்டதென்று எண்ணி, வேதனை அடைந்தான். ஆகவே இங்கிலாந்தைவிட்டு வெளியே சென்றுவிட வேண்டுமென்று முடிவு செய்தான். அந்தத் தீர் மானத்தை விளக்கி, ஒருநாள் தன் நண்பன் ஆப்பவு ஸுக்குக் கடிதம் எழுதினன். அதன் பிறகு அன்று வந்த கடிதங்களைப் பார்க்க ஆரம்பித்தான்.

மங்கையொருத்தி யெழுதியிருந்த ஒரு கடிதம் அவன் மனதை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. அவனை ஒரு முக்கியமான காரியமாக சந்திக்க அவள் நீண்ட நாட்களாக முயற்சி செய்வதாகவும், ஆனல் அவனது வேலையாட்கள் உள்ளே நுழைய அவளை அனுமதிக்கவில்லை என்றும், உள்ளத்தைத் தொடும்விதத்தில் அந்தப் பெண் எழுதியிருந்தாள்.

"வாழ்க்கையோ பாழாகிவிட்டது! ஏன், இந்தப் பாழான நிலையிலும் ஒரு புது சுவையை அனுப விக்கக்கூடாது?" என்று எண்ணி, அவளது விருப் பத்தின்படியே சந்திக்க தடையொன்றுமில்லை என்று வில்லியத்தின் மூலம் கடிதம் எழுதி அனுப் பினன். அவள் குறிப்பிட்டிருந்த ஒட்டலுக்கு, அன்று மாலை அவன் சென்ருன்.

"வந்து விட்டீர்களா?" என்று கன்னங்கள் சிவக்க, களிப்போடு அவள் கூறினள். "ஆமாம்!

என்றைக்காகிலும் ஒருநாள், நாம் சந்திப்போம் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்! பைரன், வெகு நாட்களாக உம்மை நான் காதலித்து வருகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே, அவன் கையைப் பிடித்து அழைத்துச் சென்று, கட்டிலின்மீது உட்கார வைத்தாள்.

"ஒருமுறைகூட சந்திக்காத ஒரு மனிதனை, நீ எப்படி காதலிக்கலாம்?" என்று புன்னகையோடு கேட்டுக் கொண்டே, அவளது கன்னத்தைக் கிள்ளினன்.

"உணர்ச்சிமிக்க உம் கவிதைகள், என் கன்னியுள்ளத்தைக் கொள்ளை கொண்டன! அந்த அற்புதமான கவிதைகளிலே, உம் அழகை மட்டுமல்ல—உம் உள்ளத்தையும் கண்டேன்! என்னை நான் எவ்வளவு அறிவேனே, அதைவிட அதிகமாகவே உம்மை நான் உணர்ந்து கொண்டதாக உணர்கிறேன்! பைரன், நான் எதிர்பார்த்து ஏங்கிய இலட்சியக் காதலன் தாங்கள்தாம்!"

பெண்கள் அர்த்தமில்லாமல் கொட்டும் காதல் வார்த்தைகளை, நீண்ட நேரம் கேட்டுக் கொண்டிருக்க பைரனுக்கு எப்பொழுதுமே பிடிக்காது! ஆகவே பதிலொன்றும் சொல்லாமல், அந்தப் பாவையை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டான். **கிளாரா மேரி** என்ற அந்தப் பெண், நல்ல அழகி! நல்ல அழகி மட்டுமல்ல—அழகிற்கேற்ற இளமையும் இளமைக்கேற்ற துருதுருப்பும் நிறைந்தவள்! உதட்

டில் இன்பப் புன்னகையும், உடலில் பெண்மையின் பூரிப்பும் கொண்ட அவளால்—அவனுக்குச் சிறிது நேர மகிழ்ச்சிதான் தர முடியும்! "பெண்ணின் உடல் ஒரு மெழுகுவத்தியின் வெளிச்சத்தைப் போன்றது! விரைவில் பயனற்றுப் போய் விடுகிறது!" என்ற எண்ணங்கொண்ட அவனிடம், அதிகமாக அவள் எதை எதிர் பார்க்க முடியும்?

கதிரவன் வானத்தில் பவனி வரத் தொடங்கி விட்டான். அந்தக் கன்னிப் பெண் எழுந்து, அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள். மெல்ல அவன் கண் விழித்தான்.

"பைரன்! உம்மை நான் முன்பைவிட அதிகமாகக் காதலிக்கிறேன்!"

பைரன் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். இங்கிலாந்தைவிட்டுச் செல்லப் போவதை எண்ணியதும், அவனுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

"கிளாரா! இன்னும் இரண்டு நாட்களில், நான் இங்கிலாந்தை விட்டே சென்றுவிடப் போகிறேன்!"

"தாங்கள் எங்கெங்கு செல்கிறீர்களோ, அங்கெல்லாம் வர நான் தயார், பைரன்! இதற்கு முன்பு நானும் வெளி நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன்! என் சகோதரியான **மேரி கார்வின்** தன் காதலரான **கவிஞர் ஷெல்லி**யோடு இப்பொழுதும் வெளிநாடுகளில் சுற்றிக் கொண்டுதான் இருக்கிருள்!"

"கவிஞர் ஷெல்லியின் நிலைமை வேறு, என் நிலைமை வேறு! எந்தப் பெண்ணையும் என்னேடு

அழைத்துச் செல்ல என் சூழ்நிலை அனுமதிக்க வில்லை, கிளாரா! வாழ்க்கையில் இனி நாம் சந்திப்ப தென்பது முடியாத காரியம்! காதலில் அதிக நம் பிக்கை வைக்காதே! கவிதைகளை அதிகமாகப் படிக்காதே! நான் வருகிறேன்!'' என்று சொல்லி முடித்தானதும், அந்த அறையை விட்டு வெளியே சென்று விட்டான். இரு கண்களிலும் நீர் வழிய, இடி விழுந்தவளைப் போல அவள் நின்று விட்டாள்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, டோவர் துறை முகத்தைவிட்டுக் கப்பல் புறப்பட்டது. கப்பலில் பைரனுக்குப் பக்கத்திலிருந்த வில்லியத்தின் முகம் மிகவும் வாடியிருந்தது. இங்கிலாந்தை விட்டுச் செல் வதில், அவனுக்குச் சிறிதும் விருப்பமில்லை. எஜ மானனைத் தனியாக அனுப்பவும், அவன் மனம் ஒப்பவில்லை.

பெல்ஜியத்தில் சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு, ஜர்மனி வழியாகப் பைரன் ஜினிவா வந்து சேர்ந் தான். மாதங்கள் பல ஓடியும், மனக் கவலையிலி ருந்து அவனுக்கு விடுதலை கிடைக்கவில்லை. சொந்த நாடான இங்கிலாந்து தன்னைச் சரியாகப் புரிந்து கொள்ள வில்லையே என்றெண்ணி வருத்தமடைந் தான். அனபெல்லாவின் நினைவு வந்தபோதெல் லாம், அவள்மீது அவனுக்குக் கோபமே ஏற்பட்டது. வழக்கமாகச் செல்லும் ஓட்டலினுள் அவன் ஒருநாள் நுழைந்தபோது, "பைரன்!'' என்ற பழக்கமானக் குரலைக் கேட்டதும், திரும்பிப் பார்த்தான்.

"பைரன்! நாம் திரும்பவும் சந்திப்போம் என்பது எனக்குத் தெரியும்!" என்று மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டே, கிளாரா மேரி அவன் அருகே வந்தாள்.

"நீ இங்கு எப்படி வந்தாய்?" என்று உணர்ச்சியற்ற குரலில், அவன் கேட்டான்.

"பைரன்! எண்ணூறு மைல்களைத் தாண்டி வந்திருக்கும் என்னிடம்—தங்கள் காதலியிடம்—இப்படியா வெறுப்போடு பேசுவது?"

"நீ இங்கு தனியாக இல்லையே?"

"இல்லை, பைரன்! கவிஞர் ஷெல்லியும், என் சகோதரி மேரி காட்வினும் தங்கியிருக்கும் இல்லத்தில் நானும் இருக்கிறேன். கவிஞர் ஷெல்லிக்கு மேரி காட்வின்! கவிஞர் பைரனுக்கு—கிளாரா மேரி!" என்று குறுநகையோடு சொல்லிக் கொண்டே, தன்னிடமிருந்த ஒரு ரோஜா மலரை அவனிடம் தந்தாள்.

அந்த மலரை அவன் ஒருமுறை நுகர்ந்து பார்த்துவிட்டு தரையில் எறிந்து விட்டான்!

"பைரன்!" என்றாள், உள்ள அதிர்ச்சியோடு!

"ஆமாம் கிளாரா! இனி நீ காதலை என்னிடம் எதிர்பார்த்தால், உன் வாழ்க்கையே பாழாகிவிடும்! உனக்ுத் தர இப்பொழுது என்னிடம் ஒன்றுமில்லை!" என்று சொல்லிவிட்டு, முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான்.

"உம்மோடு என்னைத் தங்க அனுமதித்தால், அதுவே போதும் எனக்கு!" என்று கண்ணீர் வழிய சொல்லி, அவன் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

சில மாதங்களுக்குப் பிறகு, அதேபோல அவன் கால்களைப் பிடித்துக்கொண்டு, "இந்த நிலையில் என்னைத் தனியாக விட்டுவிட்டு, தாங்கள் இத்தாலிக் குச் செல்வது நியாயமா?, உம்போன்ற கவிஞர் களுக்கு இது அடுக்குமா? இப்பொழுது நான் கர்ப்ப வதி பைரன், கர்ப்பவதி!" என்று கண்கள் குளமாக அவள் கதறியழுதாள்! கைக் குழந்தையைக் காட்டி அழுது வடித்த சொந்த மனைவி அனபெல்லாவின் கண்ணீரே, அவன் மனதை மாற்றவில்லை என்றால் - கிளாராவின் கண்ணீரா அவன் போக்கை மாற்றி விடப் போகிறது?

பைரன் இத்தாலிக்குச் சென்றுவிட்டான். அங்கே **மார்கரிட்டா** என்ற மலர்முகவதி, அவன் அழகில் மயங்கினாள். தேனைப் பிழிந்தானதும், தேன் அடையை வீசி யெறிந்துவிட்டான்! பிறகு, பத்தொன்பது வயதான **திரிசா** என்ற பசும் பொன் மேனியாளைக் கண்டான்! கற்கண்டு மொழியில் பேசி, அந்தக் கட்டழகிக்குக் காதல் வெறியூட்டினான் காதல் பித்தம் தலைக்கேறிய திரிசா, செல்வந்தனான கணவனை விட்டுவிட்டு, அவனோடு ஜினேவாவிற்கு ஓடிவிட்டாள்! அந்த அழகியோடு நாட்களை இன்பமாகக் கழித்துக்கொண்டிருந்த பைரனுக்கு, நண்பன் ஆப்பவுஸிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

"கிரீஸில் இப்பொழுது சுதந்திரப் போராட்டம் நடைபெறுகிறது. அது உனக்கும் தெரிந்திருக்குமென்று நம்புகிறோம். அந்த விடுதலைப் போரில், நீ கலந்துகொள்வாய் என்று உன் தோழர்களான நாங்கள் எதிர்பார்க்கிறோம். அப்படிச் செய்வதின்மூலம் - எங்களுக்கெல்லாம் ஓர் புத்துணர்ச்சியைத் தருவதோடு - உன் பெயருக்கு ஏற்பட்டிருக்கும் கறையையும் கழுவிக்கொள்ளலாம்! கொடுங்கோலர்களிடமிருந்து மக்களுக்கு விடுதலை வேண்டுமென்று கொக்கரிப்பாயே—அதைச் செயலில் காட்ட இதோ அரிய வாய்ப்பு! இதை நழுவ விடாதே!" என்று ஆப்பவுஸ், அக் கடிதத்தில் எழுதியிருந்தான்.

கிரீஸுக்கு விடுதலை கிடைத்ததும் திரும்பிவிடுவதாக—அழுத திரிசாவுக்கு ஆறுதல் கூறிவிட்டு பைரன் புறப்பட்டான். சில நாட்களுக்குப் பிறகு, அவன் கிரீஸை அடைந்தான்.

ஏரிக்கரை மீதிருந்த மிஸ்ஸலோங்கி என்ற ஊரில் தங்கினன். அந்த ஊர், கடல் மட்டத்தை விடத் தாழ்ந்திருந்தது. சுற்றுப் புறங்களொன்றும் தெரியாமல், எப்பொழுதும் அங்கு பனிமூடிக் கொண்டிருக்கும். அதுதான் உலகத்தின் கோடி என்று வில்லியம் எண்ணினன். அவர்கள் தங்கியிருந்த அந்தச் சிறிய வீடு, அவனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

துருக்கியர்களை விரட்டியடித்துவிட்டு, கிரேக்கர்கள் வெற்றிபெற்று விட்டனர். ஆனல் அவர்கள்

பெற்ற விடுதலையை, சிறுசிறு சச்சரவுகளாலும்—பயனற்ற விவாதங்களாலும்—பழாக்கிக் கொள்ள ஆரம்பித்தனர்.

அதை அறிந்த பைரன், மிகுந்த ஏமாற்றமடைந்தான். கிரீஸுக்கு வந்தது, இத்தகைய கோரக் காட்சிகளைக் காணவா என்றெண்ணி சோகமும் சோர்வுமடைந்தான்.

அந்தச் சிறிய வீட்டின் ஜன்னல் அருகே, பைரன் நின்றிருந்தான். அப்பொழுது மாரிக்கால மாகையால், கோவென்று மழை கொட்டிக் கொண்டிருந்தது. அந்த அடைமழையையும் பொருட்படுத்தாமல், நனைந்தபடி படகில் உல்லாசமாகச் சென்று விட்டு, சிறிது நேரத்திற்கு முன்புதான் அவன் வீடு திரும்பினன். குளிரினல் அவனுடல் வெட வெட வென்று நடுங்கியது. கண்கள் இரத்தம்போல் சிவந்துவிட்டிருந்தன. எஜமானின் நிலையைக் கண்டதும், வில்லியம் பயந்து விட்டான். மெதுவாகக் கவிஞனின் உடலை தொட்டுப் பார்த்தான்.

"உங்களுக்கென்ன ஜுரமா? இப்படி நெருப்பாய்ச் சுடுகிறதே, உடல்?" என்று பதைபதைப் போடு அவன் கேட்டான்.

பைரனுக்கு மயக்கம் வரும்போலத் தோன்றியது. உடனே ஜன்னலின் கம்பிகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். கால்கள் நடுங்கின. கைகள் உதறின. அப்படியே வேலைக்காரன்மீது

சாய்ந்து விட்டான். அவனைத் தூக்கிச் சென்று, வில்லியம் கட்டிலில் படுக்க வைத்தான்.

"எஜமானே! வைத்தியரை அழைத்துவர ஆள் அனுப்புகிறேன்!" என்று சொல்லிவிட்டு, கலவரம் நிறைந்த முகத்தோடு அறையை விட்டு வெளியே ஓடினன்.

வைத்தியர் வர சிறிது நேரம் பிடித்தது. அதற்குள் பைரனுக்கு ஜுரம் அதிகமாகிவிட்டது. அவன் ஏதேதோ பிதற்றினன், கவிஞனின் மனம் எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தது.

நாற்புறமும் மலர்ச் செடிகள் சூழ்ந்த இடம். ஒய்யாரமாக நடந்து மேரி சாவெர்த் அங்கே வருகிருள். அவளைக் கண்டதும். பைரனின் முகம் மலர்கிறது. அழகியின் வனப்பு, அவன் மனதை அள்ளுகிறது. அவள் அருலேல் செல்கிருன். "மேரி! என் உள்ளம் உனக்குத் தெரியும்! உன்னைத் தவிர வேறு யாரையும் மணந்து கொள்ளப்போவல்லலை!'' என்று சொல்லிக் கொண்டே, அவள் பொற்கரத்தைப் பற்றுகிருன். அந்த மலர்மேனியாள் திமிறிக் கொண்டு மான்போல் ஓடி விடுகிருள். "மேரி! மேரி!'' என்று அழைத்துக் கொண்டே, அவளைத் துரத்திக் கொண்டு ஓடுகிருன். திடீரென்று எங்கும் ஒரே புகை மயமாகி விடுகிறது. அந்தப் புகை மண்டலத்தில் புகுந்து ஓடுகிருன். பசி, தாகம், நித்திரை ஒன்றையும் பொருட்படுத்தாமல் ஓடுகிருன்! புகையின் இருள், கொஞ்சம் கொஞ்சமாக அகலுகிறது.

அவனை நாடி ஒரு உருவம் ஓடி வருகிறது. ஆமாம், மேரிதான் அவள்! "காலம் அதிகமாகக் கடந்து விடவில்லை, பைரன்! இப்பொழுதும் நாம் ஒருவரை ஒருவர் காதலிக்கலாம்!" என்று அவள் கெஞ்சுகிருள். "வேண்டாம் மேரி, வேண்டாம்! உன்னை நான் ஏற்றுக் கொண்டால், என் உள்ளத்தின் சுடர் விளக்கான அந்த மேரி செத்துவிடுவாள்! அந்த மேரிதான், என் கவிதையின் ஜீவன்—கற்பனையின் ஊற்று! அவளை இழக்க ஒருபோதும் நான் ஒப்பேன்!" என்று சொல்லிவிட்டு, அவ்விடத்தைவிட்டு அவன் ஓட ஆரம்பிக்கிருன்.

"ஓடாதே நில்!" என்ற பெண் குரலைக் கேட்டதும், திரும்பிப் பார்க்கிருன். கையில் கத்தியோடு கரோலின் லாம்பு அவன் அருகே வந்து நிற்கிருள். "கரோலின்! காதலில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று ஆயிரம் தடவைகள் சொல்லியிருப்பேன்! மலருக்கு மலர் பறந்து செல்லும் வண்டு நான் என்பதை நீ அறிவாய்!" என்று அவன் கூறியதும், கோபத்தால் அவள் கண்கள் சிவக்கின்றன. கத்தியால் தன் மார்பில் ஓங்கி குத்திக் கொள்கிருள். இரத்தம் பீறிட்டு வெளியே ஓடி வருகிறது.

அவன் ஒடுகிருன்! புன்னகை தவழும் முகத்தோடு அகஸ்டா எதிரே வந்து நிற்கிருள். "கல்யாணமா? உனக்கா? வேண்டாம் அகஸ்டா, வேண்டாம்! ஜார்ஜ் ஒரு குடியன்! கெட்ட நடத்தைகள் ஏராளமாகக் கொண்டவன்! அவனை மணந்து

கொள்ளாதே அகஸ்டா, மணந்து கொள்ளாதே!" அவன் அழவே ஆரம்பித்து விடுகிறுன்.

அவன் கண்களிலிருந்து குபுகுபுவென்று நீர் ஓடி வருகிறது. அந்த நீர், பெரும் வெள்ளமாகிவிடுகிறது! அந்த வெள்ளத்தில் சிக்கிக் கொண்டு, அவன் தவிக்கிறுன்! வேகமாக ஒரு படகு அவனை நோக்கி வருகிறது! படகிலிருந்த அனபெல்லா, அவன் கைகளைப் பிடித்துத் தூக்குகிறுள்! இருவருமாகக் கரையை அடைகிறுர்கள். "அனபெல்லா என்னை ஏன் மணந்து கொண்டாய்?" என்று சோகத்தோடு கேட்கிறுன். ஒரு மின்னல்! அவள் கையில் ஒரு குழந்தை! "இதிலென்ன அதிசயம்? ஆடு மாடுகளுக்குக்கூடத்தான் பிறக்கிறது!" என்று அவன் வெறுப்போடு சொல்லியதும், அவள் திரும்பியும் பார்க்காமல் ஓடிவிடுகிறுள்! "அனபெல்லா! அனபெல்லா! திரும்பிவா! திரும்பிவா!" என்று அவன் உரக்கக் கத்துகிறுன்!

பைரன் பிதற்றுவதை எல்லாம் கேட்டுக் கொண்டு கட்டிலின் அருகே, கண்களில் நீர் தளும்ப வில்லியம் நின்றிருந்தான். ஏதோ ஆபத்து நேரிடப் போகிறது என்பதற்கு அறிகுறியாக, அவன் இதயம் படபடத்தது.

"எஜமானே!" என்று துக்கத்தை அடக்கிக் கொண்டு, அவன் அழைத்தான்.

பைரன் மெல்ல கண்திறந்தான். கண்கள் எரிச்சல் எடுத்தன. தாகத்தால் தொண்டை வரண்டு விட்டிருந்தது.

"வில்லியம்! அகஸ்டாவிற்கு நான் பெரும் துரோகம் செய்துவிட்டேன்! என் அருமை மகளை - ஆருயிர் செல்வத்தை — சரியாகக்கூட நான் பார்க்க வில்லையே! மனைவியின் அமுத பேச்சிலும், குழந் தையின் மழலை மொழியிலும்தான், உண்மையான இன்பமிருக்கிறது! இந்த உண்மை, ஏன் எனக்கு முன்னமே தெரிந்திருக்கக்கூடாது! தெரிந்திருந்தால் என் வாழ்வு இப்படி மயானத்தின் சாம்பலாகி விட் டிருக்குமா ?" என்று மெதுவாக முணு முணுத்தான்.

"சிறிது உரக்கப் பேசுங்கள், எஜமானே!" என்று தேம்பியழுது கொண்டே சொன்ன வில்லி யத்தைத், பைரன் உற்றுப்பார்த்தான். ஜுர வேகத் தால் சிவந்துவிட்டிருந்த அவன் கண்களில், நீர் கசிந்தது.

"பிதாவே! என் எஜமானைக் காப்பாற்று!" என்று வில்லியம் மனமாரப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தான்.

பைரன் தலையணையின்மீது சாய்ந்து, கண்களை மூடிக்கொண்டான். கைகால்கள் ஆசைவற்று நின்று விட்டன. "எஜமானே!" என்று வில்லியம் கதறி னான். அவன் கண்களில் மருட்சியும், முகத்தில் திகி லும் வட்டவிட்டன.

1824 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் பத்தொன்ப தாம் நாள்! அப்பொழுது பைரனுக்கு வயது, முப்பத் தாறு!

அந்திப் பொழுது நெருங்கிவிட்டது. வெளியில் சூறாவளியின் பேய்க்கூத்து! இடியின் கொக்கரிப்பு!

அந்தச் சிறிய வீடு கிடுகிடுவென அதிர்ந்தது! ஆயிர மாயிரம் பேர் ஓவென்று அழுவது போன்ற ஓர் ஒலி! உக்கிர ஆவேசத்தோடு மலையோடு மலை மோதிச் சிதறுவது போன்ற ஓர் பயங்கர சப்தம்!

"அய்யோ எஜமானே! இறந்துவிட்டீர்களா? எங்களை எல்லாம் மறந்து விட்டீர்களா?" என்று வில்லியம் கதறிக்கொண்டே, தலையைத் தரையில் இடித்துக்கொண்டான்.

பைரனின் உடல், இங்கிலாந்தை நெருங்கிக் கொண்டிருந்தது. தூரத்தில் வரும் கப்பலை, கண்கள் கலங்க உற்றுப் பார்த்தபடி மக்கள் கூடியிருந்தனர்.

கப்பல் துறைமுகத்தினுள் நுழைந்தது. கப்பலின் உள்ளே மகளோடு அனபெல்லாவும், ஆப்பவுஸும் ஓடினர். அவர்களைக் கண்டதும், வில்லியம் முகத்தை மூடிக்கொண்டு உடல் குலுங்க அழுதான்.

"அப்பா எங்கே எங்கே என்று கேட்பாயே — இதோ பாரம்மா உன் அப்பாவை!" என்று மகளை அணைத்துக்கொண்டு, அனபெல்லா கதறினாள்.

"இலண்டனிலேயே..." கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ஆப்பவுஸ் பேச்சை ஆரம்பித்தான்.

"வேண்டாம்! அவர் பிறந்து வளர்ந்த இடம் நியூஸ்டீட்!" என்று அனபெல்லா சொல்லிக் கொண்டே, தன் உயிருக்கு உயிரான கணவனின் கரங்களை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு, தேம்பித்தேம்பி அழுவலானாள்.

கவிஞர் பைரன் பிணத்தை ஏற்றிக்கொண்டு, இலண்டன்மா நகரை விட்டு ஒரு வண்டி புறப்பட்டது. நீண்டதூரம் சென்றபிறகு, அந்தச் சவ வண்டிக்கு எதிரே வேறொரு வண்டி வந்தது! அதிலே துயர் நிறைந்த முகத்தோடு ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள்.

"அது யார் பிணம்?" என்று அந்தப் பெண், தன் அருகே அமர்ந்திருந்த கணவனைப் பார்த்துக் கேட்டாள். அவள் வேறு யாருமல்ல கரோலின் லாம்பு!

"எவனோ, ஊர்பேர் தெரியாதவன்!" என்று அவள் கணவன் அலட்சியமானக் குரலில் சொன்னான். சாலையோரத்திலிருந்த மக்கள் முணு முணுத்த வார்த்தைகள், கரோலின் காதில் விழுந்துவிட்டன!

"லார்ட் பைரன்! இங்கிலாந்தின் ஒப்பற்ற கவிக்குயில் பிணமாகி விட்டது! அந்தக் குயில், இதோ கல்லறையை நோக்கிச் செல்கிறது! கல்லறைக்குயில்! ஆமாம், என் பைரன் — என் காதலன் — கவிதா மண்டலத்தின் சூரியன் — கல்லறைக்குயிலாகி விட்டான்!" என்று கூறிக்கொண்டே, அவள் சுய நினைவற்று சாய்ந்துவிட்டாள்.

77649a

Bharat Devi Press, 2/16, Mount Road, Madras-2.

விரைவில் வெளிவருகிறது!

# கலைஞர் கருணாநிதி

## (தொகுப்பு நூல்)

அறிஞர் அண்ணா
முன்னாள் அமைச்சர் எஸ். முத்தையா
டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி எம். பி.
கி. ஆ. பெ. விசுவநாதம்
டாக்டர் மு. வரதராசனார்
டி. எஸ். சொக்கலிங்கம் (ஆசிரியர் "ஜன யுகம்")
அ. மு. பரமசிவானந்தம் (தமிழ்ப் பேராசிரியர் பச்சையப்பன் கல்லூரி)
பி. பாலசுப்ரமணியம் ("சண்டே அப்சர்வர்")
ஆர். வெங்கடராஜுலு (ஆசிரியர் "தமிழ்நேசன்" கோலாலம்பூர்)
ராஜா சிதம்பரம் எம். எல். ஏ.
டாக்டர் பால் மதுரம் எம். பி.
எ. கோவிந்தசாமி எம். எல். ஏ.
திருலோக சீதாராம் (ஆசிரியர் "சிவாஜி")
நாரண துரைக்கண்ணன் (ஆசிரியர் "பிரசண்ட விகடன்")
டாக்டர் எஸ். தருமாம்பாள்
என். எஸ். கிருஷ்ணன்
டைரக்டர் டி. ஆர். சுந்தரம்
எம். ஜி. ராமச்சந்திரன்
சிவாஜி கணேசன்
டி. வி. நாராயணசாமி
எஸ். எஸ். ராஜேந்திரன்

மற்றும் பல தமிழ்நாட்டுத் தலைவர்கள், கலைஞர்கள், இயக்கத் தோழர்கள் தரும் கருத்துரைகள்!

**இளங்கோ பதிப்பகம்**

மாயூரம்

## வெளிவந்துவிட்டது

வாழையும் தென்னையும் செழித்து வளரும் திருச்சி மாவட்டத்திலே, காவிரியாறு ஓடும் திருச்சிப் பகுதியிலே நூறு ஏக்கர் நிலம் டால்மியாவக்குச் சொந்தம்! தமிழகத்தின் மண் வடநாட்டானுக்குச் சொந்தம்! அந்த வடநாட்டுத் திமிங்கலத்தின் பணப்பெருக்கத்திற்குப் பயன்படுவது இந்நாட்டு மண் மட்டுமல்ல! நம் தோழர்களின் இரத்தமும் சிந்தப்படுகிறது, வியர்வையாக! ஆம்! இரண்டாயிரம் திராவிடத் தொழிலாளர்களின் வியர்வைத் துளிகள்தான் ஆண்டு ஒன்றுக்கு இருபத்தைந்து இலட்ச ரூபாயை வாரித் தருகின்றன அந்த வடவனுக்கு! இந்தச் சுரண்டல் ஒழிப்புக்குக் கால்கோல் விழாதான் டால்மியாபுரப் போராட்டம்! எங்கள் முதல் அடி டால்மியாபுரம்! கடைசி அடி டில்லியாகத்தான் இருக்கும்!

* * *

எனது தமிழன்னையைக் காக்கும் நேரத்தில் உலுத்தர்களின் கட்டாரி என் இதயத்தில் பாயலாம்! எதிர்பார்த்துதான் செல்கிறேன்!

கண்ணீர்ப் புகையைக் கண்டு கலங்கியா ஓடி விடுவேன்! "கல்லக்குடி வாழ்க, வாழ்க!" என்றுதான் முழக்கமிடுவேன்! மலபார் போலீஸால் மண்டை பிளக்கப்பட்டு இரத்தம் சொட்டினாலும் சோர்ந்துவிடமாட்டேன்! சொட்டிய இரத்தத்தால் அந்த சுரண்டல்காரனின் பெயரை அழித்து சொந்த நாட்டின் பெயரை எழுதுவேன்! துப்பாக்கியால் சுடப்பட்டு சுருண்டு விழ நேரிட்டாலும், "சுரண்டல் ஒழிக" என்றுதான் சொல்லுவேன்!

* * *

எந்த வடவரைக் கல் சுமக்கச்செய்து தலைவணங்கச் செய்தோமோ, அந்த வடநாட்டார் இன்று நம்மை வாட்டி வதைக்கின்றனர்! மறந்துவிடாதீர்கள்! இமயத்தில் கொடி பொறித்தோம் நாம், இன்றோ அவர்கள் கொடிகட்டி ஆள்கிறார்கள்! உங்களை விட்டுப் பிரியும் நேரத்தில் சொல்கிறேன் நினைவிருக்கட்டும்! கடமை செய்யத் தவறிவிடாதீர்கள்!

களம் நோக்கிச் செல்ல காளைகள் தயாராகிவிட்டனர்! நான் அவர்களை அழைத்துச் செல்லவேண்டும்! ஆசிகூறியனுப்புங்கள்! வாகைசூடிவர வாழ்த்தியனுப்புங்கள்!

களம்புகுமுன் கலைஞர் கருணாநிதி ஆற்றிய
கடைசி வீரஉரை

# "போர் முரசு"

விலை ரூபாய் ஒன்று

கிடைக்குமிடம்:

**மலர் நிலையம் - 133, பிராட்வே, சென்னை-1**